ராமன் கதையமுதம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 AUG 1955
MADRAS

562
3-55

துளஸி மானஸம் | கம்பன் பாற்கடல்

தி. சேஷாத்திரி M. A.,
(ஹிந்தி விரிவுரையாளர், மதுரைக் கல்லூரி, மதுரை.)

KA,R:9
55

[Price Rs. 1—8—0

ஸ்ரீ ராமன் கதையமுதம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 AUG 1955
MADRAS



துளஸி மானஸம் | கம்பன் பாற்கடல்

தி. சேஷாத்திரி M. A.,
(ஹிந்தி விரிவுரையாளர், மதுரைக் கல்லூரி, மதுரை.)

[...ghts reserved] [Price Rs. 1—8—0

பொருளடக்கம்

1. இரண்டே வார்த்தைகள் : ஆசிரியர். ii
2. முகவுரை : திரு. வெ. சந்தானம். iii

பால காண்டம்

1. நூலாரம்பம் 1
2. இராமன் பரம் பொருளே 10
3. இராமாவதார ரஹஸியங்கள் 16
4. அயோத்தியிலிருந்து மிதிலை வரை 27
5. பரம்பொருளும் திருவும் 36

அயோத்யா காண்டம்

6. மாறும் உள்ளமும் ஆற்றல் சால் அறிவும் 46
7. நாடு இழந்தது, காடு அடைந்தது 56
8. பரதன் பெருமை — I 66
9. பரதன் மஹிமை — II 78

ஆரணிய காண்டம்

10. பரதம்பதிகளை விரும்பிய மூவகையர் 88

கிஷ்கிந்தா காண்டம்

11. இராமனை அடைந்த துணை 100

சுந்தர காண்டம்

12. அனுமன் பெருமை 109

லங்கா காண்டம்

13. இலங்கைக்கு வந்த யோகம் 119
14. ஸ்ரீ ராமன் வெற்றி 128

உத்தர காண்டம்

15. ராம ராஜ்யம் 136
16. பின்னுரை. 143

இரண்டே வார்த்தைகள்

அறிவுப் பித்தர் ஸ்ரீ பி. மஹாதேவன் (மதுரைக் கல்லூரி முன்னாள் தலைவர்) ஜாடையாகச் சொன்னார்; கம்பர்—வான்மீகி சாரச்சுனே "தேர்த்தட்டு வார்த்தை"ப்புகழ் "வாரன்" R. நரசிம்மாச்சாரி அவர்கள் வற்புறுத்தினர்; காஞ்சி காமகோடி பீடாதிபதியின் அருள்; வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளின் ஆசீர்வாதம்: நான் துளசி ராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். கேட்ட ஒரு அன்பர் "புத்தகம் ஆக்கலாமே!" என்று முணுமுணுத்து வைத்தார். அவ்வளவுதான்; நான் எழுதினேன். ஜனதா பிரிண்டர்ஸ், திரு. A சீனிவாசன் அச்சடித்துப் புத்தக உருத் தந்தார். "தினமணி"ப் பொறுப்பாசிரியர் திரு. வெ. சந்தானம் அவர்கள் 'அறிமுக'மாகிற அணித்தேரில் ஏற்றி உங்களிடையே பவனி விட்டிருக்கிறார். அவர்களுக்கு எல்லாம் "வந்தனம்" என்று சொல்ல வந்தால் "வெறும் கிறுக்கன்!" என்பார்கள்.

கோஸ்வாமி துளசிதாசர் "ராம கதையைப் பாடுகிறேன். குணவான்கள் குற்றத்தையா பார்ப்பார்கள்?" என்றார். அந்தத் துணிச்சல் காற்று எனக்கும் அடித்துவிட்டது. கம்பன் வேறு விசிறி விட்டார். பிறகு என்ன, துணிச்சல் சூறாவளி தான்.

வாசகர்களே! வந்தனம். படியுங்கள். துணிந்து ஆதரியுங்கள். துளசிதாஸர் இன்னும் கொள்ளையாகச் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ராமன் அருளமுதத்தை வாரி வாரிக் கவிதைக் கோப்பைகளில் பெய்து நிரப்பியிருக்கிறார்.

ஊக்கம் தாருங்கள். அள்ளித் தருகிறேன்.

190, தெற்கு வெளி வீதி,
மதுரை.
2, அக்டோபர், 1954.

அன்பன்,
தி. சேஷாத்திரி

மும்மணிகளில் ஒன்று.

(திரு. வெ. சந்தானம், பொறுப்பாசிரியர், 'தினமணி' மதுரை.)

'கொளுத்து புராணங்களை' என்ற கோஷம் காதைக் கொளுத்தியது. புராணத்துறையில் பிரவேசிக்காது உறங்கிக் கிடந்த மனது சூடேறி விழித்தது; நெருப்பின் மீது பூத்திருந்த நீறு ஊதி அகற்றப்பட்டது போல! புராணங்களை ஆராயத் தொடங்கியது. விஷ்ணுபுராணம் இல்லாவிட்டால் உலக பூர்வோத்தரத்தை எங்கேயாவது ஆரம்பித்துச் சொல்ல, தொத்திக்கொள்ள ஒரு இடம் அகப்பட்டிருக்காது என ஸ்ரீமதி *பிளாவட்ஸ்கிபோல நானும் உணர்ந்தேன். அது மட்டுமா? இன்னும் சில உண்மைகளும் விளங்கின. வேதமும், உபநிஷத்துக்களும் எல்லா மதங்களுக்கும், தர்மங்களுக்கும் தாயாக விளங்குகின்றன. இவைகள் நல்ல அடிப்படையான தத்துவங்களை விவரிக்கின்றன. இந்த தத்துவங்கள் சில மகரிஷிகளுக்கே புரியவில்லையாம். சூதர் தோன்றி புராணங்சள் சொன்னார். தத்துவங்களின் சித்திரம் புராணம் என்பர். இதை இக்காலத்தில் பல பாகவதர்கள் மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றனர். அன்பையும், நன்னெறியையும் தான் இப் புராணங்கள் போதித்தன. நம் தேசத்தில் தோன்றிய, நாம் கொண்டாடுகின்ற பல மகான்களின் சரித்திரத்தைப் படித்தால் அவர்கள் இளமையில் ராமாயணம், பாரதம், பாகவதம் கேட்டதாகவும், அதனால் அவர்கள் வாழ்க்கை நாம் பூஜிக்கும் அளவுக்கு மாறியதாகவும், காண்கின்றோம். இந்தப் பெரியோர்களும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் புராணங்கள் மூலமும், பாடல்கள் மூலமும் அன்பு நெறியை

The Secret Doctrine: Madam H. P. Blavatsky

மட்டும் போதித்திராவிடில் மனிதர் தாங்கள் சகோதரர்கள், பந்தமுள்ளவர்கள் என்பதை மறந்திருப்பர். மனித இனம் பூண்டற்றுப் போய், உலகம் சூனியமாகி யிருக்கலாம். "எரித்தல்" கோஷம் இல்லையேல் இந்த உண்மைகளை நான் எங்கே கண்டிருக்கப் போகின்றேன். பிறகு புராண பிரவசனங்களுக்குப் போய் அன்பு நெறியை, பக்தி ரஸத்தை ஒவ்வொருவரும் விளக்கும் அழகில் ஈடுபட்டேன். அப்படிச் சென்ற இடத்தில் தான் மகாத்மா துளசிதாஸரின் பாத கமலங்களைக் காணும் பாக்யம் பெற்றேன்.

ராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். அதில் சேவையின், பரோபகாரத்தின் அம்சமாக ஸ்ரீ ஹநுமான் விளங்குகின்றார். மனித இனத்துக்குச் சேவை செய்வதே மோக்ஷ மார்க்கம் என சுவாமி விவேகானந்தர் கூறினர். பல வருஷங்கள் தவம் செய்த பின்னர் இந்த உண்மையை அறிந்ததாக சுவாமி கூறினர். இதை அழியா உண்மையெனக் கருத ராமாயணத்தில் ஆதாரம் கிடைக்கிறது. இதர கதாபாத்திரங்கள் பல வருஷ காலம் இருந்து பரமபதம் அடைந்ததாகக் கதை. ஆனல் ஹனுமான் மட்டும் சிரஞ்சீவியாக விடப்பட்டுள்ளார். சேவையின் உரு ஹனுமார். மனித இனம் வாழ சேவையே சிரஞ்சீவியாக இருக்க வேண்டுமென்பதைத் தானே இது குறிக்கிறது.

இத் தருணத்தில் காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியாரின் சேவைதான் ஞாபகம் வருகிறது. அவர் மட்டும் கட்டளையிட்டிருக்காவிட்டால் அடியேனுக்கு துளசிதாசரின் மகிமையைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. உலகத்தைத் தங்களுடைய ஒரு

நினைப்பின் மூலமே உய்விக்கச் செய்கிறார்கள் மகான்கள். அந்த வழியைச் சேர்ந்தவர் ஜகத்குரு. ஸ்ரீராமநவமி காலத்தில் கம்பன், வால்மீகி, துளசிதாசர் எழுதிய ராமாயணப் பிரவசனம் செய்யுமாறு ஆக்ஞாபித்தார். அதைச் சிரமேற்றாங்கி அன்பர் ஸ்ரீ தி. சேஷாத்ரி எம். ஏ. (மதுரைக் காலேஜ் ஹிந்தி ஆசிரியர்) இரண்டு வருஷம் துளசி ராமாயணப் பிரவசனம் நடத்தினார்.

துளசியை மகாத்மா என்பதா? கனவான் என்பதா அல்லது நம் மகாத்மா காந்தி சதா கேட்டு மகிழ்ந்த "வைஷ்ணவன் யார்?" என்ற கீதம் உணர்த்தும் உத்தம வைஷ்ணவன் என்பதா? என்ன சொல்லிப் புகழ்வது என்றே தெரியவில்லை. ஏனெனில் அவர் ராமாயணத்தை எழுதியுள்ள பாணி அப்படி இருக்கிறது. ஹரி-ஹர பேதம் கூடாதென்பதை மகாத்மா துளசிதாஸர் எவ்வளவு அழுத்தமாக ஸ்தாபிக்கிறார். பெண்கள் கதாபாத்ர வர்ணனை விஷயங்களில் முதல் தரமான கனவானைப் போல நடந்து கொள்கிறார். அங்கம், அங்கமாக பெண்ணை வர்ணிப்பதை துளசி ராமாயணத்தில் காணமுடியாது. அன்னையின் திருவடிதான் அவருக்குத் தெரியும். அழகைவிட அழகு என ஒரு வரியில் சொல்லி விட்டு மேலே கதையைத் தொடர்வார். இவ்வகையில் துளசிராமாயணம் ஈடற்றது. ஜகன் மாதாவை அங்கம், அங்கமாக வர்ணிப்பது என்னமோ எனக்கும் பிடிக்கவில்லை. பக்குவமற்றவர்களுக்கும் அன்னையென்றால், பெண்ணென்றால் ஒரு தூய உணர்ச்சி உண்டாகும் வண்ணம் அமைந்திருப்பது துளசிராமாயணத்தின் தனி விசேஷமாகும்.

கம்பன் வால்மீகி ராமாயணங்களின் காவிய, கருத்தழகுகளை எழுத இடம் போதா. அதே அழகுகளை துளசி ராமாயணத்திலும் காணலாம். "கண்ணுக்குவாயில்லை; வாய்க்குக் கண்ணில்லை. இருந்தால் தான் ஸ்ரீ ராமரின் அழகை பூர்ணமாகக் கூற முடியும்" என்று சீதையிடம் தோழி கூறுகிருள். இந்த மாதிரி பல காவிய நயங்களைத் துளசி ராமாயணத்தில் காணலாம். மனதைக் கவரும் நடையழகுகள் ஏராளம்.

கொஞ்சங்கூட எனக்கு ஹிந்தி தெரியாது. நடையழகையே ரசித்தேன் என்கிறேன். கருத்தழகை எவ்வளவு ரசித்திருப்பேன் என்பதைக் கூறத் தேவையில்லை. இதன் காரணமும், பெருமையும் ஸ்ரீ சேஷாத்ரியையே சாரும். இந்த துளசிராமாயணப் பிரவசனத்தில் அவர் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிருர். துளசி ராமாயணத்துடன், கம்ப ராமாயணத்தின் அழகான கட்டங்களையும் எடுத்துச் சொல்லுகிருர். இதனுல் பல அதிசய கருத்தொற்றுமைகளைக் காண முடிந்தது. கம்ப ராமாயணத்தை துளசி தாசர் கேட்டிருக்க வேண்டுமென அன்பர் ஸ்ரீ சேஷாத்ரி கருதுகிருர். இப்போது ஸ்ரீ சேஷாத்ரி வால்மீகி ராமாயணத்தையும் ஆராய்ந்து வருகிருர். இந்தப் போக்கில் அவர் பிரவசனம் "ராமாயணத் த்ரிவேணி"யாக அமைந்தால் ஆச்சரியமில்லை. இலக்கிய ரசிகர்களுக்கு தாங்கள் ஆராய்ந்து காண வேண்டிய சிரமம் வைக்காத இந்த சேவையை விட வேறு சேவை என்ன இருக்கமுடியும்? இவ்வளவு இளவயதில் இவ்வளவு துடிப்புடன் எடுப்பாக இவர் சொல்வது அவர் போற்றும் துளசியின் அருளால் தான் என நம்புகிறேன் நடுவில் கைவிடும் குணம் மஹாத்மாக்களுக்குக் கிடையா

தாகையால் தி. சேஷாத்ரியின் பிரவசனங்கள் இன்னம் மேன்மையாக இருக்கப் போகிறது என்று எதிர் பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லை.

அவர் செய்த பிரவசனத்தின் ஒரு சுருக்கம், அதாவது ஒரு மாதிரி. இந்தப் புத்தகம், கம்பனுடைய இராமனையும் வான்மீகியின் ராமனையும் கண்ட நீங்கள் துளசி காட்டும் ராமனையும் பார்த்தால் கொஞ்ச நஞ்சம் இருக்கும் சந்தேகங்களும் கண்டிப்பாய் நீங்கி விடும்.

துளசி காட்டிய ராமனை ஊன்று கோலாகக் கொண்டு அவருக்கு நவரத்ன ஆபரணங்களை அணிவது போல இதர, ராமாயண அழகுகளையும் சேர்த்து மக்களுக்குச் சொல்லும் 'பித்து'ப் பிடித்தவராகி வருகிறார், ஸ்ரீ சேஷாத்ரி. பக்தர்களை எல்லாம் ஆரம்பத்தில் நாம் பித்தர்கள் என்றுதான் கூறிவந்திருக்கிறோம். ஸ்ரீ சேஷாத்ரியின் சிந்தனை எல்லாம் துளசி ராமாயணத்தில் தான் லயித்துள்ளது என்பதை அவருடன் பழகிய நாங்கள் அறிவோம். அவரை விடாதீர்கள். துளசி ராமாயணத்தை முழுவதும் கேட்கத் தவறாதீர்கள்.

நமது பாரத தேசம் பழம் பெரும் நாடு. அதில் தோன்றிய மகான்கள் எவ்வளவோ பேர்கள். அந்த மகான்களின் அஸ்தி ஏதாவது ஒரு புண்ணிய நதியில் தான் கரைந்திருக்கும். உலகத்திலுள்ள எல்லாப் புண்ணிய நதிகளிலும் அஸ்தி கரைக்கப்பட்ட ஒரு பெரிய ராமபக்தன் இந்தியாவில் பிறந்தார். அவர்தான் மகாத்மா காந்தி. துளசி ராமாயணத்தைப் படித்த புண்ணியன் இதைவிடத் துளசி ராமாயணத்தின் ஏற்றத்தை எப்படிக் கூறமுடியும்? அவர் மனதில் உரு

எடுத்த ராமராஜ்யக் கருத்தே துளசி ராமாயண பாராயணத்தின் பலனாகும். ஏன் எனில் ராமராஜ்யம் பற்றி துளசி சித்தரித்திருக்கும் அழகே ஒரு தனி அழகு தான். இப்பேர்ப்பட்ட ஒரு காவியத்தை எடுத்துக்கூறும் பணியில் ஸ்ரீ சேஷாத்திரி ஈடுபட்டிருக்கிறார் என்பதை விட இவருக்கு வேறு உயர்வான பாராட்டு என்ன இருக்க முடியும்?

ஸ்ரீ ராமஜயம்.

ஆசாரியர்கள் பாதம் துணை.

"ராமசரிதமானஸம்"

(துளஸி ராமாயணச் சொற்பொழிவுகள்)

1. நூலாரம்பம்.

ஸ்ரீ துளஸிதாஸர் பக்த சிரோமணி. அவர் பிறந்த ஊரைப் பற்றியும் தேதியைப் பற்றியும் சந்தேகங்கள் உண்டு. என்றாலும் ராஜாப்பூர் என்ற ஊரில் ஆத்மாராம்—ஹுலசி என்ற பிராமண தம்பதிகளுக்கு மூல நக்ஷத்திரத்தில் குழந்தையாகப் பிறந்தார் என்பர். பிறந்த உடனேயே ஐந்து வயதுக் குழந்தைபோலவும் வாய் நிரம்பப் பல்லுடனும் 'ராமா' என்று சொல்லிக்கொண்டே பிறந்தார். தாயார் இந்த நிலையைப் பார்த்துக் கண்டிப்பாய்ப் பிள்ளையைத் தந்தை துறந்து விடுவார் என்று எண்ணித் தன் தோழியிடம் 'இதை எடுத்துக்கொண்டுபோய்விடு!' என்று சொல்லி விட்டாள். தாய் இறந்துவிட்டாள்.

'சுனியா' என்ற அந்தத் தாதி குழந்தையை ஹரிபுர் எடுத்துக்கொண்டு போனாள். அவளும் சில நாளில் இறந்து விடவே குழந்தை அகதியாயிற்று. பார்வதி தேவியே அவரைப் பாலூட்டி வளர்த்தாள் என்பர்.

சிவபிரானுடைய உத்தரவின்மேல் நரஹரியானந்தர் என்ற வைஷ்ணவர் குழந்தையை அயோத்திக்கு அழைத்துச் சென்று யக்ஞோபவீதம் பஞ்ச சம்ஸ்காரம் முதலியன செய்வித்தார். வித்தைகளும் சொல்லிக்கொடுத்தார். முதலில் ராம போலா என்ற பெயர் தரப்பட்டது பையனுக்கு.

பதினைந்து வருஷங்கள் வித்யாப்யாசம் வேதாத்யயனம் முதலியன செய்துவிட்டு ராம போலா வீட்டுக்குத் திரும்பினார். அங்கே ஒருவருமில்லை. பிறகு பாரத்வாஜ கோத்திரப் பிராமணன் ஒருவர் குடும்பத்துடன் வந்தார். தன் பெண்ணைத் துளஸிதாஸருக்கு மணம் செய்வித்துக் கொடுத்தார்.

மனைவியிடம் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார் ராம போலா. ஒருமுறை அவள், கணவன் வெளியே போயிருந்த சமயம் தந்தை வீட்டுக்குப் போய்விடவே ராமபோலா ஓடினார் மனைவியைத் தொடர்ந்து. இந்த அன்பினால் சலித்த அவள் 'இந்த அன்பு எலும்பும் மாமிசமும் உடைய தேகத்திற்கு என்று அறியீரா. இதில் பாதியை ஸ்ரீ ராமபிரானிடத்தில் செலுத்தினால் பிறவிப் பெருந்துயரைக் கடக்கலாமே! என்றாள். அப்பொழுது நீத்தார் குடும்பத்தை; துறவியானார். பிறகுதான் துளசிதாஸரானார்.

அவர் நேரிலேயே ஸ்ரீ இராமபிரானைத் தரிசித்தார் என்பர். ஸ்ரீ இராமபிரான் கதையைக் கேட்டும் எழுதியும் பிரவசனம் செய்து கொண்டும் தன் வாழ்நாளைக் கழித்தார்.

பல நூல்கள் எழுதியிருக்கிறார் துளசி. எல்லாம் இராமனைப் பற்றியதே. எல்லாவற்றிலும் சிறந்தது ராம சரித மானஸம் என்ற நூல். நானைப் பாடேன், இராமபிரானையல்லால் உண்டோ மற்றுமோர் தெய்வம் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர் அவர்.

அவர் தீர்த்த ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்திருக்கிறார். இராமேசுவரத்தைப் பற்றி எழுதியிருப்பதையும், தென்னாட்டில் வைஷ்ணவர்களிடையே வழங்கும் சூக்கும

மான அவதாரம் பற்றிய வியாக்கியானங்களை (விரிவுரைகளை) யும் அவர் நூலில் காண்பவர்கள் அவர் தென்னாடும் வந்திருக் கலாம் என்று நம்பலாம். கம்பனுடைய சில கருத்துக்களும் ராம சரித மானஸத்தில் காணப்படுகின்றன.

அவரை வால்மீகி அவதாரம் என்று சொல்லுவர், அனுமான் அனுக்ரஹத்தால் எழுதப்பட்டது இந்த நூல் என்றும் சொல்வர். மீண்டும் ஒரு சாரார் அனுமானே வான்மீகியைத் துளஸிதாஸராக அவதரிக்க வேண்டிக்கொண் டார் என்றும் சொல்வர்.

துளசி சிறந்த கவி. அதைவிடச் சிறந்த பக்தர். அதை யும் விடச் சிறந்த உபதேசகர். எல்லா விதமான போட்டி களையும் வேற்றுமைகளையும் அடக்கி ஹிந்து மக்களைப் பக்தி யின் அடிப்படையில் ஒன்று சேர்க்க அவர் செய்த முயற்சி மிகவும் போற்றற் பாலது. இராமன் கதையே அவர் தாம் உய்யவும் மக்கள் உய்யவும் கொண்ட சாதனமாம்.

அந்த இராம கதையை நாம் சுருக்கமாக அவர் சொன்ன விதமே கேட்கப்போகிறோம்.

சரஸ்வதி தேவியையும் விநாயகரையும் போற்றி ஸ்ரீ துளஸி தன் நூலை ஆரம்பிக்கிறார்.

பிறகு பவானி தேவி சங்கரன் இருவரையும் வேண்டு கிறார். இதன் மூலம் அவர் சிவத்வேஷத்தை நீக்க முயன் றிருக்கிறார். நூலிலேயே அடிக்கடி சிவத்வேஷம் கெடுதல்; இராம பக்திக்கு இடையூறு என்று வலியுறுத்துகிறார்.

முன்னுரையில் அவையடக்கம் கூறுமுன் அவர் குரு மார்கள், மற்ற தேவதைகள் எல்லோருக்கும் வணக்கம்

செலுத்துகிறார். அயோத்தி, தசரதன் எல்லோருக்கும் நமஸ்காரம் செய்கிறார்.

ஏன், போக்கிரிகளைக் கூடப் போற்றுகிறார்!

என்றாலும் முன்னுரைப் பகுதியில் அவர் குருவின் மஹிமை, ராம நாம மஹிமை, கதையின் மஹிமை இந்த மூன்றையும் பற்றிப் பேசுவதை மட்டும் நாம் கவனிக்கலாம்; அவையே மிகச் சிறந்த பகுதிகள்.

குருவின் பெருமை.

குருவின் மஹிமை சொல்லித் தீராது. குரு இல்லாத போனால், அவர் வழி சொல்லாத போனால் எப்படி இந்த யம வேதனையான துறையைத் தாண்ட முடியும்? என்கிறார் கபீர் என்ற பக்தர். 'மயக்கமாகிற மலை ஆறு, அஹங்கார மாகிற பெரிய தூண், காமம் குரோதம் என்கிற இரண்டு பர்வதங்கள், லோபம் என்கிற திருடர்கள் கூட்டம், மதம் மத்ஸரம் என்ற மேகம் பொழிய மாயை என்ற சுழற் காற்று வீசும்போது மனிதன் குருவின் துணை இன்றி எவ்விதம் வழி தெரிந்து நடந்து இந்த, யமக் கட்டத்தைத் தாண்டுவான்? என்று வியக்கும் அவர் இந்த உலகத்தையே கடிதமாக்கி, மரங்கள் எல்லாவற்றையும் எழுது கோலாகக் கொண்டு சமுத்திர நீரை மசியாக உபயோகித்து எழுதத் தொடங்கினாலும் குருவின் மஹிமை எழுதித் தீராது, என்கிறார்.

துளஸியோ இராமனே சொன்னாலும் குருவின் பெருமையை முற்றிலும் சொல்லி முடிவு கட்டமாட்டார், இயலாது என்று வியக்கிறார்.

அக்ஞானமாகிற கண் வியாதியை ஞானாஞ்சன சலாகை கொண்டு தீர்த்து வைப்பவன் குரு. அவனை நான் நமஸ்கரிக்கிறேன் என்கிறது வடமொழி சுலோகம்.

இதன் பெருமையை நன்கு உணர்ந்தவர் துளஸிதாஸர். பிறவிப்பிணி நீங்க உபதேசிப்பவன் நல்லாசான்; பரமன் சொரூபம் காட்டித் தருபவன் பரமாசாரியன். அவனை அடைய வழி சொல்பவன் சற்குரு.

அவன் பாதம் பணிந்து பாத தூளியைத் தலைமேல் தாங்கி நான் என் இராமாயணத்தை ஆரம்பிக்கிறேன் என்று துளஸி சொல்கிறார்.

குருவின் பாத தூளி அமிருதத்தின் வேர்; பிறவிப் பிணியை அகற்றும் மந்திரப்பொடி. சம்புவினுடைய உடலிற் பூசிய விபூதி போன்றது, நன்மை பயப்பது. குருவின் பாதங்களிலுள்ள நகங்கள் மணிகள். அவைகளின் ஜோதியினால் இதயம் இருள் நீங்கி ஒளி பெறும்.

பாத தூளியை அஞ்சனம் போல் கண்களில் அணிந்து கொண்டால் சித்தர்கள் போல் மறைந்தது வெளியானது எல்லாவற்றையும் பார்க்க இயலும்.

இவ்வாறு பலவாறு தாம் சொல்வது போதாது என்று இராமன், தசரதன் முதலியவர் வாயிலாகவும் குருவின் பெருமையைச் சொல்லி விளக்குகிறார் துளஸிதாஸர்.

குருவாகிறவர்கள் இந்தப் பெருமைக்கு உரித்தாகவும் வேண்டும், குருவுக்குத் தக்க மரியாதையையும் செலுத்தல் வேண்டும் சிஷ்யர்கள். குருவின் மஹிமையைச் சொல்லித் தம் குருவுக்கும் அஞ்சலி செலுத்திய பிறகு 'ராம நாம மஹிமை'யைச் சொல்லத் தொடங்கி அவர் சொல்வதாவது:—

ராம நாமம் இல்லாத கிரந்தம் ஒன்றுக்கும் உதவாது. சிறந்த கவியாக இருந்தாலும், அவன் எழுதிய காப்பியத்தில் காவிய அங்கங்கள் அலங்காரங்கள் எல்லாம் இருந்தாலும் ராமநாமம் இல்லாது ஒழியின் அக்காவியம் நல்ல அலங்காரம் செய்துகொண்டு (நல்ல) புடவை இல்லாமல் நிற்கும் பெண் போன்றாகிவிடும்.

இதற்கு மாறாக சிறந்த காவியப் பண்புகள் இல்லாத போனாலும் ராம நாமம் ஒரு காவியத்தில் இருக்குமானால் அதைப் பெரியவர்கள் ஆதரித்து ஏற்றுக்கொள்வார்கள்.

ராம நாம மஹிமையைப்பற்றி மேலும் கூறுங்கால் ராம நாமம் சந்திரன் சூரியன் நெருப்பு மூன்றுக்கும் ஆதாரமான எழுத்துக்களால் ஆனது. ரா, ம என்ற இரண்டு எழுத்துக் களும் மனோஹரமான எழுத்துக்கள். அவைகளை தேவநாகரி லிபியில் எழுதுங்கால் ஒன்று மற்ற அக்ஷரங்களுக்கெல்லாம் குடைபோன்றும் மற்றொன்று கிரீடம் போன்றும் எழுதப் படுகிறது.

இந்த இரண்டு எழுத்துக்களும் பக்தி என்ற பெண் ணுக்கு இரண்டு குண்டலங்கள் போன்றவையாம். பக்தி மழைகாலம் என்றால் துளஸிதாஸர் "சாலி" என்ற நெல் தானியம். இந்த இரண்டு எழுத்துக்களும் ஆவணி புரட்டாசி என்ற இரு மாதங்கள்.

தவிர நாமம் ஸகுணபிர்மம் நிர்குணபிர்மம் இரண்டுக்கும் நடுவே இருந்து இரண்டையும் காட்டிக்கொடுக்கும் 'துபாஷ்' போன்றது. உலகம் தாங்கும் ஆமை சேஷன் இவைபோல் அவை இந்த உலகத்தைத் தாங்குகின்றன.

இதன் பெருமையை மஹேசன் அறிவார். வால்மீகி அறிந்து மாற்றி ஜபித்து நன்மை பெற்றார், சுக சநகாதி முனிவர்கள் யோகிகள் சித்தர்கள் எல்லோரும் அறிவர். துருவன் ஜபித்தான்; பதம் பெற்றான். அனுமன் ஜபித்தான்; விட மனதில்லாமல் ஊன்றி நிற்கிறான். சாகும் காலத்தில் நாராயணா என்ற அஜாமிளன், ஆதிமூலமே என்றலறிய யானை, கிளிக்குப் பகவன் பெயரிட்டு உய்ந்த தாஸி எல்லோரும் இந்த நாமப் பிரபாவத்தால்தான் உய்ந்தனர்.

எவ்வளவு தூரம் சொல்வது? இராமபிரானே இதன் பெருமையைச் சொல்லமுடியாதே!

ராமன் பெரியவரா, நாமம் பெரியதா? என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முற்படுவது அபராதம் என்றாலும்,

நாமமே பெரிது.

இராமன் மிகவும் கஷ்டப்பட்டு மனித லீலைகள் புரிந்து பக்தரைக் காப்பாற்றினான், ராக்ஷஸர்களை அழித்தான்.

நாமமோ சற்றும் கஷ்டமின்றி பல பக்தர்களைக் காப்பாற்றி கலிமலதோஷங்களை எல்லாம் அழித்து வருகின்றது.

அவர் ஒரு பெண்ணை உய்வித்தார். நாமம் பலரை உய்விக்கிறது. அவர் பவ(சிவ)னுடையவில்லை முறித்தார். நாமம் பவபயத்தையே முறிக்கிறது. (பவம்=உலகம், பிறவி)

அவர் தண்டகவனத்தில் புகுந்து அதைப் பாவனமாக்கினார். நாமம் மனிதர் மனமாகிற பயங்கர வனத்தைத் தனியே புகுந்து புனிதமாக்குகிறது!

“இவ்வாறெல்லாம் புனிதமான ராமநாமமாகிற ஒளியை நாக்காகிற வாயிற்படியில் வைத்துவிடு. உள்ளேயும் வெளியேயும் ஒளி கிடைக்கும்” என்கிறார் துளஸிதாஸர்.

கபீரும் " நானும் எவ்வளவோ ரஸாயனம் செய்தேன். நாமம் போன்ற ஒரு பொருள் வேறு கிட்டவில்லை, சற்று உடலில் பட்டால் போதும், உடல் பொன்மயமாகிறது" என்றும்,

இந்த ராமநாமமாகிற மணியைக் கிடைத்தால் வைத்துக் கொள்ளுங்கள் பத்திரமாய். விலை உயர்ந்த மணி, என்றும் சொல்லி இதன் பெருமையை வலியுறுத்துகிறார்.

நூலின் பெயர்.

பிறகு ராமசரிதமானஸம் என்ற பெயர் ஏன் வந்தது என்று சொல்லத் தொடங்குகிறார்.

இந்தச் சரிதத்தை முதலில் சிவபிரான் செய்து தன் மனதில் வைத்திருந்து சமயம் பார்த்து உமாதேவிக்குச் சொன்னார். அவரேதான் இதற்கு இந்தப் பெயரையும் இட்டார்.

அது மானஸம் என்ற பெயருக்கு ஏற்றதுதான்

ஏன் எனின்,

ஏழு காண்டங்களும் ஏழு படிக்கட்டுகளாம். சிவன் உமை; சிவன் காகுபசுண்டி; காகுபசுண்டி — கருடன்; யாக்ஞவல்கயர் — பாரத்வாஜர் இவர்களிடையே நடந்த நான்கு சம்வாதங்களும் நான்கு துறைகளாம். மற்றும் உவமைகள் அலைகள்; சௌபாயீ என்ற பாவினம் தாமரை இலைகள். சங்கஸ், ஸோரட்டா என்ற பாவினங்கள் பல கமலங்கள். அவைகளின் பொருளே மகரந்தத் தூள்கள்... என்று உருவகத்தைத் தொடர்ந்து முடிக்கிறார்.

அந்த மானஸத்திலிருந்து சரயு, கங்கை, சோணை என்ற நதிகள் கிளம்புகின்றன. அதைப்போல கதையும் பக்தியும் வைராகயமும் ஏற்படும் இந்த மானஸரோவரிலிருந்து.

இதைப் பாடுகிறவர்கள், கேட்கிறவர்கள் சொல்கிறவர்கள் எல்லாம் இதற்கு அதிகாரிகள்.

இதில் ஸ்நாநம் செய்ய, ஈடுபட்டு இன்பம் பெற அன்னங்களே தான் வரும். காக்குக் கொக்கு போன்ற பக்ஷிகள் வரா. அவைகளுக்கு இங்கே ஆகாரம் இல்லை.

பிறகு ராமசரிதமானஸம் எழுதத் தொடங்கிய காரணத்தையும் சொல்கிறார்.

தன் இன்பத்துக்காக என்பது அவர் காட்டும் காரணம்

தவிரவும் பக்தனுக்காக பிரும்மா வீட்டைவிட்டு வரும் ஸரஸ்வதியை ராமசரிதமாகிற ஸரஸில் நீராட்டாதபோனல் அவளுக்கு உற்ற மனத் துயரும் உடல் களைப்பும் தீராது. அதற்காக ஹரிகதை எழுதப்பெறுகிறது.

சிறந்த லக்ஷியங்களுக்கு எடுத்துக்காட்டாக இராமன் கதையையன்றி எதை எழுத முடியும்?

வாணி சுத்தமடையவும், உலகத்துக்கு நடையின் இலக்ஷியம் தெரியவும் பக்தி பரவவும் இந்த இன்பம் பயக்கும் கதை எழுதப்பெறுகிறது.

2 இராமன் பரம் பொருளே.

கம்பன் இந்த விஷயத்தை அறுதியிட்டுக் கூறியிருக்கிறார் "இப்பரிசணி நகர் உறையும் யாவரும் மெய்ப்புகழ் புனைதர, இளைய வீரர்கள் தப்பற அடிநிழல் தழுவி ஏத்துற முப்பரம் பொருளுக்கும் முதல்வன் வைகுறாய்," என்ற இடத்தில் கவி வாக்காலும், மற்றும் வசிஷ்டர் கவந்தன் முதலிய பலர் வாக்காலும் இதை நிலைநிறுத்தியிருக்கிறார்.

துளஸி ஒரு புராணக் கதையின் நிலைக்களத்தில் இந்த விஷயத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

பிரயாகையில் மாசி மாதத்தில் அநேக ரிஷிகள், முனிவர்கள், யோகீசுவரர்கள் கூடுவது வழக்கம். மாதம் முழுவதும் திரிவேணியில் ஸ்நாநம் செய்து, தங்களுக்குள் பரம்பொருள் பற்றிய ஆய்வுரைகளைப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போவது வழக்கம். அப்படி ஒருமுறை யாக்ஞவல்க்யர் ஸ்நாநம் முடித்துவிட்டுப் புறப்பட்ட சமயம் பரத்வாஜ முனிவர் அவர் காலைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினர். ஒரு சந்தேகம் என்றார்

"ஸந்தத ஜபத சம்பு அவிநாசீ
சிவ பகவான ஞான குண ராசீ
ராமகவனு பூச்செள(ம்) தோஹீ(ம்)
கஹஹா புஜாய கிருபாநிதி மோஹி(ம்)

சிவன் விடாமல் துதிக்கிறாரே! சிவனும் அறிந்தவராயிற்றே. அந்த சிவன் துதிக்கும் ராமன் யார்? தயவு செய்து, கருணைக் கடலே, சொல்ல வேண்டும்.

ஏக ராம அவதேச குமாரா, தினகர சரித விதித
நாரி விரஹு துகு லஹேஉ அபாரா, [சம்சாரா
பயஉ ரோஷ ரண ராவண மாரா.

ஒரு இராமன் அயோத்தித் தோன்றல். அவன் சரிதம் உலகம் அறியும். மனைவி பிரிந்தாள்; அபாரத் துக்கம் கொண்டான் கோபம் வந்தது, இராவணனை மாய்த்தான்.

ப்ரபு ஸோயி ராம கி அபர கோஉ ஜாஹி ஜபத
திரிபுராரி |
ஸத்ய தர்ம சர்வக்ஞதும கஹஹு விவேக விசாரீ ||

அந்த இராமன்தான் பரம்பொருளா அல்லது சம்பு துதிக்கும் இராமன் வேறு? உண்மை தர்மத்தை அறிந்த பேரறிவாள, தயவு செய்து சொல்லவேண்டும்! என்றூர்.

யாக்ஞவல்க்யர் சிரித்துவிட்டு, "நான் சிவன் வாயிலாகவே சொல்கிறேன்" என்று தொடங்கினர்.

சதியின் மோகம்.

ஒரு முறை சம்பு அகஸ்தியரிடம் சென்று இராமன் குணத்தைப் பற்றிப் பேசி அளவளாவினர். தேவியான சதியும் உடன் இருந்தாள். பேசிவிட்டு வரும்போது காட்டில் மனைவியை இழந்து தம்பியுடன் துயர் உழக்க ஏகும் இராமனைக் கண்டு தரிசன லாபத்தால் உள்ளம் நெகிழ்ந்தார். பார்வதியின் மனதில் எழுந்தது சந்தேகம்.

ப்ரஹ்ம ஜோவியாபக விரஜ அஜ, நிர்குண அகல அபேத |
ஸோ கி தேஹ தரி ஹோயி நர ஜாஹி ந ஜானத வேத. ||

என்ன? ஊனும் உணர்வுமாய் அண்ட சராசரங்கள் எங்கும் ஊடுருவி நின்று, என்றும் அழியாததாயும், பிறவாததாயும்

நிர்க்குணமாயும், மாற்றம் சலனம் அற்றும் விளங்கும் பரப் ரும்மமா, வேதமே அறியாத பரம் பொருளா இப்படி சரீரம் எடுத்து வந்தது? அது எப்படி முடியும்?

அல்லது உருவம் கொண்டுள்ள விஷ்ணுதான் என்ருல் அவர் எல்லாம் அறிந்தவராயிற்றே. அவர் இப்படி ஒன்றும் தெரியாதவன்போல் நிஜமாகவா அழுவார்?

சிவன் தாக்ஷாயணி உள்ளத்தை அறிந்துகொண்டார். உபதேசம் செய்தார். அவளுக்குச் சந்தேகம் தெளியவில்லை. "சரி நீ சென்று பரீக்ஷை செய்" என்று சொல்லிவிட்டு அவர் ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்தார்.

சதி செய்த பரீக்ஷை.

புனி புனி ஹ்ருதய விசாரிகரி தரி சீதாகர ரூப |
ஆகே ஹோயி சலி பந்த் தேஹி ஜேஹி ஆவத நரபூப ||

மீண்டும் மீண்டும் யோசித்து சீதையின் உருவை எடுத்தாள் சதி. மேலே சென்று இளவரசர்கள் வரும் வழியில் எதிரே நின்ருள். லக்ஷ்மணன் சந்தேகப்பட்டான். ஆனுல் இராமனே, அவளை நமஸ்காரம் செய்து, "கஹாம் விருஷ கேது? விபின அகேலி பிரஹூ கேஹி ஹேது?" இடபக் கொடியோன் எங்கே? ஏன் தனியாகச் சுற்றுகிருய் காட்டில்? என்ருன். சதி நடுங்கிவிட்டாள். ஆனுல் இராமர் அத்துடன் விடாமல் அவளுக்கு ஒரு தோற்றத்தையும் காட்டுவித்தார். பல தேவர்கள் மும்மூர்த்திகளுள்பட பல வேஷத்தில் தோன்றி இராமனுக்குப் பணிவிடை செய்வதை அவள் படம் போல் கண்டாள். இராமன் சீதையுடன் இருந்ததையும் கண்டாள். இராமன் கருணையால் மாயைத் தோற்றம் நீங்கி

யதும் சம்புவிடம் வந்தாள். உண்மையைச் சொல்லாமல் பரீக்ஷித்துவிட்டேன் என்றுமட்டும் சொன்னாள்.

சதி தேகம் அழிதல்.

சிவபிரானுக்குத் தெரியாதா? அவர் சீதை உரு எடுத்த இந்த சதியின் தேகத்தைத் தாம் எப்படி மனைவியுடையதாகக் கொள்வது? கொண்டால் இராமன் மாட்டுக்கொண்ட பக்தி என்ன ஆகும்? என்று மனம் வருந்தி ஒதுங்க ஆரம்பித்தார். சதிக்கு வந்தது கஷ்டம். நல்லவேளையாக அந்தச் சமயம் தக்ஷன் யாகம் செய்யவே நான் போகிறேன் என்றாள். சிவபிரான், கூப்பிடாத இடத்துக்குத் தந்தை வீடானாலும் போகக்கூடாது என்று சொன்னார். தாக்ஷாயணி பிடிவாதம் பிடித்தாள், சென்றாள். இந்தக் கதையிலும் துளஸி பெண் களுக்கேற்ற சில உபதேசங்களைச் சொல்கிறார்; சிவ நிந்தை செய்கிறவர்களைக் கண்டித்துப் பேசுகிறார். தகப்பன் வீட்டில் தானும் அவமானம் அடைந்து கணவன் நிந்தையும் கேட்ட வுடன்

ஸந்த சம்பு ஸ்ரீபதி அபவாதா |
ஸுநிய ஜஹம் தஹம் அஸ பர்யாதா ||
காடிய தாஸு ஜீப ஜஸு பஸாயீ |
சிரவண மூந்தி நது சலிய பராயீ ||

சாதுக்கள் சிவன் விஷ்ணு இவர்கள் நிந்தையை யாராவது செய்தால் கேட்பவர் செய்யவேண்டியது இரண்டில் ஒன்று தான். நிந்திக்கிறவன் நாக்கை முடிந்தால் பிடுங்கிவிடு, இல்லை எனின் காதை மூடிக்கொண்டு ஓடிவிடு! என்று சொல்லிய சதி சிவத்ரோஹியால் தரப்பட்ட சரீரம் வேண்டாம் என்று யோகாக்னியால் தன் உடலத்தை எரித்துக்கொண்டாள்.

பார்வதி பரிணயம்.

வீரபத்திரன் வந்து தக்க யாகத்தை அழித்துவிடுகிருன். சதிதேவி பர்வதராஜஞன இமவானுக்கும் மேனுதேவிக்கும் புத்திரியாக அவதரித்து வளருகிருள். ஒரு நாள் நாரதர் வந்து பெண்ணைப் பார்த்து, எல்லாம் நன்மைதான் ஆனல்

யோகீ. ஜடில அகாம மன, நக்ன அமங்கல வேஷ
அஸ் ஸ்வாமி யஹி கஹம் மிலிஹி பரீ ஹஸ்த அஸரேஷ்

யோகி, ஜடை வைத்தவன், ஆசையற்ற மனதுள்ளவன், உடையில்லாதவன், அமங்களமான வேஷம் கொண்டவன் அப்படிப்பட்ட கணவன் அல்லவா இவளுக்குக் கிடைப்பான் என்று கைரேகை சொல்கிறது என்ருர்.

மேனை நடுங்கினுள். ஆனல் நாரதர் மீண்டும், "இந்தக் குணங்கள் உள்ளவர் சிவபிரான். கெட்ட குணங்களும் அவரை அடைந்து பூஜைக்கேற்றவையாக ஆகிவிடும். அவரை அடையத் தவம் செய்!" என்று பார்வதிக்குச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

பார்வதி தவம் செய்தாள். பரமசிவன் மகிழ்ந்தார். பிர்மா மகிழ்ந்தார். பரமசிவன் சப்த ரிஷிகளை அழைத்து, "பார்வதியின் அன்பைச் சோதித்து வாருங்கள்," என்ருர் அவர்கள் சென்று, "நாரதர் சொன்ன சொல் கேட்டு எந்தக் குடும்பம் வாழ்ந்தது? அழகற்ற சிவனைவிட்டு அழகின் தெய்வமான விஷ்ணுவை ஏற்றுக்கொள்" என்றெல்லாம் சொல்லிக் கலைக்க முயன்றனர். பார்வதியோ, "நான் சம்பு வையே வேண்டுகின்றேன் .அவர் குணத்தைக் கண்டு எப்படி

மாறுவேன்?'' என்று திடமாகச் சொல்லிவிட்டாள். அவள் உறுதியைக் கண்ட ஏழு முனிவர்களும் மகிழ்ந்து அவள் தந்தையிடம் சென்று சொல்லியவண்ணம் இமவான் வந்து தன் மகளை வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

இதனிடையில் தாரகாசூரன் உலகத்தைத் துன்புறுத்திக் கொண்டிருந்ததால் தேவர்கள் சிவன் மனதில் சலனம் ஏற்படுத்த மன்மதனை அனுப்பினார்கள். மன்மதன் சிவன் கோபத்தில் எரிந்து சாம்பரானான். அவன் மனைவி ரதி அழுதாள். சிவபிரான் அவளுக்குக் கருணைபுரிந்து மன்மதனை அநங்கனுக்கிஎழுப்பித் தந்தார். பிறகு தேவர்கள்வார்த்தைக்கு இணங்கி மணம் செய்துகொள்ளத் தயாராகினார்.

துளஸிதாஸர் மாப்பிள்ளையான மகேசுவரனையும், அவர் தோற்றம், பரிவாரங்கள் முதலியவற்றின் அழகையும் நகைச் சுவை தோன்ற வருணிக்கிறார்.

பார்வதியின் திருமணம் நடக்கிறது. தேவர்கள் பூமாரி பொழிகின்றனர்.

பிறகு மேனை கணவன் வீடு செல்லும் பெண்ணுக்கு உபதேசம் செய்கிறாள்.

மீண்டும் சதி உமாவாகவும் பார்வதியாகவும் சிவபிரானை அடைந்தபிறகு ஒரு முறை இருவரும் ஆலமரத்தடியில் அமர் கின்றனர்.

தேவி, இராமன் கதையையும், உண்மையையும் விரிவாகச் சொல்லவேண்டும் என்று கேட்கிறாள். அதற்கிணங்க, பரமசிவன் இராமன் அவதாரத்திற்குக் காரணங்களைச் சொல்லிவிட்டு இராமன் கதையைச் சொல்லத் தொடங்குகிறார்.

3 இராமவதார ரகசியங்கள்.

உமாதேவி கேட்ட கேள்விக்குப் பதிலாக பரப்பிர்மம் இராமவதாரம் எடுக்க நேர்ந்த காரணங்களை விவரிக்கத் தொடங்குகிறார் சிவபிரான்.

தர்மம் அழிந்து அசுரர் அதிகரித்து அநீதிகளைப் புரிந்து அக்ரமம் செய்யும்போது பகவான் அவதாரம் செய்து தர்மத்தை நிலைநாட்டுகிறார். அவர் தம் புகழ் பரவப் பல செயல்களைச் செய்கிறார். அவர் கீர்த்தியைப் பாடி மக்கள் உய்கின்றனர். அப்படியேதான் இராமவதாரமும் நிகழ்கிறது.

அப்படிப்பட்ட இராமவதாரங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன.

பிராமணர் சாபத்தால் துவாரபாலர்களான ஜயவிஜயர்கள் மூன்று முறை அசுரர்களாகவும், ராக்ஷஸர்களாகவும் ஜென்மம் எடுத்தனர். கடைசி முறையில் கும்பகர்ண இராவணர்களாகப் பிறந்தபோது அவர்களை அழிக்க பகவான் இராமனானார்.

மற்றொரு கல்பத்தில் ஜலந்தரன் கொட்டத்தை அடக்க, அவன் மனைவியிடம் பெற்ற சாபத்தால் அவர் இராமவதாரம் எடுத்து இராவணனாகப் பிறந்த ஜலந்தரனை அழித்தார்.

'மீண்டும் ஒரு கல்பத்தில் நாரதர் சாபத்தால் விஷ்ணு இராமனானார்' என்றார் சிவபிரான். பர்வதகுமாரிக்கு ஆச்சரியம் மேலிட்டது. நாரதர் சாபமா?

நாரதர் கர்வம்

நாரதர் ஒருமுறை ஹிமகிரியில் உள்ள ஒரு குகைக்குச் சென்றார். அங்கே சென்றதும் அவருக்கு ஏற்பட்டுள்ள

சாபத்தின் பலன் நீங்கிற்று. அவர் அங்கே தங்கி சமாதியில் நின்று தவம் செய்ய ஆரம்பித்தார். இந்திரன் வழக்கம் போல் பயங்கொண்டு காமனை அனுப்பி அவர் தவத்தைக் கலைக்க முயன்றான். காமன் கைவரிசை அவரிடம் பலிக்க வில்லை. அவன் தோற்றுப்போய்விட்டான்.

இந்த வெற்றியைக் கண்ட நாரதருக்கு கர்வம் தலைக்கு ஏறிவிட்டது. உடனே அங்கும் இங்கும் சென்று தன் வெற்றியைத் தானே சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார். அப்படியே அவர் சிவனிடமும் சென்று பெருமை அடித்துக் கொண்டார். சிவன் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்து விட்டு 'நாரதரே இந்த விஷயத்தைமட்டும் விஷ்ணுவிடம் சொல்லாதேயும்' என்று, புத்திமதி சொன்னார்.

நாரதர் கேட்கிறவராயில்லை. நேரே விஷ்ணுவிடம் சென்றார். அவரும் 'வாரும் காமனை வென்ற வீரரே!' என்று அழைக்க உச்சி குளிர்ந்த நாரதர் தன் புகழைப்பற்றியும் வெற்றியைப் பற்றியும் ஒரு காலக்ஷேபமே செய்துவிட்டார். சொல்லிவிட்டு அவர் சென்றவுடன் விஷ்ணு, 'சை இது பொல்லாதது; இந்தக் கர்வம் அவரை அழித்துவிடும். அதை அழித்தாகவேண்டும்' என்று முடிவு செய்தார்.

நாரதருக்கு ஏற்பட்ட ஆசை

நாரதர் திரும்பி வரும்போது வழியில் ஒரு அழகிய பட்டணத்தைக் கண்டார். அதன் அரசரிடம் சென்றார் அரசன் தன் மகளான விசுவயோகினியை அழைத்து நாரதரிடம் காட்டி 'இவள் குணதோஷங்களைச் சொல்லவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான்.

பெண்ணைக் கண்ட நாரதர் பித்தன்போலானார். இவளை அடையாததொரு ஜன்மமா என்று எண்ணி எதையோ சொல்லிவிட்டு நேரே விஷ்ணுவிடம் சென்று 'எனக்கு அழகிய உருவம் வேண்டும். என் ஆசைதீர எனக்கு நன்மை ஏற்படும் வண்ணம் தாங்கள் அனுக்ரஹம் புரியவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். பகவானும் அப்படியே தந்தேன் என்று சொல்லிவிட்டு மறைந்தார். நாரதர் தனக்கு அழகான உருவம் கிடைத்ததாக எண்ணித் திரும்பிவந்தார். பெண்ணுக்கு சுயம்வரம் நடந்துகொண்டிருந்தது,

கர்வ பங்கம்

நாரதரும் சென்று சபையில் அமர்ந்தார். அவருக்கு நிச்சயமான நம்பிக்கை. நமக்குத்தான் பெண் கிடைப்பாள் என்று. அதனால்தான் பக்கத்தில் அமர்ந்திருந்த இரண்டு சிவகணங்கள் ஏன் சிரிக்கின்றனர் என்று எண்ணக்கூடவில்லை. அவர் ஆசை பங்கமுற அந்த அரசகுமாரி மாலையை வேறு யாருக்கோ சூடிவிட்டாள். கோபமடைந்த நாரதரிடம் பக்கத்தில் இருந்த சிவகணங்கள் 'சென்று தங்கள் முகத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்றார்கள்.

நாரதர் கோபம்

நாரதர் சென்று ஜலத்தில் பார்த்தார், உடல் மனித உடல், முகம் குரங்கு முகம். கொடுத்தார் அந்த சிவகணங்களுக்கு சாபத்தை. பிறகு ஓடினார் விஷ்ணுவைத் தேடிக்கொண்டு.

மாயாபதி மாயையுடன் எதிரே வந்தார். பக்கத்தில் அதே விசுவமோஹினி 'எங்கே ஓடுகிறீர்? என்ன கவலை?'

என்றார் விஷ்ணு. கோபம் வந்தது முனிவருக்கு. 'விஷ்ணு நீர் பொறாமைக்காரர்! வஞ்சனைக்காரர். பிறர் வாழப் பொறு தவர். பாற்கடல் கடைந்துவந்த விஷத்தை ஹரனுக்குத் தந்து லக்ஷ்மியை நீர் கொண்டீர். உமக்குமேலே சுவாமி இல்லை என்று எண்ணம். பிடியும் சாபத்தை! எனக்குத் தந்த மனித உருவத்தை நீர் எடுத்துக்கொண்டு,விரஹதாபம் பெற்றுத் திரியக்கடவீர். குரங்குகள் உதவியினால்தான் உம் சங்கடம் தீரும்!' என்று தந்தார் சாபம்.

விஷ்ணு பகவான் முறுவலுடன் சாபத்தை ஏற்றுக் கொண்டார்.

நாரதர் பச்சாத்தாபம்

பிறகுதான் நாரதர் தான் செய்த தப்பிதத்தை உணர்ந் தார். 'தெய்வமே! செய்யக்கூடாததைச் செய்து விட்டேனே! மன்னிப்பு உண்டா', என்று வருந்தினார்.

விஷ்ணு பகவான் அவரை ஆசுவாசப்படுத்தி 'எல்லாம், என் இஷ்டப்படிதான் நடக்கும். நீர் சிவன் பெயரை ஜபியும். பாவம் தீரும்' என்று அனுக்ரஹித்து விட்டுச் சென்று விட்டார்.

அப்படி ஒரு முறை பரமன் இராமாவதாரம் செய்தார்.

நான்காம் காரணம்

ஒரு முறை ஸ்வாயம்புவ மனுவும் சதரூபா என்ற அவர் தேவியும் தவம் செய்தனர். தவத்துக்கு மகிழ்ந்த விஷ்ணு எதிரே வந்து 'என்ன வரம் வேண்டும்?' என்று கேட்க அவர்

கள் தங்களைப் போன்ற ஒரு குமாரன் வேண்டும் என்றார்கள். 'நானே அவதரிக்கிறேன், நீங்கள் அயோத்தியில் வாழுங்கால்!' என்று சொன்னார் ஸ்ரீ விஷ்ணு.

அப்பொழுது இராவணன் கும்பகர்ணன் யார் தெரியுமா?

கேகய தேசத்தில் சத்யகேது என்ற சிறந்த குணமுள்ள அரசனுக்கு பிரதாபபானு அரிமர்த்தனன் என்ற இரண்டு பிள்ளைகள் உண்டு. காலக்ரமத்தில் தந்தை இறந்த பிறகு பிரதாபபானு அரசனானான். வீரம் நிறைந்த அவன் பல வெற்றிகள் கண்டு ஆண்டு வரும் ஒரு நாள் வேட்டைக்குச் சென்றான்.

ஒரு காட்டுப் பன்றி அவனை ஏமாற்றி வெகு தூரம் அழைத்துச் சென்று விட்டது. பரிவாரங்களிடமிருந்து பிரிந்த அரசன் அங்கே ஒரு குடிசையைக் கண்டு உள்ளே சென்றான். அங்கே இவனுடைய பகையரசன் ஒருவன் முனிவர் வேடத்தில் ஒளிந்து மறைந்திருந்தான். அவன் இவனை அடையாளம் கண்டு கொண்டான். அரசனுக்குத் தெரியவில்லை. எளிதாக முனிவன் இவன் பெயர் முதலியவற்றைச் சொல்லி ஏமாற்றித் தன் வசம் செய்து கொண்டான். தான் ஒரே முறை பிறந்தவன் என்றும் சிருஷ்டி காலத்திலிருந்து இருந்து வரும் காரணத்தால் ஏகதனு (ஒரே உடல்) என்ற பெயர் கொண்டதாகவும் எல்லாம் சொல்ல அரசன் மயங்கித் தன் நன்மைக்கு ஏதாவது வகை அருள வேண்டும் என்று வேண்டினான்

"பிராமணர்கள் ஆசீர்வாதத்தால் தான் எல்லா நன்மையும் கிடைக்கும். பிராமணர்கள் திருப்தியடைய போஜனம் செய்விப்பது போன்ற லகுவான வழி வேறு இல்லை. நானே

உன் சமயற்காரனுக இருந்து சமைத்துப் போட்டுப் பிராமணர்களைத் திருப்தி செய்விக்கிறேன்'' என்று முனி சொன்னுன்.

அரசன் திருப்தியுடன் தூங்கி விட்டான். பன்றியுருவத்தில் வந்த அசுரன் காலகேதுவின் உதவியால் அரசனை இரவோடு இரவாய் அரண்மனைக்கு அனுப்பினுன். சமையற்காரனையும் கொணர்ந்து விட்டான். தான் சொல்லியபடி சமையற்காரன் வேஷத்தில் முனிவன் போய்ச் சேர்ந்தான். அரசன் ஆனந்தமாகப் பிராமணர்களைப் போஜனத்துக்கு வரித்தான். சமையற்காரன் நரமாமிசத்தைச் சமைத்துப் போட்டான்.

பிராமணர்கள் சாப்பிடத் தொடங்கிய சமயம் அசரீரி நரமாமிசம் என்று எச்சரித்தது. பிராமணர்கள் சினந்து நீ குடும்பத்துடன் அரக்கனுகக் கடவாய் என்று சாபம் தந்தனர்.

மீண்டும் அசரீரி .அரசன் குற்றமில்லை என்றும் சொல்ல பிராமணர்கள் சினம் தணிந்தாரேனும் ஒன்றும் செய்ய இயலாமல் சென்று விட்டனர்.

இராவணன் பிறந்தான்

பிராமணர்கள் சாபம், அந்த அரசன் புலஸ்திய குலத்தில் இராவணனுகப் பிறந்தான். அரிமர்த்தனன் கும்பகர்ணனுகப் பிறந்தான். தர்மருசி என்ற அவன் நன்மந்திரி விபீஷணனுன். அவர்கள் நல்லவர்களாயிருந்தபடியால் புலஸ்திய குலத்தில் ஜன்மம் கிடைத்தது. என்ருலும் ஆசைக்காரணத்தாலும் அசட்டுத்தனத்தாலும் பிராமண சாபம் ஏற்படவே நீச அரக்கர்களாகப் பிறந்தனர்.

தவமும் வரம் பெற்றதும்

பிறகு மூவரும் அகோரமாகத் தவம் புரிந்தனர். பிர்மா வரம் அருள வந்தார். இராவணன் குரங்கு மனிதர் இரண்டு நீங்கலாக மற்றவர் எவராலும் சாவு ஏற்படக்கூடாது என்று கேட்டான். கும்பகர்ணன் நித்யத்துவத்தைக் கேட்க ஆசை கொண்டு சரஸ்வதி அருளால் நித்திரையைப் பெற்றுக் கொண்டான். விபீஷணன் மட்டும் பரமனுடைய பக்தியை வரமாகப் பெற்றான்.

அவர்கள் செய்த அக்கிரமம்

இராவணன் திக் விஜயம் செய்தான். இலங்கையைத் தலைநகரமாக்கிக் கொண்டான். மயன் மகளை மணந்து மேகநாதனைப் பெற்றான். தேவலோகம் மனிதலோகம் எல்லாம் அலறி நடுங்க ஆட்சி புரிந்தான். நல்ல காரியம் ஒன்றுகூட நடவாமல் அவன் வீரர்கள் அக்கிரமம் புரியத்தொடங்கினர். தேவர்கள் தங்கள் பதவியிழந்தனர். கஷ்டம் தாங்காமல் போயிற்று.

பூமிக்குக் கிடைத்த உறுதி

பூமிதேவி நடுங்கி வருத்தம் தாளாமல் தேவர்களிடம் சென்றாள். தேவர்கள் அவளையும் அழைத்துக் கொண்டு பிரும்மாவிடம் சென்றார்கள். பிரும்மா எல்லோரையும் அழைத்துக்கொண்டு சிவனிடம் சென்று என்ன செய்வதென்று யோசித்தார். விஷ்ணுவை வேண்டுவோம் என்று அவர் கூற எல்லோரும் அவனைத் துதித்தனர்.

கம்ப ராமாயணத்தில் பாற்கடற்கரையில் சென்று துதித்ததாக இருக்கிறது. துளஸிதாசருக்கு அது விரோதமே. பக்தியுடன் எங்கேயிருந்து அழைத்தாலும் வருவதாக சபதம் செய்திருக்கும் அவனைத்தேடி எதற்காக எங்கேயும் போக வேண்டும்?

மீண்டும் கம்ப ராமாயணத்தில் கருடன் மீது வந்தார் விஷ்ணு என்று கதை. இங்கே, அசரீரியாகவே பரமன் 'நாம் தசரதன் புத்திரர்களாய் அம்சத்துடன் அவதரிப்போம்.' என்ருர். தேவர்களே நீங்கள் குரங்குகளாய்ச் சென்றிருங்கள் என்று பிரும்மா சொல்லி விட்டு எல்லோரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

தசரதன் குறை நீக்கம்

அயோத்தி அரசன் தசரதன் தன் மனைவியர் மூவரான கோசலை, கைகேயி, சுமத்திரை மூவருடன் வாழ்ந்து வரும் போது பிள்ளையில்லாக்குறை வாட்டி வருகிறது. வசிஷ்டர் சொற்படி கலைக்கோட்டு முனிவர் உதவி கொண்டு புத்திர-காமேஷ்டியாகம் செய்யப்படுகிறது.

அக்னி தேவனா, பூதமா ?

யாக அக்னியிலிருந்து தேவன் தோன்றினன்.

கம்பன்

ஆயிடைக் கனலினின்று அம்பொற்றட்ட மீத்
தூயநற் சுதை நிகர் பிண்ட மொன்று. சூழ்
தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதம் ஒன்று எழுந்தது ஏந்தியே

என்று பூதம் ஒன்று எழுந்ததாக சொன்னார்.

துளஸி

ப்ரகடே அக்னி. அக்னிதேவனே வெளியானுன் என்கிருர். அக்னியும் பூதம் தானே!

கொண்டுவந்த பொருள் விஷயத்தில் இருவருக்கும் ஒற்றுமைதான் "ப்ரகடே அக்னி சாருகர லீனே"

'சரு'வைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியானுர் அக்னி என்று பொருள். சரு அன்னப் பிண்டம். சுதை நிகர் பிண்டம் என்றதும் கம்பன் அதைக்குறித்துத்தான். இனிமையாலும் அமுதத்தை ஒத்தது அந்தப் பிண்டம் என்று கம்பன் விளக்குகிருர். அவ்வளவுதான்.

கொடுத்த முறை

அந்தப் பிண்டத்தை

வைத்தது தரைமிசை, மறித்துமவ்வழி தைத்தது பூதம். அத்தவனும் வேந்தனை உய்த்த நல்லமிர் தினையுரிய மாதர்கட்கு அத்தகு மரபினுல் அளித்தியாலென்ருன்; என்கிருர் கம்பர். துளஸியும் இதையே மொழி பெயர்ப்பவர் போல

யஹ ஹவி பாண்டி தேஹு நிருப ஜாயீ |
யதா யோக்ய ஜேஹி பாக பநாயீ ||

முறைப்படி உரிய மாதர்கட்கு உரிய பாகத்தைக் கொடு என்ருர் கலைக்கோட்டு முனிவர் (அத்தவன் என்பதும் கலைக்கோட்டு முனிவரைக் குறித்துத்தான்.) என்கிருர்.

இங்கே நமக்கு இராணியர் மூவருடைய முறையும் தெளிவாக்கப்படுகிறது.

கம்பர் முதலில் கோசலைக்கும் பிறகு கைகேயிக்கும் பிறகு சுமித்திரைக்கு முதலில் ஒருமுறையும் மீண்டும் பிதிர்ந்து வீழ்ந்ததையும் கொடுத்ததாகச் சொல்லி, ஐயம் நீங்க மீண்டும் மிதிலைக் காட்சிப் படலத்தில்,

தயரதன் வான்முறையில் நன்னுதலார் மூவருக்கும் நாலு கூறிட்டளித்தான்' என்று கூறுகிறுர்,

துளஸிதாசரும்

அரத பாக கௌசிலஹிம் தீனு |
உபய பாக ஆதே கர லீனு ||
கைகேயி கஹம் ந்ருப ஸோ தயஉ |
ரஹேஉ ஸோ உபய பாக புனி பயஉ ||
கௌசில்ய கேகயி ஹாத தரி |
தீன ஸுமித்ரஹிம் மன பிரஸன்னகரி ||

பாதியை கௌசில்யைக்குக்கொடுத்தான். மிஞ்சியதை இரண்டு பங்காகச் செய்து ஒரு பகுதியை கைகேயிக்குத் தந்தான். மிஞ்சிய கால் பாகத்தை இரண்டாகச்செய்து இரண்டு பெரிய இராணிகளிடமும் கொடுத்து வாங்கி (தொடச்செய்து) சுமித்திரையிடம் கொடுத்தனன்.

இந்த விவரத்திலிருந்து முறையில் கோசலை மூத்தவள், சுமத்திரை மிகவும் இளையவள், கைகேயி நடுவில் உள்ளவள் என்று தெளிவாகிறது.

புத்திர ஜனனம்

இராணிகள் கர்ப்பம் தரித்தனர். உரிய காலம் வந்தது என்று துளஸிதாசர் சொல்கிறுர். கர்பவாஸ காலம் பனி ரெண்டு மாதம் என்பர். ஆனல் கம்பன்

தெரிவையர் மூவருஞ் சிறிது நாட் செலீஇ-என்று மாதங்கள் குறிக்கவில்லை. ஆயிடைப் பருவம் வந்தடைந்த வெல்லையில் என்று அவதார காலம் வந்தடைந்தது என்று சொல்லுகிறார்.

துளஸிதாசரும்அவ்விதமே சொல்கிறார்.

ஸுகயுத கசுக கால சலி கயவு |
ஜேஹி ப்ரபு ப்ரகட ஸோ அவசர பயஉ ||

'கொஞ்ச காலம் சென்றது. பிரபு வெளிப்பட வேண்டிய நாள் வந்தது.' இரு கவிகளுக்கும் எவ்வளவு ஒற்றுமை!

யோகம் லக்னம் வாரம் திதி எல்லாம் அநுகூலமான நேரத்தில் திருக்குமாரர்கள் அவதரித்தனர்.

ஆயிடைப் பருவம் வந்தடைந்த வெல்லையின்
மாயிரும் புவி மகள் மகிழ்வினோங்கிட
வேய் புனர் பூசமும் விண்ணுளோர்களும்
தூயகற்கடகமுமெழுந்து துள்ளவே

....

ஒரு பகலுலகெலா முதரத்துட் பொதிந்(து)
அருமறைக் குணர்வருமவனை, அஞ்சனக்
கருமுகிற் கொழுந்து எழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை. —கம்பர்

துளஸி, நவமி திதி, மதுமாஸ புனீதா |
சுக்ல பக்ஷ அபிஜித் ஹரி ப்ரீதா ||
மத்ய திவஸ அதி சீத ந காமா |
பாவன கால லோக விச்ராமா ||

நவமி திதி. சித்திரை மாதம். சுக்ல பக்ஷம் அபிஜித் முகூர்த்தம். பிரீதி யோகம். நடுப்பகல் நல்ல வெயிலோ

குளிரோ இல்லாத நேரம். உலகத்துக்கு இளைப்பாறுதலைத் தரும் நேரம் என்று விவரிக்கிறார்.

மற்ற மூன்று குழந்தைகள் பிறந்ததும் முறையே சொல்லப்படுகிறது.

பூசமும் மீனமும் பொலியும் வகையில் கைகேயி பாதனையும் சுமித்திரை அரவினோடு அலவன் வாழ்வுற இலக்குமணனையும், மடங்கலும் மகமும் வாழ்வினோங்கிட சத்துருக்னனையும், பயந்தருளினாள் என்கிறார் கம்பர்.

இந்த விதமாகப் பிறந்த குழந்தைகள் உலகை மகிழ் வித்தன. தேவர்கள் ஆடினர், பாடினர். மும்மூர்த்திகள் உள்ளம் மலர்ந்தனர். நாட்டு மக்கள் எல்லாம் மிகவும் களிப் புக் கொண்டனர்.

4. அயோத்தியிலிருந்து மிதிலை வரை.

குழந்தைகள் வளர்ந்தனர்

குழந்தைகள் பிறந்தவுடனே ஒரு அதிசயம் நடந்ததாகத் துளஸி கூறுகிறார்: ஸ்ரீ ராமன் தன் தெய்விகமான விஷ்ணு வின் ரூபத்தில் தோற்றமளித்தார். கோசலை அவரைத் துதித்து விட்டு 'இந்த ரூபத்தை மறைத்துக் குழந்தையாகவே வளர வேண்டும்' என்று கேட்டுக்கொள்ள அவரும் அப்படியே குழந்தை ஆனார்.

"விப்ர தேனு சுர ஸந்த ஹித லீன மனுஜ அவதார் |
நிஜ இச்சா நிர்மித தனு மாயா குண கோபார் ||

அவர் பிராமணர், பசு, தேவதைகள் சாதுக்கள் இவர்களுக்காகத் தன் இஷ்டத்தாலேயே மனிதனாக அவதாரம் எடுத்தவர்; மாயை குணங்கள் இந்திரியங்கள் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் அல்லவா!

மற்றும் ஓரிரு அதிசயங்கள் நடந்தன. மக்கள் அறியவில்லை. கம்பர் 'தத்தமையொன்று முணர்ந்திலர்' என்றாலும் என்ன அதிசயம் என்று சொல்லவில்லை. துளஸிதாஸர்

"மாஸ திவஸ கர திவஸ பா மர்ம ந ஜானே கோயீ;
ரத சமேத ரவி தாகேஉ நிசா கவன விதி ஹோயீ!

ஒரு மாதம் ஆயிற்று. மர்மத்தை மக்கள் அறிந்திலர். சூரியன் ரதத்துடன் தங்கிவிட்டான். இரவு ஆனால் தானே!

அதேபோல் மற்றொரு செயலும் நிகழ்ந்தது. சிவன் சொல்கிறார்:—

"காகுபசுண்டி ஸங்க ஹம் தோஉ
மனுஜ ரூப ஜானே நஹிம் கோஉ"

"காகுபசுண்டியும் நானும் (இருவரும்) மனித உருவம் எடுத்துச் சென்றோம். ஒருவரும் அறியார்."

இந்த இரண்டு அதிசயங்களை எண்ணித்தான் கம்பநாட்டார் 'தத்தமையொன்றும் உணர்ந்திலர்!' என்றார் போலும்.

குழந்தைகள் வளருகிறார்கள் பட்டணத்து மாந்தர் எல்லாம் தங்கள் தங்கள் வீட்டில் குழந்தை பிறந்ததுபோல் கொண்டாடுகிறார்கள். கம்பன் சொல்லும் ஒரு பாடல் பாருங்கள்:

பண்ணையு மாயமுந் திரளும் பாங்கரும்
கண்ணகன் றிருநகர் களிப்பு கைமிகுந்
தெண்ணெயுங் களபமு மிழுதும் நானமும்
சுண்ணமும் தூவின வீதி தோறுமே.

அந்த அகன்ற திரு நகரில் மாதர், தோழியர், மைந்தர், தோழர் யாவரும் மன மகிழ்ச்சி மிக எய்தினர். எண்ணெய், களபம், இழுது (நெய்), நானம் (கஸ்தூரி) சுண்ணம் இவைகளை எல்லாம் வீதிதோறும் தூவினர்.

இந்தப் பாட்டைப் பெரியாழ்வாருடைய பின்வரும் பாடலுடன் ஒத்திட்டுப் பார்க்கலாம்.

வண்ணமாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந் தளறாயிற்றே

எண்ணெயும் சுண்ணமும் தூவினால் அளறாவது திண்ணம் கம்பரோ எண்ணெய் சுண்ணம் போதாதென்று களபம் இழுது நானம் இந்த மூன்றையும் சேர்த்து வீசுகிறாரே; தெரு சேறாயிருக்குமா ஆகாதா?

துளஸியைக் கேளுங்கள்:

ம்ருகமத சந்தன குங்கும சிஞ்சா |
மசீ சகல வீதின பிச் கீசா ||

கஸ்தூரி, களபம், சுண்ணம் தெளித்தனர். தெரு முழுவதும் சேறாயிற்று என்கிறார்.

ஊன்றிக் கவனித்தால் ஒரு அதிசயம் வெளியாகும். துளஸிதாஸர் குறித்த மூன்று பொருள்கள் சேறாகப்போதா. கம்பன் சொன்ன ஐந்து பொருள்களையுக் சேர்த்துத் தெளித்

தால் தெரு சேருகாமல் போகாது. ஆகவே ஒரே கோலத்தை இருவரும் கண்டிருக்கின்றனர் என்று தெளிவாகவில்லையா?

வேதப் பெயர்கள்

நாளாயிற்று. ஈரறு நாட்கள் என்று கம்பன் சொல்லு கிறார். சில நாட்கள் என்று குறிக்கிறார் துளஸி.

நாமகரணம் செய்ய நாள் வந்தது. தாவா மெய்த்தவன் நாமம் விதிப்பமதித்தான் என்றார் கம்பன். அதைத் தொடர்ந்து துளஸி

பூப போலி படயே முனி ஞானி

அரசன் ஞானியான முனிவரை அழைத்தான் என்றார். அழைத்து அவர் ஏற்கனவே மதித்ததைத் தெரிந்தவனு தலால்

"தரிய நாம ஜோ முனி குனி ராக்கா!"
'நீங்கள் மதித்துவைத்த பெயர்களை இடுங்கள்' என்று வேண்டிக்கொண்டான்.

வசிஷ்டரும் பெயர்கள் ஈந்தார். எல்லாம் வேதப் பெயர்கள் என்று ஸ்ரீ துளஸி சொல்கிறார். "வேதப் பிரகாசா" என்று வெளிப்படையாகத் துளஸி சொல்வது போலவே கம்பனும் "தாவா மெய்த்தவன், பொய் வழியில் முனி, புகல்தரு மறையால் இவ்வழி பெயர்கள் இசைத்து" என்றெல்லாம் கூறி அதை வலியுறுத்துகிறார்.

லசமன ராமசரித ரதி மானி
பரத சத்ருஹன தோனோ(ம்) பாயீ

என்று சொல்வதையே கம்பன் "வரதனும் இளவனுமென

பரதனு மிளவலும் ஒரு நொடி பகிராது மருவி வாழ்ந்தார்'' என்று சொல்கிறார்.

அவதார காரியம் ஆரம்பம்

விசுவாமித்திரர் 'அழைக்க வருகிறார். அவர் தசரதனிடம் குசலப்ரச்னம் முடிந்த பிறகு 'யாகம் புரக்க இராமனை அளி' என்கிறார். 'புண்ணிலாவு பெரும் புழையிற் கனல் நுழைந்தாலென்ன' சொல்லை ஏற்று கண்ணிலான் பெற்றிழந்தாற்போல வாடும் தசரதன் 'நானே வருவேன்' என்று சொல்லக் கேட்டு முனிந்தார் முனிவர் என்பர் கம்பர். துளஸியோ:

> சுனி நிருப கிரா பிரேம ரஸ ஸானி
>
> ஹ்ருதய ஹர்ஷ மாணு முனி ஞானி!

அன்பில் நனைந்த இந்த வார்த்தைகளைக் கேட்டு ஞானியான முனிவர் உள்ளுற இன்பம் அடைந்தார்! பிறகு வசிஷ்டர் சொல்ல தசரதன் இராமன் லக்ஷ்மணன் இருவரையும் அவரிடம் 'நீயே தந்தை' என்று சொல்லித் தருகிறார். அவர் உயிரேபோல் இருவரும் பிரிந்து விசுவாமித்திருடன் செல்கின்றனர். வழியில் தாடகை சம்ஹாரம் ஆகிறது. முனிவரிடம் அஸ்திரம் பெற்று மன்னன் மைந்தர்கள் ரிஷியின் ஆசிரமத்தை எய்துகின்றனர்.

எய்தி இராமபிரான் ''நிர்பய யக்ஞ கரிஹு தும் ஜாயி!'' பயமின்றி சென்று யாகம் புரியுங்கள் என்றார். மாரீசன் சுபாகு முதலானோர் வந்தனர். கூரில்லாத அம்பை மாரீசன்மேல் எய்ய அவன் சமுத்திரத்தைத் தாண்டி விழுந்தான். சுபாகுவும் சேனையும் அழிக்கப்பட்டனர் யாகம் நடந்தேறியது.

பிறகு இளவரசர்கள் அங்கே சில நாட்கள் தங்கினர். "ஜனகன் தனுர் யக்ஞத்துக்குப் போகலாம்" என்ற முனிவர் பேச்சைக் கேட்டு ரிஷியுடன் அவர்கள் சென்றனர்.

திருவடித்துகள்

போகும் வழியில் பாழடைந்த ஒரு ஆசிரமமும் பெருங் கல் ஒன்றும் தென்பட்டன. இராமபிரான் ஆவல் அறிந்து விசுவாமித்திர முனிவர் 'கதையை விவரமாகச் சொன்னார்.' பிறகு,

கௌதம நாரி சாப வச உபல தேஹ தரி தீர |
சரண கமல ரஜ சாஹதி க்ருபா காஹு ரகுவீர ||

'கௌதம முனிவர் மனைவி சாபம் பெற்றுக் கல்லுடல் தாங்கி அடித்துகள் வேண்டி நிற்கிறாள். கருணை காட்டு' என்று வேண்டினார்.

அஹல்யையின் அசட்டுக் கதையை அதிகம் நீட்டாமல் ஸ்ரீ துளஸி உடனே அவளுக்குச் சாப நீக்கம் ஏற்பட்டு விட்டதை அறிவித்து விடுகிறார். முன்னுருப் பெற்ற அகல்யை இராமபிரானைப் பணிந்து துதிக்கிறதாகச் சொல்வர் துளஸி. நல்லதேபேசிக் கெட்டதைத் தானே அழிய விடும் கலையில் வல்லவரான ஸ்ரீ துளஸிதாஸர் இங்கே முழுக் கதையையும் அமங்களம், அசுபம் என்பதற்காகச் சொல்லாமல் விடினும் முன்னும் பின்னும் சில இடங்களில் கதையை ஒரு நல்ல முறையில் சொல்லியே விடுகிறார்.

முன்னால் நாம மஹிமையைக் கூறும் இடத்து, 'இராமன் ஒரு பெண்ணைத்தானே பிழை தணிந்து கரையேற்ற முடிந்தது?' என்று கேட்டு அஹல்யையின் குற்றமுள்ள நடத்தையைத் தெரிவித்தார்.

இராமபிரான் திருமணக் கோலத்தைக் கண்ட இந்திரன் வாயால், "முனிவர் கொடுத்த சாபம் நல்லதாயிற்று" என்று சொல்வித்து இந்திரன் பெற்ற சாபத்தைப் பற்றிய கதையையும் சொல்லி விடுகிறார்.

ஆனாலும் அவர் திருவடிகளின் பெருமையை எண்ணி எண்ணிச் சுவைக்கும் அழகே தனி.

சீதா பிராட்டியார் இராமபிரான் வில்லிறுத்தவுடன் மாலையணிந்து பாதம் பணியும் நிலையில் துளஸி சொல்கிறார்: 'கௌதம தியக்தி சுரதி கரி நஹிம் பரஸதி பத பாணி! கௌதம முனிவரின் மனைவி கதியை எண்ணி அவள் காலைத் தொட அஞ்சி நிற்கிறாள்' என்று.

மீண்டும், 'கங்கைக் கரை வேடன் காட்டுக்குப் போகும் இராமபிரானைப் படகில் ஏற்ற மறுத்தான்' என்று ஒரு கதை புனைந்து சுவைக்கிறார் ஸ்ரீ துளஸி. அவன் சொன்னானாம் "கல்லைவிட மரம் கடினமா? படகு மடந்தையாக மாறினால் எனக்குப் போக்கிடம் ஏது?" என்று.

மற்றும் அநேகர் இந்தச் சுவையை ஹிந்தியில் எண்ணிப் பேசி உய்ந்திருக்கின்றனர்.

ரஹீம் என்பவர் ஒரு முஸ்லிம் கவி. அக்பர் பாதுஷாவுக்குச் சொந்தக்காரர். அவர் தர்பாரில் இருந்தவர்.

அவர்

அகல்யா பாஷாண: ப்ராக்ருதி பசு ராஸீத் கவி சமூ:
குஹோபூத் சாண்டாள: த்ரியமபி நீதம் நிஜ பதம்
அஹம் சித்தேன அச்மா பசுரபி தவார்சாதி கரணே
க்ரியா பிசாண்டாலோ ரகுவர ந மாமுத்தரதி கிம்?

ஏ ராமா அஹல்யை கல்லாயிருந்தாள் இயற்கையில் மிருகங்களாயிருந்தன வானரங்கள். குஹனோ சண்டாளன் நீ அவர்களை உன் பதத்துக்கு அழைத்துக்கொண்டாய் நானும் மனதில் கல்லாய் பூஜை அர்ச்சனை செய்யும் விதத்தில் மிருகமாய் நடத்தையில் சண்டாளனாய்த் தானே இருக்கிறேன். என்னை ஏன் நற்கதிக்கு அழைத்துச் செல்ல மாட்டேன் என்கிறாய்?'' என்று கேட்கிறார்.

அஹல்யை கதை இருக்கட்டும். அவர் திருவடித்துகளின் பெருமையைப் பேசும் திறமையைப் பாருங்கள்:—

"யானை ஏன் மண்ணை எடுத்துத் தன் மேல் தூவிக் கொள்கிறது தெரியுமா? என்று கேள்வி கேட்கிறார். விடையும் அவரே சொல்கிறார். "அன்று முனிபத்னி பாவம் நீங்கிக் கரை ஏறினாள், ஒரு தூசியினால் தானே! அந்தத் தூசி எங்கே இருக்கிறது? எங்கும் போயிருக்காதே. பறந்து பறந்து போயிருந்தாலும் எங்கேயாவது சென்று தங்கியிருக்குமல்லவா! அதைத் தேடிக்கொண்டல்லவா யானை அவ்விதம் செய்கிறது! என்று ஆச்சரியமாகச் சொல்கிறார். மதம் மாறிப் பிறந்த ஹிந்து பக்தர் என்று நமக்குத் தோன்றுகிறதல்லவா?

தூரி தரத நிஜ சீஸ பை கஹ — ரஹீம் கிஹி காஜ்
ஜிஹி ரஜ முனி பத்னி தரீ ஸோயி டூண்டத கஜராஜ்

ரஹீம், சொல் தினந்தோறும் யானை தன் தலையில் தூசியை வாரிப்போட்டுக் கொள்கிறதே, ஏன்? எந்தத் தூசியால் முனிபத்னி கரையேறினாளோ, அந்தத் தூசியைத் தேடுகிறது யானை அரசன்!

யானையரசன் தான் அவ்விதம் செய்ய முடியும். ஏன் எனின் 'கடுத்த காரங் கதுவ நிமிர் கை எடுத்து, பெய் கலங்கி

உடுத்த திசையனைத் தினுஞ்சென்று, உறுதுயரால், அடுத்த பெருந்தனி மூலத்தரும்பாமே பாமேயென்று எடுத்தவொரு வாரணத்தின்'' வம்சம் வந்ததல்லவா அது ?

நிற்க, கௌதமரிடம் அஹல்யையை ஒப்புவித்துவிட்டு அவர்கள் மூவரும் மிதிலே நோக்கிச் சென்றனர்.

இவர்கள் யார் ?

மிதிலையின் குளங்கள், கிணறுகள், சோலேகள் எல்லாம் பார்த்து வருகின்றனர் மூவரும். நகரின் செல்வமும் சீரும் வர்ணனைக்கடங்கா. பிரும்மாவே சிருஷ்டித்தது போன்ற வீதிகள், குபேரன் போன்ற வணிகர்கள் வியாபாரம் செய்யும் இடங்கள் எல்லா இடத்தையும் பார்த்து விட்டு ஒரு மாஞ் சோலேயில் தங்கினர் மூவரும்.

மிதிலே நகர்க்கதிபன் காதில் இந்த சமாசாரம் எட்டியதும் அவர் தன் பரிவாரம் புடைசூழ குருவுடன் அவர்களைப் பார்க்க வந்து சேர்ந்தார். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது வெளியே சென்றிருந்த இராம லக்ஷ்மணர்கள் திரும்பினர். அவ்விருவரையும் பார்த்தவர்கள் அப்படியே புளகம் அடைந்தனர். ஜனகன் (தேகமில்லாத) விதேகனுகவே ஆகி விட்டார்! இவர்கள் யார் என்று தழதழத்துக் கேட்டார். "இவர்களைப் பார்த்ததுமே என் மனம் பரமனிடம் லயிக்க மறுக்கிறதே! என்று விம்மினர் விசுவாமித்திரர் சிரித்து, "நீ சொல்வது உண்மைதான். இவர்கள் இருவரும் தசரத மன்னன் குழந்தைகள். இவர்கள் என் யாகத்தைக் காப்பாற்றின கதை உலகம் அறிந்தது'' என்றெல்லாம் சொல்ல மன்னன் மனம் மகிழ்ந்து அவர்களைப் பட்டணத்துக்குள் அழைத்துச்

சென்று நல்ல ஒரு மாளிகையில் அவர்களுக்கு இருக்கை தந்து தன்னிருப்பிடம் சென்ருர்.

ரிஷய சங்க ரகுவம் சமணி கரி போஜன விச்ராம் |
பைடே பிரபு பிராதா சகித திவஸ ரஹா பரியாம் ||

முனிவர்களுடன் ரகுவம்சத் தோன்றல் போஜன மருந்தி களைப்பாறித் தம்பியுடன் உட்கார்ந்தார். பகல் முடிய ஒரு யாமம் இருந்தது.

---

5. பரம்பொருளும் திருவும்.

பெரியவருக்குள்ள மரியாதை

இலக்ஷ்மணன் மனதில் ஒரு ஆவல் எழுந்தது. சொல்லப்பயந்தான். அதை அறிந்த இராமர் தம்பியின் மரியாதைக் குணத்துக்கு மகிழ்ந்து குருவிடம் சென்று பணிவுடன் சமயம் பார்த்து அனுமதி கேட்டார். விசுவாமித்திரர் 'இராமா! நீ நீதியறிந்தவன். நீதி நெறியாகிற பாலத்தைக் காப்பாற்றுபவன்,' என்று புகழ்ந்து "போய் வா" என்றும் விடை கொடுக்கிருர். சென்று நகர மாந்தர் எல்லாம் உவகை கொண்டு தம் பாக்கியத்தைப் புகழவும், குழந்தைகள் எல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் பூரிக்கவும் சுற்றிவிட்டுத் திரும்புகின்றனர் குமாரர்கள். இராமன் முனிவர் பாதத்தைப் பிடித்துத் தூக்கம் வரும் வரையில் வருடினுர். பிறகு இலக்ஷ்மணன் தன் தமயனைத் தூங்க வைத்துவிட்டுப் பிறகு தூங்கினுன். என்ன குணம், என்ன மரியாதை!

காலை ஆயிற்று. முதலில் இலக்ஷ்மணன் எழுந்தான். குரு எழுவதற்குள் இராமன் எழுந்துவிட்டார். ஸ்நானம் முடிந்த பிறகு புஷ்பம் எடுத்துவர உத்தரவு பெற்றுக்கொண்டு இருவரும் தோட்டத்திற்குச் சென்றனர். அதே சமயம் அங்கே கௌரி பூஜை செய்ய சகிகளுடன் சீதா தேவியும் வந்திருந்தாள்.

தோட்டக்காரனிடம் அனுமதி பெற்றே புஷ்பம் கொய்தனராம் அரசிளங்குமரர்கள். அரசரின் விருந்தினர்கள், மக்கள் உள்ளத்தை எல்லாம் கொள்ளையிட்டவர்கள்! அதுவும் தேடிப் பிடித்துக் கேட்டார்களாம் அனுமதி. துளஸியல்லவா கதை சொல்கிறார்!

அதே சமயத்தில் அகஸ்மாத்தாக வந்த சீதையினுடைய ஒரு தோழி இவர்களைப் பார்த்துவிட்டு ஓடினாள் சீதையிடம். "அம்மா கண்டேன் அரசகுமாரரை.

கிரா அநயநா நயன வினு வானீ |

நாக்குக்குக் கண்கள் இல்லை. கண்கள் பேச்சுச் சக்தியற்றன! எப்படி வருணிப்பேன்?" என்றாள். சகியை முன்னிட்டுக் கொண்டு சீதை அரசிளஞ்சிறார் இருக்குமிடம் வந்தாள்.

"அண்ணலும் வாட்கண் நங்கையும்"

கம்பநாடரும் மணம் ஆவதன் முன்னம் சீதையும் இராமனும் சந்தித்ததாகச் சொல்வர். இருவரும் அடைந்த நிலையை வருணிப்பதிலும் இரு கவிகளுக்கும் ஒருமைப்பாடு தான். ஆனால் நேரமும் காலமும் தான் நாட்டுக்குத் தக்கவாறு மாறி நிற்கின்றன. சீதையைக் கன்யாமாடத்தில் காட்டினார் கம்பர். பூஞ்சோலைக்கு அழைத்து வந்தார் துளஸி.

சீதை வர, அவள் சிலம்பு எழுப்பிய ஓசையைக் கேட்டார் இராமர். பெண் ஒருத்தி வந்து இராமன் விழி நிலையுண்டதைக் கம்பர் வர்ணித்திருக்கிறார். ஆனால் அது வேறு இடம்; வேறு பெண்.

நூபுரமு மேகலையு நூலு மறலோதிப்
பூமுரலும் வண்டுமிவைவ பூசலிடு மோசை
தாமுரை செய்கின்றதொரு தையல் வருமென்னக்
கோமகனு மத்திசை குறித்தனன் விழித்தான்.

கம்பர் சொல்லும் கதையில் சீதை நிற்க இராமன் சென்று கொண்டே பார்த்தார். ஆகவே நின்ற அழகை வர்ணித்தார். வரும் பெண் அழகை வர்ணிக்க வேறு வகையின்றி சூர்ப் பணகையை வருணித்தார். துளஸிக்குக் கதை எளிதாயிற்று.

"கங்கண கிங்கிணி நூபுர துனி சுனி.....பிர சிதயே தேஹி ஓா. கங்கணம் கிங்கிணி நூபுரம்.......முதலியவை களின் சத்தத்தைக் கேட்டு அந்தப் பக்கம் விழித்தார்". என்கிறார் துளஸி. மீண்டும் அது திக்விஜயம் செய்ய எழுந்த பறை போலும் என்கிறார்.

பிறகு அவர் அடைந்த நிலையையும் அவள் அடைந்த நிலையையும் வருணிக்கத் தொடங்குகின்றனர் இரு கவி யரசர்களும்.

துளஸி "அழகுக்கு அழகு செய்கிறாள்" இவள் என்று வியந்தார், "அழகெனும் அணியும் ஓர் அழகு பெற்றதே" என்ற கம்பன் பாட்டுக்கு ஒரு புதிய வியாக்யானம் செய்வதே போல். லக்ஷ்மணனிடம், "என் உள்ளம் வழக்கத்துக்கு விரோதமாய் இவளிடம் தஞ்சமடைகிறதே" என்று சொல் கிறார் இராமபிரான்.

அதே சமயம் சீதா பிராட்டியும் சியாமள ரூபனுன அவனைப்பார்க்கிருள்.

"கண்ணிணைகள் கௌவின" என்ருர் கம்பர் துளஸி. "தமக்குரிய சொத்தைக் கண்டனவல்லவா!" என்று வியாக்யானம் செய்தார். "உண்ணவு நிலை பெருது" என்ருர் கம்பர். தகே நயன, கண்கள் களைத்தன என்ருர் துளஸி.

"கண்விழி புகுந்த கள்வன்" என்று சீதை குற்றம் சாட்டியதாகச் சொன்ஞர் கம்பர். துளஸியோ, "இவள் தானே கதவு திறந்து கள்வனைவிட்டு இமைக் கதவையும் சாத்தினுள்" என்ருர். "லோசன மகு ராமஹிம் உர ஆனி தீன்ஹே பலக கபட ஸயாணி!" என்ற பாவால்!

"அந்தமில் அழகனை அணைகிலாமையால் பைந்தொடி யோவியப்பாவை போன்றனள்" என்ருர் கம்பர். துளஸி அந்தமில் அழகனுடைய உருவத்தை அங்க அங்கமாகக் காட்டி அவளைப் பாவையாக்கி நிறுத்தி விட்டார். அந்தச் சமயத்தில் ஒரு தோழி, "கௌரி தேவியை அப்புறம் த்யானம் செய்யலாம் அவர்களை நன்ருகப் பார்த்துக்கொள்" என்று பரிகாசம் செய்யவே கண் விழித்த அவள் தந்தையையும் தாயையும் எண்ணிப்பயந்து சென்று விட்டாள். போகும் போதே திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே போனுள்.

இப்படிச் செய்தார்களே இது சரிதானு? என்ருல் கம்பன் சொல்வான் :

மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும் யார்? கருங் கடற்பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப் பிரிந்தவர் தாமே! அவர் கூடினுல் நமக்குப் பேச்சென்ன ?

துள்ஸியும், ப்ரீதி புராதன் லக்கை நகோயீ! இது பழம் அன்பு. ஒருவரும் காணவில்லை என்று சமாதானம் சொல்கிறார்.

அழலிடு வல்லியே போற்சாம்பிய அவள் யாவையும் வழங்கிய கடலென்ன வறியளாகி, உயிர் வருந்திச் சோர்தரப் போயினாள். இங்கும் அப்படித்தான்.

அன்றிரவு இராமன் கங்குலுந் திங்களும் தனியும் தானுமத் தையலுமாகி அவளை நினைத்துருகுகிறான் என்று கம்பர் சொல்கின்றார்.

துளஸிதாஸர் இராமனும் சந்திரன் எழுந்தவுடன் இவன் அவள் முகத்துக்கு உவமையாவானா என்று ஒத்திட ஆரம்பித்தார். ஆகமாட்டான் என்று முடிவு கட்டினார். என்கிறார். இரவு முழுதும் தூங்காமலே இருந்து காலையில் குருதேவனிடம் சென்றார்.

வில் முறிந்தது

மறுநாட் காலையில் யாக மண்டபத்துக்குச் சென்றனர். வில் கொண்டுவரப்பட்டது. சீதை முதலானோரும் ராணிகள் தோழிகள் உட்படப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். பல அரசர் முயன்றனர்; ஒன்றும் பயனில்லை. வில் எழவில்லை. "கற்பு மனம் கவவர்கள் வார்த்தைக்கு அசங்குமா?" என்று உவமிக்கிறார் துளஸி. ஜனகன், புவி வீரமற்றுப் போய் விட்டதா? என்று நொந்தான். லக்ஷ்மணன் பணிந்து "அண்ணா இந்தச்சொல்லை நாம் கேட்பதா? நான் செல்லட்டுமா?" என்றான். அவனை அடக்கி விசுவாமித்திரர், "நீ போ" என்று இராமனை அனுப்பினார்.

அந்த சமயத்தில் பெண்கள்

வள்ளல் மணத்தை மகிழ்ந்தனனென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதையல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை எடுத்துப்
பிள்ளை முனிட்டது பேதைமை என்றார்

துளஸியும் இதையே வேறுவிதமாகச் சொல்ல வைத்தார்.

ஹாரு வேக விதி ஜனக ஜட தாயி; மதிஹமாரி அஸி தேஹு
ஸஹாயீ
பின விசாரி ப்ன தஜி நர நாஹு; ஸீய ராம கர கரை(ம்)
விவாஹு

கடவுளே சீக்கிரம் ஜனகன் பேதமையை அகற்றும். அவருக்கு எங்களுக்கு இருக்கும் புத்தியைக் கொடும். வேறு யோசனையின்றி, இந்தப் பந்தயத்தை அகற்றி இராமனுக்கு சீதையை மணம் செய்து தரட்டும்!

இராமன் மாக மடங்கலும் மால் விடையும் பொன் நாகமும் நாகமும் நாண நடந்தார். ஸஹஜஹிம் சலே சகல ஜகஸ்வாமி ; மத்த மஞ்சு குஞ்சா வர காமி.

பெருமையும், கௌரவமும் அழகும், காண இயற்கையான நடையில் மத்த கஜம் போல் நடந்தான் என்பதுதான் இருவர் கூற்றுக்கும் உள்ளுரைப் பொருள்.

அவன் சென்று

தடுத்திமையாமலிருந்தவர் தாளின்
மடுத்தது நாண் நுதி வைத்தது நோக்கார்
கடுப்பினில் யாருமறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனரிற்றது கேட்டார்

லேத சடாவத கைஞ்சத காடே. காஹ ந லக்கா ரஹே சப்டாடே; தேஹி சன மத்ய ராம தனு தோரா. பரேஉ புவன துனி கோர கடோரா! எடுத்து நாணேற்றி இழுத்தார் ஒருவரும் காணவில்லை. அந்த சமயத்தில் வில்லை நடுவே முறித்த சத்தத்தை உலகம் முழுதும் கேட்டது. "நோக்கார்" என்று கம்பரும் 'நலக்கா' என்று துளஸியும் சொல்வதைக் குறித்துக் கொள்ளுங்கள். ஏன் பார்க்க வில்லையா? கடுப் பினில் என்ற பதில் கம்பர் தருவார்!

முறிந்தது. சீதையை அருகே அனுப்பினர்- அவள் மாலையணிவித்து கமஸ்காரம் செய்ய வேண்டிய முறை. நமஸ் கரிக்க மறுக்கிறாள், ஏன்?

கௌதமதிய கதி சுரதி கரி; நாஹிம் பரஸத பத பானி. அஹல்யை கதியை எண்ணி காலைத்தொட அஞ்சுகிறாளாம்.

பிறகு எப்படியோ மாலையையும் அணிவித்த அவள் நமஸ்காரமும் செய்கிறாள்.

கோபமும் நடுக்கும் மோதின.

இங்கேதான் துளஸீ தன் கலைத்திறனைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொள்கிறார்.

அரசர்கள் எல்லாம் வெகுண்டு எழுகின்றனர். 'இந்த இராமன் எங்களையும் வென்றால்தான் பெண் அவனை அடைய முடியும்' என்று ஆரவாரம் செய்கின்றனர், எல்லோரும் பயப் படும் சமயம் அவர்கள் கொட்டத்தை அடக்க எனப் பரசு ராமன் அங்கே வருகிறார். அரசர் நடுங்கி ஒதுங்குகின்றனர்.

வந்ததுமே பரசுராமன் 'யார் வில்லை ஒடித்தது?' என்கிறார். இலட்சுமணன் துடுக்குத்தனத்தையும் பரசுராமன் கோபத்தையும் உபயோகப்படுத்தி ஒரு அழகிய நாடகச் சம்பாஷணையை இயற்றியிருக்கிறார் துளஸி. சொற்போர் நடக்கிறது.

'சொத்தை வில்லுக்குக் கோபமேன்' என்கிறான் லக்ஷ்மணன். அடே நான் யார் தெரியுமா? என்கிறார் பரசுராமன் 'தெரியுமே நீங்கள்தான் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்கிறீர்களே!' என்று பரிகாசம் செய்கிறான். "நீ சிறுவன் விடுத்தேன்".

"நானும் உங்கள் தோற்றம் பிராமணருடையதாயிற்றே என்று பார்க்கிறேன்".

"அட நான் ஒழித்து விடுவேன். இதோ பார் கோடரி!" "நான் ஒன்றும் பூஷணிக்கொட்டையல்ல விரல் நீட்டினால் அழுகி விழ" வீரன் யுத்தகளத்தில் பேசிக்கொண்டு நிற்பானா? கோழையல்லவா அப்படிச் செய்வான்! என்று இலக்ஷ்மணன் புத்திமதியும் சொல்கிறான். 'விசுவாமித்திரரே என் பெருமையைச் சொல்லி அடக்கும்' என்று விசுவாமித்திரரிடம் சொல்கிறார் பரசுராமன். "நீங்கள் சொல்வது போதாதா?" என்று நையாண்டி செய்கிறான் லக்ஷ்மணன்.

இடையிலே இராமன் புகுந்து சமாதானம் செய்கிறார். அவரையும், "ஏய் நீயும் உன் தம்பி போல் பொல்லாதவன்" தான். விஷம் நிறைந்த பொற்குடம் போல் இருக்கிறான் உன் தம்பி என்று சீறுகிறார்; "என் வில்லை உடைத்தாய்?" என்று கேட்கிறார். லக்ஷ்மணன் 'மீண்டும் தச்சனைக்கூப்பிட்டு ஒட்டவைத்துக்கொள்ளும்' என்று சிரிக்கிறான்.

கோபமடைந்த பரசுராமனைக் கண்ணை மூடிக்கொள்ளும் கோபம் தணியும் என்று கிண்டல் செய்கிறான்.

கடைசியில் இராமன் வந்து அவர் வில்லை வாங்கியவுடன் ஞானம் வந்து உண்மை அறிந்து போய்விடுகிறார் பரசுராமன்.

பிறகு தசரதனுக்கு ஆள் அனுப்பப்படுகின்றனர். அவரும் பரிவாரத்துடன் வந்து சேருகிறார்.

சீதா கலியாணம்.

பிறகு சீதா கலியாணம் விவரிக்கப்படுகிறது. தசரதர் முதலானோரை ஜனகன் வரவேற்றுத் தக்க மாளிகைகளி லிருத்தினான். புத்திரர்கள் தகப்பனாரை அடைந்தனர். கையடைப் படலத்தில் சொல்லியபடி 'ஆவி போல நீங்கி வந்த இராமன் — காவியுங் குவளையுங் கடிகொள் யாவுமொத்த லவியஞ்சுவைகெடப் பொலிவதோர் உருவோடு தேவருந் தொழு கழற் சிறுவன்—முன்பிரிவதோர் ஆவி வந்தென்ன வந்து அரசன் மாடணுகுகிறான்' என்று கம்பர் கூறுகிறார்.

துளஸியும், இறந்த சடலத்தில் உயிர் புகுவதுபோல் சேர்ந்தனர் என்று கூறுகிறார்.

மண நேரம் வந்தது. தேவர்கள் எல்லாம் மனித உரு எடுத்து வந்தனர். தேவ ஸ்திரீகள் எல்லாம் பெண்களாகி வந்தனர். தேவேந்திரன் தனக்குக் கௌதமர் கொடுத்த சாபம் நல்லதென்று எண்ணினான். பிர்மா எட்டுக்கண்கள் இருந்தும் வருத்தப்பட்டார். ஷண்முகன் 'நல்லவேளை பனிரெண்டாவது இருக்கிறதே' என்று ஆசுவாசமடைந்தார்.

அடிமையாய் வந்த கூனி, தோழியாகி பிறகு உபதேசமும் செய்கிருள்.

உபதேசத்தை ஏற்ற கைகேயி, 'லக்ஷ்மியாகிய சீதை அயோத்தி நீங்குவாள்; தான் சென்று தங்கலாம்' என்ற எண்ணத்துடன் வந்த மூதேவி போல் மூலையில் ஒளிந்தாள். துளஸி, 'கோபக்ருஹம் சென்ருள்' என்ருர்.

மாலை நேரம், மன்னன் மனமகிழ்வுடன், 'உருவெடுத்த நிஷ்டூர குணம்போன்ற கைகேயியிடம் மனித உரு எடுத்த அன்பே போல்' போய்ச் சேர்ந்தார்.

கலைந்த மனைவி

இந்தக் கட்டத்தை இரண்டு கவிகளுமே ஒரே சுவையுடன் வருணித்திருக்கின்றனர். அவள் கோலம் கண்டு பயந்த தசரதர் துயரம் தாளாமல், 'உனக்கு என்ன வேண்டுமே? எந்த அரசனை ஆண்டியாக்க வேண்டும்? எந்தப் பிச்சைக்காரனை அரசனுக்கவேண்டும்?'' என்கிருர். "இராமன் ஆணையாகச் சொல்லுகிறேன்'' என்றதும் கைகேயி, "எனக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். ஏற்கனவே தந்த இரண்டு வரங்களைக் கொடுத்தால் போதும்,'' என்ன, 'இரண்டு என்ன நான்கு பெற்றுக்கொள், கேள்!' என்கிருர் தசரதர். உண்மையிலேயே பின்னல், 'தசரதன் சாவும் கைகேயியின் பழியும் சேர்ந்து நான்கு வரங்கள் ஆகிவிடும்' என்று அவர் அப்பொழுது அறியார். அவளோ பரதன் முடிசூடவும் இராமன் பதினன்கு ஆண்டுகள் வனம் ஏகவும் இரண்டு வரங்களைக் கேட்கிருள். பதினன்கு நாட்கள் சொல்லாமலிருந்ததற்குத் தண்டனையாக அவள் 14 வருஷம் கேட்டாள்.

அவர் மிகவும் வருந்தி, "கைகேயி உனக்கு ஏன் இந்த ஆத்திரம்? இராமன் தானாக அரசை விரும்பவில்லை. கோசலையும் வாய்திறந்து ஒன்றும் கேட்கவில்லை. நான்தான் பெரியவன் சிறியவன் என்று எண்ணி இந்த முடிவைச் செய்தேன். வேண்டுமானால், "மண்ணே கொள் நீ, மற்றைய தொன்றும் மற!" அப்படியானால் தான் நான் "தேகஉம் அப நயனபரி பரதராஜ அபிஷேக—என் கண் நிரம்ப பரதன் அபிஷேகத்தைப் பார்த்து அனுபவிக்க முடியும். இல்லையெனில் இறந்து விடுவேன்!" என்று பலவாறாகச் சொல்லி வெய்துயிர்த்தார்.

அவளோ

'குசைப் பரியோய் தரினின்று கொள்வன்
அன்றேல்

வசைத்திற நின் வயின் வைத்து மாள்வன்'

என்று இறுதியாய் அறுதியிட்டாள். அதே கருத்தைத் துளஸி இன்னம் கொஞ்சம் அழுத்தமாய்,

ஹோத பிராத முனி வேஷ தரி, ஜோ ந ராம வன
ஜாஹிம் |

மோரமரண ராஉர அயச நிருப, சமுஜஹு மன
மாஹீம் |

நாளைக் காலையில் இராமன் முனிவேஷம் தரித்துக் காட்டுக்குப் போகவில்லை என்றால் என் சாவும் உம் வசையும் நிச்சயமாம்; எண்ணிக்கொள்ளும்" என்றாள் கைகேயி" என்கிறார்.

தசரதன் 'கொள்ளான் நின் சேய் அரசு. நீ வீணில் எள்ளாநிற்கும் பழி கொண்டு என் பயன்?" என்றார். பலவாறு சொல்லியும் கைகேயி மனம் தளரவில்லை. கடைசியில் அரண்டு வீழ்ந்தார் மன்னர் மன்னன்.

மறுநாள் பரிதி வெளியேறியும் அரசன் வெளிவாரா ததால் மக்கள் திகைக்க சுமந்திரர் கைகேயி அரண்மனைக்குத் தேடிக்கொண்டு வருகிறார். கைகேயியே முன்வந்து இராமனை அழைத்துவர உத்திரவிடுகிறாள்.

இராமன் வந்ததும் மணி இழந்த நாகம்போல் கிடக்கும் அரசனைக் கண்டு கதி கலங்கித் தாயிடம் செல்ல அவள் கொஞ்சம்கூடக் கலங்காதவளாய்

"ஸுத ஸநேஹ இத வசன உத, சங்கட பரேவு
நரேஷ் |
ஸகஹு தோ ஆயசு சீச தரி, மேடஹு கடின
கலேஷ் ||

குழந்தாய் நான் இரண்டு வரம் கொண்டேன். இந்தப் பக்கம் வாக்கு, அந்தப் பக்கம் உன் அன்பு வாட்ட அரசன் சங்கடப்படுகிறார். முடிந்தால் நீ வாக்கை நிறைவேற்றி அவர் துயரைப் போக்கு" என்றாள்.

இராமன் ஆச்சரியப்பட்டுவிட்டார். "இதற்காகவா தந்தை இவ்வளவு வருந்தவேண்டும்? என்னவே தாய் (?) "ஆம். பரதன்மேல் ஆணையாக இவ்வளவுதான்!" என்று சொல்லும் சமயம் தசரதன் விழித்துப்பார்த்து சுமந்திரன் சொன்னபடியால் இராமன் வந்திருப்பதை உணர்ந்து, "சிவனே, எப்படியாவது வீட்டில் தங்கும்படி இராமனுக்கு நீதான் புத்திதரவேண்டும்"என்று வேண்டத்தொடங்கினார்.

இராமனோ, 'தந்தையே! இந்தச் சிறிய விஷயத்துக்கா இவ்வளவு வருந்தவேண்டும்? உங்கள் வாக்கைக் காப்பாற்றும் பெருமை கிடைப்பது எளிதா?" என்றார்.

எப்படியோ காட்டுக்குப் போகத் தீர்மானித்த பிறகு இராமன் தாயான கோசலையிடம் வருகிறார்.

"ஆற்றல் சால் அறிவு"

கோசலை அறிவிற் சிறந்தவள். துளஸி அவள் அஞ்சாத அறிவுக்கு வணக்கம் செலுத்துகிறார். ஆற்றல் சால் கோசலை அறிவு என்றார் கம்பர். அவரே "நால்வர்க்கும் மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்" என்று சொல்கிறார்.

கைகேயியும் இராமனிடம் அன்பு கொண்டிருந்தாள் என்றாலும் அந்த வேறுபாடின்மை "நெஞ்ச"த்தில் எழுந்தது. இயற்கையாக எழுந்தது. கோசலையினுடைய வேறு பாடு காணாத தன்மை அறிவினால் பெற்றது. இவை இரண்டுக்கும் என்ன வேறுபாடு என்பதை இராமாயண நிகழ்ச்சிகள் காட்டித்தருகின்றன. மந்தரை மாற்றியவுடன் கைகேயியின் அன்பு மாறிவிட்டது. கோசலை அன்போ கைகேயியின் செயலால்கூட மாறவில்லை. பரதனிடம் முன்போலவே அன்பாயிருந்தாள். இது மனோதத்துவ சாஸ்திரத்தின் நுண்ணிய அறிவு தரும் தத்துவமாம்.

கோசலை "என்ன இருந்தாலும் வேற்றாள் மகன் வேற்றான்தான். என்றாலும் நல்லறிவு படைத்த நமக்கு, கற்புள்ள ஸ்திரீக்கு வேற்றுமை பாராட்டுவது பொருந்தாது," என்று அறிந்து அவள் அதை அறிவின் திறனால் மாற்றி இருந்தாள். கைகேயியோ அவ்விதமின்றி இயற்கையான ஒரு அன்பினால் மட்டுமே இராமனை நேசித்தாள். கேட்பதற்கு அது சிறந்ததாகத் தோன்றினாலும் அது பரீட்சையில் தவறக்கூடியது,

தவறிவிட்டது. கோசலையின் அன்போ பரீட்சையில் மீண்டும் பிரகாசிக்கிறது.

இந்தப் பெருமையுள்ள அறிவின் திறம் கொண்டவளாகத் துளஸி கோசலையைக் காண்கிறார். இதற்கு ஆதாரம் கம்பரே தந்தபோதிலும் துளஸிதான் இந்தக் குணத்தைப் பரிமளிக்கச் செய்கிறார்.

இராமன் சென்று நின்றதும் கோசலை, 'என்ன காரணம்? என்றாள். இராமன், "நான் பதினான்கு வருஷம் காட்டுக்குச் சென்று வருவேன். என் தம்பி, உன் மகன் நாடாள்வான்" என்றார்.

கோசலையின் உள்ளம் பதறிற்று. ஆனால் அவள் பதறவில்லை. "நேற்று ராஜ்யம் தருகிறேன் என்றவர் இன்று ஏன் இப்படிச் செய்யவேண்டும், காரணம் என்ன?" என்று கேட்டாள். பக்கத்தில் நின்ற மந்திரி மகன் கைகேயி செய்ததை எடுத்துச் சொன்னான். 'இராமன் தன் வாயால் சொல்லக்கூடாது என்றிருந்துவிடுவர்' என்றே துளஸி அங்கு மந்திரி மகனையும் அழைத்துச் சென்றிருந்தார் போலும்!

அந்த வார்த்தை கேட்ட கோசலையின் நடத்தையைப் பாருங்கள். ஐந்து பாடல்களில் 'அவள் பலவாறு சொல்லி அரற்றினாள், ஏங்கினாள், இளைத்தாள், வீங்கினாள், விம்மினாள், விழுந்தாள், புழுங்குவாள், வெய்துயிர்ப்பாள்; பல கேள்விகள் கேட்டாள்' என்று வருணிக்கிறார் கம்பர்.

வருத்தம் ஏற்பட்டது உண்மைதான். அதைத் தவிர்க்க முடியாது. ஆனால் கவியானபடியால் கம்பர் தாம் எடுத்துக் கொண்ட உணர்ச்சியைச் சித்தரிக்க நேரும்போது சற்று தன்னை மறந்து மற்றைய கருத்துக்களுக்கு விடுமுறை தந்து விடுவார்.

துளஸியைப் பாருங்கள். அவர் உபதேசகரும் அல்லவா! "கோசலை தர்மம் அன்பு இரண்டுக்கும் இடையில் உழன்றாள், மூஞ்சூறைப் பிடித்த பாம்பைப்போல் (விழுங்கினால் குஷ்டம் வரும்; விட்டால் கண் குருடாய்விடுமாம்) தவிக்கிறாள். இராமனைத் தங்கச் சொன்னால் தர்மம் போய்விடும். போகச் சொன்னால் என் உயிர் ஊசலாடும், என்றெல்லாம் எண்ணிப் பார்த்து

'ஜோ கேவல பிது ஆயஸு தாதா
தௌ ஜனி ஜாஹு ஜான படி மாதா
ஜோ பிது மாது கஹேஉ வன ஜானா
தோ கானன சத அவத சமானா

தந்தைமட்டில் சொல்லியிருந்தாள் நீ தாயைப் பெரியவள் என்று எண்ணி இருந்துவிடலாம். தாயும் தந்தையும் சேர்ந்து சொல்லியபடியால் உனக்குக் காடே நூறு அயோத்திக்குச் சமானமாகும்" என்றாள்.

இந்த வார்த்தைகளில் கோசலையின் ஆற்றல் சால் அறிவுக்கு, இயற்கையாக எழும் உணர்ச்சிகளை மாற்றி மனதைக் கடமை கடவுள் இரண்டிலேயும் நிறுத்தி இன்பத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாவித்து விளங்கும் அறிவுக்குச் சான்று காண்கிறோம். கம்பன் சொல்லுக்கு ஒரு சரியான உதாரணத்தையும், கீதையில் சொல்லப்படும் ஸ்திதப்பிரக்ஞனுக்கு ஒரு எடுத்துக்காட்டையும் இங்கே துளஸி நமக்கு சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். கோசலை தேவி எந்தக் கட்டத்திலும் இதேமாதிரித்தான் நடந்துகொள்கிறாள். பரதனைச் சந்திக்கும் கட்டத்திலும் இராமனைச்சந்திக்கும் போதும் ஆற்றும் அரசனை அமர்த்தும் போதும் இதே அறிவைத் தான் கையாளுகிறாள். ஆனால் அவள் உள்ளம் அழுகிற

தில்லையென்பதில்லை. அவளும் சங்கடம்தான் அனுபவிக்கிருள். அதில் சந்தேகமில்லை. என்றாலும் திறம்கொள் கோசலையாக அறிவைப் பறிகொடுக்காமல் நடந்துகொள்கிருள்

இலக்குவனும் சீதையும்

நிற்க சமாசாரம் கேட்ட இலக்ஷ்மணன் ஓடிவருகிருன் அவன் கோபித்துக்கொண்டதாகத் துளஸி சொல்லவேயில்லை இராமன் நீதி உபதேசித்துத் தங்கச் சொல்கிருர். அவனே 'கீர்த்தி, சொத்து, நற்கதி யாருக்கு வேண்டுமோ அவருக்கல்லவா உபதேசம்? எனக்கு உம் கைங்கரியம்தான் வேண்டும்' என்று சொல்லிக் கிளம்பிவிடுகிருன். மாற்றம் அறியாத ஆழ்ந்த அன்புக்கும் பக்திக்கும் கைங்கரியத்துக்கும் எடுத்துக்காட்டு அவன்.

சீதையும் வருகிருள். மாமிமூலமே மரியாதை பிறழாமல் கணவனிடம் பெண்டிற்குரிய தர்மத்தை வலிவுறுத்தி இராமனிடம் அனுமதி பெற்று அவருடன் கிளம்பிவிடுகிருள்.

இலக்ஷ்மணனை ஈன்றவளோ, "பின்னும் பகர்வாள்; மகனே இவன் பின் செல்; தம்பி என்னும் படியன்று, அடியாரின் ஏவல் செய்தி; மன்னும் நகர்க்கேயிவன் வந்திடின் வா அதன்றேல் முன்னம் முடி" என்றனள்; பால் முலை சோர நின்ருள்.

'மனக்ரம வசனு காஹு ஸேவகாயி: மனம் வாக்கு காயத்தால் அண்ணனுக்கு ஊழியம் புரிந்து அவருக்கும் அவர் மனைவிக்கும் எவ்விதக் கஷ்டமும் நேராமல் பார்த்துக்கொள்' என்ருள் என்பதாகத் துளஸியும் சொல்கிருர். இராம

பக்தனல்லாத பிள்ளையைப் பெற்றவளைவிட மலடியே மேல் என்று அவள் கொள்கை. பிறகு அவர்கள் காடுபோகக் கிளம்புகின்றனர். பின் தயாராகி அரசன் அரண்மனைக்கு வருகின்றனர்.

---

7. நாடு இழந்தது, காடு அடைந்தது

இராமன் நாடு நீர்வான் என்றறிந்த நகரமாந்தர் பட்ட பாட்டை எடுத்துரைக்க இயலாது. அதற்கு எல்லை:

கன்னி நன் மயில்களும் குயிற்கணங்களும்
அன்னமும் சிறையிழந் தவனி சேர்ந்தன
வென்ன வீழ்ந்தழுந்தன ரிராமனல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலாதார்.

கம்பர் இவ்விதம், 'இராமனின் மற்றைய அறுபதினாயிரந் தாய்மார்கள் சிறகிழந்த பறவைகள் போல் வீழ்ந்தனர்' என்றார்.

துளஸியோ எல்லா நரநாரியருமே 'ஜனு வினு பங்க விஹங்க அகுலாஹீ(ம்) சிறகில்லாத பறவைகள் போல் உழந்தனர்' என்றார்.

தந்தையிடம் வந்தனர் மூவரும். வந்ததை அறிந்த தசரதன் அன்பினால் எழுந்து அவர்களை ஒவ்வொருவராகத் தழுவினான்.

ஔர கஹி அபராத கோயி, ஔர பாவை பல போக் |
அதி விசித்ர பகவந்த கதி கோ ஜக் ஜானை யோக் |

"யாரோ குற்றம் செய்யப் பலனை யாரோ அனுபவிக்க நேர்ந்ததே, விதியின் கதியின் விசித்திரம் தான் என்னே! இதன் மர்மத்தை யார் அறிவார்?" என்றெல்லாம் அரற்றிச் சீதையிடம் 'உனக்கார் அம்மா வனவாசம் தந்தது?' என்று அழ ஆரம்பிக்கவே கைகேயி பொறுமல் எழுந்து மரவுரி முதலியன தந்து 'இராமா, உனக்குத் தந்தை குணம் தெரியாதா? மெனக்கட்டால் உன்னை விடுவாரா?' என்று சொல்ல

முன்னர் நின்ற முனிவனைக் கைதொழாத்
தன்னதாருயிர்த் தம்பியும் தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினன்.

என்று கம்பன் சொல்லியபடி, வந்திவிப்ரகுரு சரணப்ரபு, சலே கரி சபஹிம் அசேத்: எல்லாரையும் மயங்கி விழவிட்டு பிராமணர்களையும் குருவையும் நமஸ்கரித்து இராமன் சென்றார் என்றார் துளஸியும்.

தசரதன் சுமந்திரரிடம் 'எப்படியாவது காட்டைக் காட்டிவிட்டு எல்லோரையும் அழைத்து வந்துவிடும் முடியாவிடில் சீதையைமட்டுமாவது அழைத்து வந்துவிடும்' என்று சொல்லி அனுப்பினர்.

தேர் போகிறது. மக்களும் சேர்ந்து பின்னல் போகின்றனர்.

கம்பன் ஆவிநீக்கின்ற தொத்ததவ்வயோத்தி மாநகரம் என்றார். துளஸியோ ஒரு படிமேலே போய் நகரில், 'வீடு சுடுகாடாயிற்று! ஜனங்கள் பூதம்போல் ஆயினர்!' என்கிறார்.

இருவரும் யானை, குதிரை, பசு, எருமை கோடிக்கணக்கான ஆடல் மிருகங்கள், சாதகப்புள், மயில், கிளி, குயில், மைனு, அன்னம் சகோரம் எல்லா மிருகங்களும் புட்களும்

அப்படியே வருத்த மேலீட்டால் அசங்காமல் ஆடாமல் நின்றன என்று ஊரின் நிலையை வருணிக்கின்றனர்.

பிறகு கூடச் சென்றவர்கள் எவ்வளவோ சொல்லியும் திரும்பாமல் தமசா நதிக்கரைவரை சென்று (லோக) சோக் சிரமபஸ கபோ ஸோயீ, (மக்கள்) வருத்தம் சிரமம் காரணமாகத் தூங்கிவிட்டனர். இராகவன் சுமந்திரரிடம் சொல்லி ஊருக்கே இரதத்தைத் திருப்பியனுப்பிவிட்டுத் தாம் தருமருடன் மேலே சென்றனர். இது கம்பர் சொல்லும் கதை. துளஸியோ, "இராமபிரான் சுமந்திரனிடம் சுவடுகள் ஏமாறும் வண்ணம் இரதத்தை ஓட்டிவாரும், போய்விடுவோம்' என்று சொல்லி அவ்வாறே சென்றனர் என்பர். இது வான்மீகியை ஒட்டியதாகும். காலையில் எழுந்த மக்கள் ஏமாந்து ஊருக்குத் திரும்பினர்.

குகன் பெற்ற பேறு

பிறகு எல்லோரும் சிருங்கவேரபுரம் வந்து சேர்ந்தனர். அங்கே தங்கியிருக்கும் சமயம் குகனுக்குச் சமாசாரம் தெரியவரவே அவன் ஓடிவந்தான் கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்துக்கொண்டு.

கரி தண்டவத பேண்ட் தரி ஆகே |
ப்ரபுஹிம் விலோகத அதி அநுராகே ||

வணக்கம் செய்து கையுறைப் பொருள்களை எல்லாம் எதிரே வைத்து நின்றான்.

'இருக்கி யீண்டென்னலோடும் இருந்திலன்' என்று கம்பன் குகனை வியக்கிறார். துளஸியோ, 'பூசே உ குசல நிகட் பைடாயீ!' என்று தன்னருகே இருத்தி அவனிடம் குசலப்ரச்னம் செய்த இராமன் பெருங்குணத்தை வியக்கிறார்.

குகன் இராமனுடன் தங்கிவிட்டான். இரவு ஆயிற்று

மாலைவாய் நியமம் செய்து மரபுளி யியற்றி வைகல்
வேலை வாயமுதன்னானும் வீரனும் விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர் வரிவில் ஏந்திக்
காலை வாயளவும் தம்பியிமைப்பிலன் காத்துநின்றான்.

கம்பருடைய இந்தச் செய்யுளில், 'பாய் விரித்தது யார்?' என்று குறிப்பிடவில்லை. துளஸி, குஹ சப்பாரி சாதரீ பனாயீ! குச கிசலய ம்ருது பாம சுகாயீ!: என்று குகன் நாணலாலும் மெல்லிய தளிர்களாலும் படுக்கை விரித்தான்' என்கிறார்.

இலக்ஷ்மணன் காத்து நிற்க குகன் தன் பரிவாரங்களுடன் விழித்திருந்து காத்திருந்தான் என்று கம்பர் சொல்லும் இரு பாடல்களின் பொருள் கூறும் பெரியோர்கள் வியாக்யானம் செய்யும்போது, 'குகன் இலக்ஷ்மணனிடம், பரிவாரங்கள் குகனிடம் சந்தேகம் கொண்டே இருந்தனர், என்பர்.

துளஸியும் அந்தக் கருத்து வரும் வண்ணமே இலக்ஷ்மணன் வீராசனத்தில் இருந்ததைச் சொல்லிவிட்டு,

குஹ புலாயி பாஹரு ப்ரதீதி டாம்வ டாம்வ ராக்கே: குஹன் நம்பிக்கைக்கொண்ட பரிகாரங்களை அங்கங்கே நிறுத்தினான் என்றார். அவ்ன் நிலையைக் கம்பர்

வெம்பி வெந்தழியா நின்ற நெஞ்சினன் விழித்தகண்ணன்;...கண்ணீரருவி சோற நின்றான்' என்றார்.

துளஸியும் 'ஹருதய விஷாதா...லோசன ஜல பஹயீ— உள்ளம் வெந்தழியக் கண்ணீருக்குகின்றான்' என்று வருணிக்கிறார். வருந்தும் குகனுக்கு இலக்ஷ்மணன் கர்மத்தின் பலனையும் சுக துக்க உணர்வை மாற்றும் அவசியத்தைப் பற்றியும் சொல்லித் தேற்றுகிறார்.

இங்குதான் இராமன் சுமந்திரனைத் திருப்பி அனுப்புகிறார். இராமன், "வருந்த வேண்டாம்," என்று சொல்லி அனுப்புகிறார். இலக்ஷ்மணன் ஏதோ கடுமையாகச் சொல்ல இராமன் சுமந்திரரிடம் அவன் சொன்னதைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார். சீதை, "காலம் மாறியதன் காரணமாக நான் தங்கள் முன் பேசுகிறேன் மன்னிக்கவேண்டும்" என்று சொல்லி, 'நான் சௌகரியமாகப் போய்வருகிறேன், கவலைகொள்ள வேண்டாம் என்று மாமியாரிடமும் மாமனாரிடமும் சொல்லுங்கள்', என்று சொல்லுகிறாள்.

படகோட்டி

மேலே இவர்கள் செல்லும் கதை சொல்லப்படுகிறது. படகை அழைக்கப் படகோட்டி வர மறுக்கிறான்; "உம் கால் தூசி பொல்லாதது. படகு முனி மனைவியானால், தொழில் என்ன ஆவது?" என்று சொல்ல அவன் உள்ளம் அறிந்த இராமன் "கழுவிக் கொள்!" என்றதும் அவன் இராமபிரான் காலைக் கழுவி நீரைத் தானும் பானம் செய்து தம்மவருக்கும் தந்து உய்ந்தான்.

அக்கரை சென்று மறுநாள் காலை பிரயாகையைத் தரிசித்தனர். பரத்வாஜ முனிவரிடம் சென்றனர். அன்று அங்கு தங்கி மறுநாள் கிளம்பினர். இருடி அவர்களுடன் கூட நான்கு சிஷ்யர்களை அனுப்பிவைத்தார். சிஷ்யர்கள் சற்று தூரம் உடன்சென்று திரும்பினர்.

வழியிலுள்ள மக்கள்

வழியில் கேட்டவர் எல்லோரும் ஓடி ஓடிவந்து பார்த்தனர். பேர் ஊர் தெரியாத ஒரு சிறு வயதுள்ள தபஸ்வியும் வந்தார். ராமனையும் அன்னையையும் வணங்கி ஆசிபெற்றுச் சென்றார். அவர் யார் என்பது சர்ச்சைக்குரிய விஷயமாக இன்னும் இருந்துவருகிறது. துளஸிதாஸரே தான் என்றும் கூறுவர்; ஹனுமான் என்றும் கூறுவர். அவர் குகனையும் வணங்கிச் சென்றார்.

மேகங்கள், மரங்கள் எல்லாம் அவர்களுக்கு ஆனந்தமாய்த் துணைபுரிகின்றன. நடுவில் பார்த்த மக்கள் எல்லாம் தத்தம் அதிர்ஷ்டத்தை மெச்சுகின்றனர். தாமதமாக விஷயம் அறிந்தவர்கள் ஓடிச்சென்று பார்க்கின்றனர். அதுவும் முடியாதவர்கள் வருந்தி, நொந்துகொள்கின்றனர்.

வால்மீகி ஆசிரமம்

அப்படியே எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இராமன் தம்பியுடனும் பிராட்டியுடனும் வரும் முறையைக் கம்பன்

'வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ வெனுமிடையாளொடு மிளையானொடும்
போனான்—என்று சொல்கிறார். பிரணவம் கால் கொண்டு நடந்ததுபோல் அகாரமான இராமன் முன்னும் மகாரமான லக்ஷ்மணன் பின்னும் உகாரமான லக்ஷ்மி நடுவேயும் போயினர் என்று வைஷ்ணவ பக்தர்கள் கூறுவர். அதை அப்படியே ஸ்ரீ துளஸி

ஆகே ராம லக்ஷன புனி பாச்சே...
உபய மத்ய ஸிய ஸோஹதி கைசீ
ப்ரும்ம ஜீவ பிச மாயா ஜைஸீ.

முன்னே இராமன், பின்னே இளையவன் நடுவே சீதை போவது 'பிரும்மத்துக்கும் ஜீவனுக்கும் நடுவேமாயை போவது போலிருந்தது' என்கிறார். பொய்யோ எனும் இடையாள் என்பதற்கும் இல்லையோ என்று ஐயப்படும்படியான, பிரும்மம் ஜீவன் இரண்டுக்கும் இடைப்பட்ட, மாயை என்ற பொருளும் வருவிக்கலாம்!

சீதை இராமன் அடிச்சுவடுகளைத் தப்பி நடக்கிறாள். இலக்குவன் இவர்கள் இருவருடைய அடிச்சுவடுகளையும் தப்பி நடக்கிறான்.

அவர்கள் வான்மீகி ஆசிரமம் வந்தனர். வான்மீகி வணங்கினார், துதித்தார்.

நான் எங்கே தங்கலாம் என்று வான்மீகியிடம் இராமன் கேட்க — நீங்களா என்று சிரித்துவிட்டு 'உன் பக்தர்கள் இதயத்தில் தங்குங்கள்; உன் அழகைக் காண விழைபவர்கள் உள்ளத்தில் தங்குங்கள், உங்களை எப்பொழுதும் துதிப்பவர்கள், காமக்ரோதம் முதலியன அற்றவர்கள், அகங்காரம் நீங்கியவர்கள், உங்களைத் தவிர மற்றொன்றையும் எண்ணாதவர்கள், பிறரிடம் பொறாமை கொள்ளாதவர்கள், பிறர் துக்கங்கண்டு வருந்துகிறவர்கள், உங்களையே தந்தை தாய் குரு தெய்வம் எல்லாம் என்று எண்ணுகிறவர்கள், உங்கள் பெருமையையும் தம் சிறுமையின் எல்லையையும் அறிந்தவர்கள், மமகாரம் அற்றவர்கள், என்றவாறாக பதினான்கு இடங்கள்

உண்டே என்று ஏற்றிவிட்டு, 'சித்திரகூடத்தில் சென்று தங்குங்கள்!' என்று சொல்லுகிறார்.

அங்கே சென்றனர் மூவரும். ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்து எடுத்து இலக்ஷ்மணன் அழகாகப் பர்ணசாலையைக் கட்டினான்.

வசந்தன் ரதியுடன் மாறு வேஷத்தில் வசிக்கும் மன்மதன்போல் இராமன் தம்பியுடனும் பிராட்டியுடனும் வசிக்க ஆரம்பித்தார். • வனவாசிகள் வந்து தங்களாலியன்றவரை கைங்கிரிய லாபத்தைப் பெற்றனர். இராமபிரான் மற்ற இருவரையும் கவனிப்பது இமை கண்களைக் கவனித்துக்கொள்வதுபோல இருந்தது என்கிறார். கம்பன் யாகத்தைக் காப்பாற்றக் கையாண்ட உவமை இங்கே அழகுபெறுகிறது,

மலைகள் எல்லாம் சித்ரகூடத்தையும் நதிகள் எல்லாம் மந்தாகினியையும் எண்ணிப் பொருமினவாம்.

குகன் திரும்பினான்

இப்பொழுதுதான் குகன் திரும்பியதாகச் சொல்கிறார் துளஸி. வந்து பார்த்தான் சுமந்திரன் போகவில்லை. குதிரைகள் போனால்தானே! அவை புல் மேயாமல், கண்ணால் நீர் விட்டுக்கொண்டு ஏதோ ரதத்தையே முன்பின் இழுக்காதவைபோல் நிற்கின்றன. இராமன் பேரைக் கேட்டால் திரும்பிப் பார்த்துக் கனைக்கின்றன.

வந்து பார்த்தான் குகன்; பலவாறு சொல்லித் தேற்றி ரதத்துடன் நான்கு வீரர்களை அனுப்பினான்.

திரும்பிய சுமந்திரன்

சுமந்திரன் மீளாத்துயரத்தில் முழுகி, 'நான் எதற்காகத் திரும்புவேன்? திரும்பி, அவர்களிடம் என்ன சொல்வேன்? அரசனிடம், 'இராமனில்லை' என்றால் உயிரை விட்டு விடுவாரே. 'தென்புலக்கோமான்றாதிற் செல்கெனோ!' என்றெல்லாம் உழந்து நகருக்கு இரவில் வந்து சேர்ந்தார். 'நீர் காய்ந்தால் களிமண் கூட அல்லவா வெடித்து விடுகிறது. நம் இதயம் அதைவிடக் கடினமாகவல்லவா ' ஆகி விட்டது!' என்று வருந்தியவராய் வந்து சேர்ந்தார்.

விஷயம் அறியவே நகர மாந்தர் கதற ஆரம்பித்தனர். அரசன் மீண்டும் மக்களைப்பற்றிக் கேட்டார்.

பிறகு, தாபஸ அந்த சாப சுதி ஆயி; கௌசல்யஹிம் சப் கதா ஸுநாயீ: குருட்டு முனிவர் இட்ட சாபம் ஞாபகம் வர தசரதன் கோசலையிடம் எல்லாக் கதையையும் சொன்னார் நான் இனிப் பிழையேன் என்று சொல்லி, ராம, ராம, என்றவாறே விண்ணுலகத்துக்குச் சென்று விட்டார் இறந்ததும் எல்லோரும் அநேகவிதமாகப் பிரலாபித்தனர் என்கிறார் துளஸி. கம்பர் கோசலையின் புலம்பலை ஆறு கவிகளில் தேக்கித் தருகிறார்.

கைகேயியையும் திட்ட அவர்கள் மறக்கவில்லை என்று இரு கவிகளும் சொல்கின்றனர்.

'வேதமுனிவனும்' விதி செய்த வினையை நோக்கி விம்மினார். பிறகு மற்றவருக்கும் உறுதியுரை தந்து, (தேல நாவ பரி பூப தனு ராக்கா) தைலத்தொட்டியில் தசரதன் உடலை இடச் செய்தார்.

பிறகு பாதனை அழைத்து வா என்று ஆட்களை அனுப்பினார்.

"தண்டார்ப் பாதற் கொண்டு அணைக" என்று வினின் மன்னவனுணை எழுதி முடங்கல் எடுத்தோரை! என்று கம்பன் சொன்னார். அதாவது உண்மையைச் சொல்ல வேண்டாம்! என்று குறிப்பு.

துளஸியும், "வேகமாக ஓடி பாதனை அழைத்து வா! அரசன் நிலை சொல்லாதே!" என்று உத்தரவிட்டதாகக் கூறுகிறார்.

ஆனால் பொய் சொல்லக் கூடாது என்பதற்காக குருவின் ஆணை! என்று மட்டும் சொல்லி அனுப்பியதாகக் கூறுகிறார் துளஸி.

8. பரதன் பெருமை—1

முடி மறுத்த பரதன்

பரதன் பறந்தோடி வந்தான், சத்துருக்கனனும் உடன் வந்தான். கெட்ட சகுனங்கள் தோன்றுவதனால் மனது நொந்திருந்தான் பரதன். ஒரு நிமிஷத்தை ஒரு யுகமாக எண்ணி வருகிறான். நகரை நெருங்கியாகி விட்டது. நகர் நிலையை ஸ்ரீ துளஸி, "மனஹு ௱ம் ஸப் ஸம்பதி ஹாரி!: சொத்தை இழந்தவர்கள் போல் நகரமக்கள் எல்லாம் தோற்றம் தந்தனர்" என்றார். கம்பன், "லக்ஷ்மி தான் போய் விட்டாளே" என்று கூறி ஏற்கனவே சொன்னபடி 'ஆவி நீத்த உடலென வாயதே!' என்கிறார்.

ஸ்ரீ ஹத சர சரிதா வன பாகா நகர விசேஷ பயாவன லாகா: குளம் நதி தோட்டம் காடு எல்லாம் பொலிவு இழந்து நகரம் பயங்கரமாயிருந்தது. கம்பன் இதை விளக்கப் பல விஷயங்களை எடுத்துச் சொல்கிறார்.

வந்த பரதனை மிகவும் சந்தோஷமாக வரவேற்றாள் கைகேயி. அவள்" தீதிலர் எந்தையர், என்னையர், எங்கையர்?" என்று கேட்டாள். துளசியின் கைகேயியும், "பூசதி நைஹர் குசலஹுமாரே?: என் தாய் வீட்டில் எல்லோரும் சுகமா?" என்று கேட்கிறாள்' பரதனோ, "எங்கே என் தந்தை? தாய்மார் எல்லோரும் சுகமா? என் அண்ணன் தம்பி அண்ணி எல்லோரும் எங்கே?" என்று கேட்டார்.

கைகேயி சர்துரியமாகப் பதில் சொல்கிறாள். "பரதா, நான் மந்தரையின் உதவி கொண்டு ஒரு நல்ல காரியத்தை

ஏற்பாடு செய்து முடித்தேன். இந்த விதி குறுக்கே புகுந்து ஒரு இடையூறைப் புகுத்தி விட்டது! உன் தந்தை நல்ல காரியத்தினிடையே வானுலகு சென்றுவைத்தாரே!" பத்திரிகைகளில், "அடிபட்டு இறந்தான்" என்று ஏதோ செத்தவன்மேல் பிசகு போல் தலைப்பு எழுதுகிறார்களே, அது போல் அவளும், "தசரதன் வேண்டுமென்றே குட்டிச் சுவராக்கிவிட்டான்" என்ற தோரணையில் பேசினாள்.

பரதன் அதுகேட்டு, "ஐயோ தந்தையே, போய்விட்டீர்களா, என்னை இராமபிரானிடம் ஒப்புவிக்காமல் கூடப்போய் விட்டீர்களே!" என்று அரற்றி தனைத் தேற்றினன் ஒரு வகை. ("தீர தரி": துளசி) பிறகு பரதன், "சரி இனி எனக்கு எல்லாம் இராமன்தான். போகிறேன்!" என்று சொல்கிறார். துளசியின் பரதனோ, "தந்தை ஏன் இறந்தார்?" என்று கேட்கிறார். இரண்டுக்கும் பதில் ஒன்றுதான். ஆகவே கைகேயி விஸ்தாரமாக நடந்ததைச் சொல்லிவிடுகிறாள். சொல்லி, "தானவர் வலி தவ நிமிர்ந்த தானையத் தேனமர் தெரியலான் தேவர் கைத்தொழ வானகம் எய்தினன். வருந்தல் நீ" என்றாளாம். இதே கருத்தைத் துளசியும் "தாத ராவ நஹிம் ஸோசன யோகு—அரசன் வருந்தத் தக்கவரில்லை ஜீவனசகலஜன்ம பலபாயே – உயிருடன் இருக்கும் போது நன்கு அனுபவித்தார். அந்த அமரபதி ஸதன சிதாயே—கடைசியில் இந்திரலோகமடைந்தார்" என்று சொன்னாள் எனச் சொல்லுகிறார்.

இதைக் கேட்ட பரதன் சீறி எழுந்தான். "அடி பாபி இந்த ருசியிருந்திருந்தால் என்னைப்பெற்று ஏன் வளர்த்தாய்? தசரதன் தந்தை, இராமன் அண்ணன், இலக்ஷ்மணன் தம்பி

இந்தப்பேறு பெற்ற நான் உன்னையா தாயாகப் பெற வேண்டும்? இந்த எண்ணம் எழுந்தபோது உன் உடல் துண்டு துண்டாகவில்லையா? பேசும்போது நாக்கு எரிந்து வாயில் புழுக்கள் ஏற்படவில்லையா? நல்லவர் என் தந்தை; உன் சுபாவத்தை அறியாமல் இருந்தாரே? இராமனுக்குத் துன்பம் விளைவிக்கத் துணிந்த நீ யார்? யாராயிருந்தால் என்ன! நீ மறைந்து ஒழி!'' என்று கூறிவிட்டுத் திரும்பிய சமயம் கூனி வந்தாள். சத்துருக்னன் பார்த்தான். இலக்ஷ்மணன் உடன் பிறந்தவனல்லவா?' என்கிறார் துளசி. அவளுக்குத் தன்னாலான பூசையைச் சமர்ப்பிக்கிறான் அவன்.

இருவரும் கோசலையிடம் செல்கின்றனர். அவள் காலைப் பிடித்துக்கொண்டு அழுகின்றனர். இந்த இடத்தில் வான்மீகி கௌசல்யை நிஷ்டூரமாக வார்த்தை சொன்னதாகவே சொல்வர்- கம்பரும் பரதன் அரற்றலைக் கேட்டுத் தான் சந்தேகம் நீங்கியவள் போலவும், அப்படியும் நம்ப இடமில்லாதவள் போலவுச் பேசுவதாகச் சொல்வர்,

துளசியோ ஸ்திதப்ரக்ஞையான கோசலை வாயால் அவ்வித வார்த்தைகளைச் சொல்விக்கவேயில்லை. கோசலா தேவி பரதனைக் கண்டதும் துக்கித்தவர்கள் வேண்டியவர்களைக் கண்டால் அதிக துக்கம் அடைவதைப்போல் அடைந்து மூர்ச்சித்துக் கீழே விழ, பரதனும் தன்னை மறந்து விழுந்து விட்டார். பிறகு, 'அம்மா என் இராமன் எங்கே; என் அண்ணி எங்கே? கைகேயி ஏன் பிறந்தாள்? பிறந்தவள் மலடியாக வாவது இருந்தாளா? அம்மா, என்னைப்போன்ற நலங்கெட்டவன் உலகில் கிடையாது, என்னால் தானே தாயே உங்களுக்கு இந்த நிலை எய்திற்று? மூங்கில் காட்டில்

நெருப்பு வைத்தவன் நானே' என்றெல்லாம் அழ, கோசலை எழுந்து இராமனைத் தழுவுவதுபோல் தழுவி ஆனந்தம் எய்தினாள். பிறகு இலக்ஷ்மணன் என்றே எண்ணி சத்துருக்கனனைத் தழுவி துன்பம் மறந்தாள். பிறகு மடியில் இருத்தி "அப்பா வருந்தாதே, எல்லாம் காலத்தின் கோலம். அப்பா, இராமன் தன் தந்தை வாக்கைக் காப்பாற்றினான். நான் தான் பொல்லாதவள் நானும் உடன் போகவில்லை. உயிரையும் அனுப்பவில்லை. சீதையையும், இலக்ஷ்மணனையும் பார் அரசவைத்தான் பாரேன்! இராமன் போன்ற பையனுக்கு நான் தாயாகத் தக்கவளா?" என்றாள்.

பரதனும் கேட்டு வருந்தினார். அம்மா தந்தை, தாய், குரு இவர்களைக் கொன்ற பாபம், பெண் குழந்தையைக் கொன்ற பாவம், அரசனுக்கு விஷமிட்டபாபம்; பூதகணங்களை வழிபடுபவன் செய்யும் பாபம், வேதத்தை விற்று, தர்மத்தைக் கறக்கிறவன் செய்யும் பாவம், மற்ற இப்படிப்பட்ட மகாபாதகங்களைச் செய்தவனுக்கு ஏற்படும் பாபம் எல்லாம், நான் இதை அறிந்திருந்தால், எனக்கும் சேரும் என்று கடுமையான சபதம் செய்ய ஆரம்பிக்கவே, கோசலை வருந்தி, 'பரதா நீ மனம் வாக்குக் காயங்களால் இராமனுக்கு அன்பன் அல்லவா? சந்திரன் விஷம் கொட்டினால் கூடக் கொட்டலாம். நீ இராமனுக்கு விரோதம் செய்ய மாட்டாயே!' என்றெல்லாம் அவனை மடியில் போட்டுக்கொண்டு சமாதானம் செய்தாள்.

கம்பரும் அறங்கெட முயன்றவன், மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்; குரவலர் குழலியை வாளிற் கொன்றுளோன்... என்ற பல பாதகர்களின் பட்டியலைத் தருகிறார்.

பிறகு வாமதேவர் வசிஷ்டர் முதலானோர் வந்தனர். தசரதன் உடலை சரயு நதிக்கரையில் விதி முறைப்படி எரித்தனர். வேதம் விதித்தபடி பரதன் கிரியைகள் செய்தான். கம்பர் சத்துருக்னன் செய்ததாகக் கூறுவர், மன்னன் பரதன் உறவைத் தீர்ந்து சென்றதால். 'ஐந்தும் ஐந்து நாள், தந்தை தன் வயிற்றரும மியாவையும் முந்துநூலுளோர் முறையின் முற்றினன்' என்றபடி 'சோதி சுமிருதி சப வேத புராண கீனபரத தச ராத்ர விதான' என்பர் துளசியும். 'சதி' யாகத் துணிந்தவர்களை பரதன் தடுக்க இராமனைப் பார்க்கும் ஆசையால் தாய்மார்கள் உயிர் தங்கினர்.

எல்லாம் முடிந்த பிறகு மாதவன், மாநிலத்தறிஞர் தம்மொடு மந்திரக்கிழவர் எல்லோரும் கூடினர். நோக்கினல் சுமந்திரன் நுவலலுற்றதை வாக்கினலன்றியே உணர்ந்த மாதவன் என்று கம்பரும் துளஸி அப்படிச் சொல்லாமல் வசிஷ்டர் தானே சொல்வதாகவும் சொல்வர்.

முதலில் வசிஷ்டர் பல நீதிகளையும் தருமத்தையும் எடுத்துரைத்தார். தசரதன் இறந்தது மனதுக்குத்துயர் தருவது தானயினும் எல்லாவிதத்திலும் பெருமையுடன் தான் இறந்தானதலால் வருந்தற்க. வேதமறியாத பிராமணன், செங்கோல் ஓச்சாத அரசன், தன் கடமை நிறைவேற்றாத மக்கள் இவர்கள் தான் வருந்தற்குரியர். கணவனை ஏமாற்றியபெண், தன் விரதத்தைக் காப்பாற்றாத பிரும்மசாரி, பாகவதர்களுக்கு அபசாரம் செய்த மனிதர் இவர்களுக்கு வருந்த வேண்டும். உங்கள் போன்ற பிள்ளைகளைப் பெற்ற தசரதன் வருந்தற்குரியவன் அல்லன் என்று சொல்லி இராமன் பெருமையையும் வருணித்து விட்டு, தந்தை வார்த்தையைக் காப்பாற்றிப்

பெருமை அடைந்தனர் அவனும், பரசுராமனும்! என்று எடுத்துக் காட்டினர்.

கம்பர் சொல்லுங்கால் வசிஷ்டர், உன் தாய் தந்தது, ஆள் என்று கூறினதாகச் சொல்கிறார். துளஸியோ, வசிஷ்டர், உன் தந்தை வாக்கை உண்மையாக்கு, ஆள் நீ! என்று சொன்னதாகக் கூறுவர். மந்திரிமார்களும் கொசல்யை முதலிய தாய்மார்களும் அப்படியே சொல்லினர்.

பரதன் இந்தச் சொல் கேட்டதும் அப்படியே உருகி நீராகி விட்டான். கமலக் கைகளைக்கூப்பி, 'பெரியோர் வார்த்தை எதிர்த்துப் பேசுதல் பாவம், மன்னிக்க வேண்டும்.

மூன்று உலகினுக்கொரு முதல்வனாய் முதற்றோன்றினான் இருக்க யான் மகுடஞ்சூடுதல் சான்ற வருரை செய்த தருமமாயதே!

என்ன கஷ்டம்! தப்பிதம் கூட வா நீங்கள் சொல்வதனால் தர்மமாகப் பார்க்கிறது?

பிது சுரபுர, சிய ராம வன கரன கஹஹூ மோஹிம் ராஜ்!-தந்தை வானுலகத்தில், சீதையும் இராமனும் காட்டில், என்னை அரசனெச் சொல்கிறீர்கள்!

கைகேயியின் பிள்ளை, இராமனுக்கு எதிரிநான் என் இராஜ்யத்தில் நீங்கள் நன்மையை எதிர்பார்க்கிறீர்கள்! நீங்கள்

நன்னெறி யென்னினும் நான் இந் நாணில
மன்னுயிர்ப் பொறை சுமந்து இருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கன் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூட்டல் காண்டிரால்

சோக் சமாஜ ராஜ்ய கேஹி லேக்கே, லஷன ராமசிய பத வினு தேக்கே. வருத்தக் கும்பலான இந்த இராஜ்யம்

எதற்கு? இராமன் லக்ஷ்மணன் பாதஸேவனம் இல்லாமல் எல்லாம் வீண்!

ஆனால் நான் கைகேயின் மகன் அல்லவா. நீங்கள் நான் எந்தப் பாபத்துக்கும் தகுந்தவன்! என்று எண்ணுகிறீர்கள். அது நான் செய்த பாவம்.

இலக்ஷ்மணன் அதிர்ஷ்டம் செய்தவன். கைங்கரியம் செய்யும் பேற்றைப் பெற்று விட்டான்......" என்றெல்லாம் சொல்லி முடிவாகக் கம்பன் சொன்னது போலவே

ப்ராத காலசலி ஹௌம் பிரபு பாஹிம்-காலையில் நான் இராமபிரானிருப்பிடம் செல்வேன் அவர் நல்லவர் என் அபராதத்தை மன்னிப்பார்' என்று தன் முடிவைத் தெரிவித்தான்.

சபையோர், தாய்மார் மக்கள் எல்லோரும் இதைக் கேட்டு பரதஹீ கஹஹிம் சராஹி! பரதனைப் புகழ்ந்தனர். "வாழிய நின் புகழெ"ன்று வாழ்த்தினர்.

பரதன் போவதறிந்த நகரமே எழுந்தது. பரதன் இதைக் கண்டு; இராஜ்யம் இராமன் சொத்தல்லவா! இப்படி விட்டுச் செல்லலாமா என்று யோசித்துத் தக்கவரைத் காவலாக வைத்துவிட்டுக் கிளம்பினான்.

தாய்மாருக்குப் பல்லக்குத் தயார் செய்தான். வசிஷ்டர் அருந்ததியுடனும் அக்னியுடனும் கிளம்பினர். எல்லோருக்கும் முன்னால் இரு சகோதர்களும் கால்நடையாகக் கிளம்பினர். தாய் அருகில் சென்று 'குழந்தைகளே ரதத்தில் ஏறிக் கொள்ளுங்கள்' என்று ஆக்ஞாபிக்க அவர்களும் இரதத்தில் ஏறிக் கொண்டனர்.

எல்லோரும் சிங்கவேரபுரத்திற்கு வந்து சேர்ந்தனர் குகன் விஷயமறிந்தான். யோசிக்கத் தொடங்கினான்: "எதற்காகப் பரதன் சேனையுடன் வருகிறான்? இது சூழ்ச்சியின் ஊன்றிய சேனைதாம். இராமனைக் கொல்லவேதான் பரதன் வருகிறான். ஆம், விஷக்கொடியில் அமுதமா பழுக்கும்?"

அவன் உடனே தன் வீரர்களைப் பார்த்து, 'துறையை அடையுங்கள். இறப்பதற்குத் தயாராகுங்கள், பரதனை விடாதீர்கள் உயிருடன். அவர்கள் ஆற்றில் இறங்கலாகாது. சண்டையில் மரணம், அதுவும் கங்கைக் கரையில், என்றும் அழியும் தேகம் இராம காரியத்திற்காக-இந்த மரணம் யாருக்குக் கிடைக்கும்?" என்று கூறி உற்சாகமூட்டி நிறுத்தித் தான் முன்னேறினான்.

ஆனால் ஏற்பட்ட சில சகுனங்களால் குகன் மனம் தயங்கிற்று. சகுனம் பார்த்தால் இவன் இராமனை அழைக்க வல்லவா செல்கிறான் போலிருக்கிறது! என்று எண்ணினான்.

எதிரே வந்து பார்த்தான் "விரோதத்தையும் அன்பையும் ஒளிக்க முடியுமா?" பரதன் நிலை கண்டான். மனம் மாறி எதிரேசென்று தொலைவிலிருந்தே ரிஷிகளைப் பெயர்சொல்லி நமஸ்கரித்தான். அவர்கள் பரதனிடம் குகன் இராமன் அன்பன் என்று தெரிவித்தனர்.

இராமன் அன்பன் என்று கேள்வியுற்றதும் பரதன் இரதத்திலிருந்து குதித்து ஓடி வந்தான். குகன் அவன் பாதத்திலும் நமஸ்காரம் செய்ய பரதன் அவனை மார்புறத் தழுவினான். இராமன் தழுவிய சரீரமல்லவா, ஆனால் துளஸி சொல்கிறார், 'இராமன் தழுவியதை விட பக்தன் தழுவியது குகனுக்கு இன்னம் பெரிய பாக்யம்' என்கிறார்.

அன்று அங்கே தங்கி குகன், இராமன் அவர் தம்பி, சீதாபிராட்டி எல்லோரும் தங்கிய இடத்தைக்காட்டி தங்கிய விதத்தையும் சொல்ல பரதன் தன்னாலன்றோ இந்த விதம் நேர்ந்தது என்று நொந்து கொள்கிறான்.

மறுநாள் காலையில் அக்கரையேற்றி விடுகிறான் குகன் பரதன் முதலானோரை. குகன் முன்னேசெல்ல குரு, பின்னால் தாய்மார்கள் பல்லக்கு, அதற்கும் பின்னால் பரதனும் சத்ருக்னனும் கால்நடையாகச் சென்றனர். கம்பர் கதைக்கேற்ப பரதன் அந்தச் சோலையிலிருந்தே நடந்ததாகச் சொல்வர். துளஸி கதைப்படி இராமன் இங்கிருந்து தான் நடந்து சென்றபடியால் பரதனும் இராமன் காலால் நடந்த இடத்தில் நான் தலையாலல்லவா நடக்க வேண்டும்!' என்று சொல்லி விட்டு நடந்து செல்கிறான். "சேவக தர்மம்" சாமானியமா என்று கேட்டுத் துளசி சேவகதர்மத்தின் விவரமாகிய மரத்துக்கு ஒரு விதையை இங்கே போட்டு வைக்கிறார்.

பரதன் நல்லவன்

பிரயாகை வந்து திரிவேணியில் ஸ்நானம் செய்தனர். வருந்தின பரதனைத் திரிவேணி அசரீரியாய் ஆசீர்வதித்தது. உன்னிடம் இராமனுக்கு மட்டற்ற அன்பு என்று சொல்லி அவன் உளத்துக்கு ஆறுதல் தந்தது.

மீண்டும் பரத்வாஜரிடம் வந்தனர் எல்லோரும். பரத்வாஜரும் பரதன் புகழ் ஒரு மங்காத சந்திரன என்று அவன் புகழை விவரித்தார் இராமனுக்கு உன்னிடம் மட்டற்ற அன்பு என்றார். அன்று அங்கேயே தங்கிய அவர்களுக்கு ரிஷி தன்

தவவலிமையால் தக்கதோர் விருந்து தந்தார். மற்றவர் நன்கு அருந்தி நன்கு இருக்க சகோதரர்கள் மட்டும் கிழங்கை அருந்தி இருந்தனர். கம்பர் சித்தரித்த பரத்வாஜ-பரதசம் பாஷணைக்கும் இதற்கும் வேறுபாடு உண்டு.

பரதன் காட்டு வழி சென்றார். இராமனை நெருங்கி வருகின்றனர். மீண்டும் தேவர்களுக்குச் சந்தேகம் எழுந்தது. தேவேந்திரன் பிரஹஸ்பதியிடம் அழுதான் அவர் 'பரதன் இராமனுக்குப் பிரியமானவன். அவனிடத்தில் வாலாட்டுதல் அடாது. தூர்வாஸர் அம்பரீஷரிடம் தன் கோபத்தைக் காட்டிப் பெற்ற பரிசை மறக்காதே' என்று கூறி பரதன் சேவக தர்மம் தெரிந்தவன் உனக்குக் கெடுதல் வராது என்று குறிப்பாக வருவதையும் தெரிவித்து அவனை அமர்த்தினார்.

பரதன் கூட்டம் மேலே செல்கிறது.

சீதைப்பிராட்டி கனவு ஒன்று கண்டாள். பரதன் வருந்தி வருவதாக அவள் பார்த்தாள். இதைக் கேட்ட இராமன் எதற்காகப் பரதன் வரவேண்டும் என்று யோசித்தார்.

இதற்கிடையில் மறுநாள் காலையில் சேனையுடன் அரசன் வருவதாக வேடர்கள் சொன்னதைக் கேட்ட லக்ஷ்மணன் வழக்கப்படி நீதி பேச ஆரம்பித்தான்:

"அண்ணா, கேட்காத போனாலும் சொல்கிறேன். பரதன் வருவது நல்லதற்கல்ல "அரசு மதம்" லேசானதல்ல. அது நகுஷனை ஆட்டி வைத்தது; சதியிடம் செல்லத் துணிந்தான். சந்திரனைப் பிடித்தது; குருவின் மனைவி

யிடம் தகாத பேச்சுப் பேசினான். பரதன் எம்மாத்திரம், கைகேயியின் மகன் தானே!

ஆயினும் அவன் இங்கே இராமன் தனிமையாக இருப்பதாக எண்ணி வருகிறான். இலட்சுமணன் இருப்பதை மறந்து விட்டான்!

கொடுங்கள் உத்தரவு!'' என்று வேண்டினான்.

இராமன், 'லக்ஷ்மணா,

பரதஹிம் ஹோயி ந ராஜமத விதி ஹரி ஹர பத பாயீ. கபஹு ̄ம் கி காஞ்சீ ஸீகரணி க்ஷீர சிந்து விநஸாயீ?

பரதனுக்கு அயோத்தி என்ன, பிரம்மா, விஷ்ணு, சிவன் பதவி கிடைத்தால் கூட அவனுக்குக் கர்வம் ஏற்படாதே. பாற்கடலில் விழுந்த சில மோர்த்துளிகள் பாற்கடலை நஷ்டப் படுத்த முடியுமா?

"கொசு மேருவைத் தூக்கிக்கொண்டு பறந்துவிடலாம். அகஸ்தியரைச் சிறிய குழியில் உள்ள ஜலம் விழுங்கி விடலாம். பரதனை மட்டும் கர்வம் தொடமுடியாது!" என்றார்

துளசி சொல்கிறார்: ஏ ராமா, பரதன் குணம் கவிகளுக்கே பாட அரிதாயிற்றே. உன்னைத் தவிர யார் அவன் புகழை அறிய முடியும்? என்று ஆகாயவாணி கேட்டது அந்தச் சமயம்.

இத் தருணத்தில் ஒரு குன்றின் மேல் ஏறிக் குகன் இராமன் இருக்கும் இடத்தைப் பரதனுக்குக் காட்டினான்.

பார்த்தான் பரதன். பர்ணசாலை வாசலில் இராமன் அமர்ந்து மற்றவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். இலட்

சுமணன் முகமும் இராமர் முதுகுப் பக்கத்தையும் பார்த்தார் பரதன்.

ஆற்றங்கரையில் எல்லோரையும் நிறுத்திப் பரதன் குகனையும் தம்பியையும் மட்டும் அழைத்துக் கொண்டு மேலே சென்றார்.

மரங்கள் மறைக்க இலக்ஷ்மணன் வெகு நேரம் வரை பரதனைப் பார்க்க இயலவில்லை.

பார்த்தபோது பரதன் அண்ணா என்று அலறி விழுவதைத் தான் பார்த்தான். இலக்ஷ்மணன் பதறி விட்டார். நெருங்கச் சங்கோசம். முன்னமே சந்தேகித்தவனல்லவா? ‘அண்ணா, பரதன்!’ என்றான்.

இராமன் எழுந்தார். மேல் துணி எங்கோ, வில் எங்கோ விழுந்தது. எழுந்து ஓடி வடிந்து “ தயவு அறத்தை” எனத் தன்னை மறந்துப் பரதனைத் தூக்கித் தழுவி அப்படியே சிலையாக நின்று விட்டார். பார்த்தவரும் தம்மை மறந்தனர்.

9. பரதன் மஹிமை — 2

சேவகன் தர்மம்

பிரும்மா, விஷ்ணு, மகாதேவன் முதலியவர்கள் மனது கூடச் சென்று பார்க்கமுடியாத உச்ச நிலையை அடைந்திருந்த அந்த அண்ணன் தம்பி சிநேகிதத்தை எப்படி நாம் சொல்ல முடியும்? எந்தக் கவியினுடைய சொல்லுக்கு அவ்வளவு அர்த்த புஷ்டி யிருக்கிறது? இந்த அன்பைப் பார்த்து தேவர்கள் பயந்தனர்; தேவகுரு அறிவுறுத்த அவர்கள் விழித்து மலர் மாரி பொழிந்தனர்.

பிறகு ஸ்ரீ இராமபிரான் சத்துருக்னனை அணைய, அந்தச் சமயம் இலட்சுமணன் பரதன் காலில் வீழ்ந்து வணங்கினார். பிறகு பரதனும் சத்ருக்னனும் சீதா தேவியின் காலில் விழுந்து வணங்கினர். தேவியும் அவர்கள் தலையைத் தம் கமலக் கரங்களால் தடவிக் கொடுத்து அமரச் செய்தாள். இப்படி எல்லோரும் தம்மை மறந்து இருக்கும் சமயத்தில் குகன் வணக்கமாக, "நாதா, ஊர் மக்கள், தாய்மார், குருமார் எல்லோரும் வந்துள்ளனர்." என்று தெரிவிக்கவே இராமன், "சீய சமீப்ப ராக்கி ரிபுதமனு — ஸீதையின் சமீபத்தில் சத்துருக்னனை விட்டு ஓடினார்:

சென்று குருதேவரை இரு சகோதரர்களும் நமஸ்கரித்தினர். குகனும் தொலைவில் இருந்தே நமஸ்காரம் செய்தானும். வசிஷ்டர் அவனை அணைந்தார். பிறகு இராமன் இலட்சுமணனுடன் சேர்ந்து ஏககாலத்தில் எல்லோரையும் தக்கவாறு வணங்கி அவர்களுக்கு இன்பம் தந்தார். "ஜிமி கட கோடி ஏக் ரவி சாஹீம் கோடிக்கணக்கான குடங்க

ளில் ஒரே சூரியன் பரவுவதில்லையா?'' அதில் என்ன ஆச்சரியம்! என்கிறார் துளசி. முதலில் கைகேயிக்கும் பிறகு எல்லாத் தாய்மாருக்கும் ஸ்ரீ ராமன் வணக்கம் செலுத்தினார்.

இராமபிரான் வசிஷ்டரை "ஆசிரமத்துக்குச் செல்ல வேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார். மற்றவர் தங்களுக்கு வசதியான இடங்களில் தங்கிக் கொள்ள, இராமபிரான் தாய்மார் முதலானோருடன் ஆசிரமத்திற்குள் சென்றார்.

சீதை ஓடோடியும் வந்து குருமாரையும், அவர் தம் மனைவியரையும் நமஸ்கரித்து விட்டு மாமியார்களிடம் வந்தவுடன் அவர்கள் நிலையைப் பார்த்து நடுங்கி விட்டாள். எப்படியோ நமஸ்காரம் செய்து எழுந்தாள்.

குருதேவர் அரசன் கதியைச் சொல்ல, இராமன், 'ஓ' என்று கதறத் தொடங்கினார். தன் அன்பு காரணத்தால் தான் தந்தை உயிரைத் துறந்தார் என்று தெரிந்ததும் மிகவும் வருந்தினார்.

சீதை, இலக்ஷ்மணனும் கூட வருந்த ஆரம்பிக்கவே முனிவர் அவர்களுக்கு ஆறுதல் கூறி அமர்த்தினார். மந்தாகினி நதியில் ஸ்நானம் செய்து விரதம் இருந்து மறுநாள் சிரத்தையுடன் இராமன் கிரியைகளைச் செய்தார். எல்லாம் கிரமமாக முடிந்தன.

இரண்டு நாட்கள் சென்றதும் இராமன் வசிஷ்டரிடம் 'குருதேவா தாய்மார்கள் இப்படி பழம், வேர், கிழங்குகளைப் புசித்துக் கொண்டு எவ்வளவு நாள் இருக்க முடியும்? கருணை கூர்ந்து அவர்களை அழைத்துச் சென்று விடவும். அரசனும் இல்லாமல் தாங்களும் இங்கே இருந்து விட்டால்

நாடு தீமையுறும்.'' என்று வணக்கமாய் வேண்டவும், அவர் "இராமா! உன்னைப் பார்க்காமல் இதயம் உலர்ந்த மக்கள் உன் தரிசன நிழலில் இன்னும் சில நாட்கள் இருக்கட்டும்!'' என்று சொல்லவே, மக்கள் களித்தனர். அவர்கள் ஆனந்த மாக, வேடுவர்கள் விருந்தையும் புகழ் மொழியையும் உண்டு, வனத்தின் சோலையையும், இராமன் அழகையும் கண்டு காலம் போக்கினர், கவலையெல்லாம் மறந்து.

'மாயையின் உருவாகிய சீதை அவர்களுக்குத் தக்கபடி உரு எடுத்து எல்லோருக்கும் பணி புரிந்து இன்பம் ஊட்டி னாள்.'

கைகேயியோ இரக்கத்தின் உருவாக, வெட்கம் பிடுங்கித் தின்ன உளமும் உடலும் குறுகக் காலம் கழித்தாள்.

பரதன் இரவும் பகலும் கவலையே உருக்கொண்டு காலம் கழித்தார். ஒரு காலை வசிஷ்டர் சபை கூட்டினார். சொன் னார்: "இராமன் பெருமை வாய்ந்தவர். பிரபு. பகவான். அவர் தேவ காரியத்திற்காக இவ்விதம் காட்டில் வாடுகிறார். அவர் பெருமையை எல்லோரும் அறிவர். நாமும் அவர் உள் ளப்படி நடக்க வேண்டும். அவரை அழைத்துச் சென்று நம் அரசனாக்கிக் கொள்ள வேண்டும். யோசித்துச் சொல் லுங்கள். :கேஹி விதி அவத சலஹிம் ரகுராயி; கஹஹு சமுஜி ஸோயி கரைம் உபாயி!, எவ்விதம் ரகுலத் தோன் றல் அயோத்தி வருவார்? யோசித்துச் சொல்லுங்கள்!'' என்றார். "பரதா நீயும் சொல்'', என பரதன், "நீங்கள் சொல்கிறபடி நான் கேட்கிறேன். நான் என்ன அறிவேன்?'' என்று கலங்கிக் கூறினார். வசிஷ்ட முனிவர் "பரதா இரா மன் எண்ணம் வைத்தால் தான் நன்மை கிடைக்கும். எல்

லாம் தொலைந்துபோகும் என்று தோன்றினால் புத்திசாலிகள் பாதியை விட்டாவது பாதியைத் தேற்றிக் கொள்வர். ஆகவே நீங்கள் இரண்டுபேரும் காட்டுக்குப் போகவதாக இருந்தால் இராமனை மீட்க முயலலாம்'' என்றார். பரதன் ஆனந்தமாய், 'அப்படியே செய்யுங்கள்!' என்று சந்தோஷக் கூத்து ஆடினார்.

பிறகு எல்லோரும் இராமன் எதிர் சென்றனர். வசிஷ்ட முனிவர் இராமபிரானிடம், 'இராமா நீ எல்லாம் அறிந்தவன் எல்லோரும் மனம் மகிழும்படி உனக்குத்தான் நடந்து கொள்ளத்தெரியும்.' என்று ஆரம்பித்தார் இராமன் 'தாங்கள் சொல்வது எனக்கு வேத வாக்கு. ஆயலா கியே முதித புர பாக்கா! உங்கள் கட்டளையே சரி என்று ஏற்று நடந்தால் நன்மை உண்டு' என்று சொல்லவே வசிஷ்டர், 'பரதன் சொல் வதைக் கேள்!' என்றார். இராமன் ஆனந்தமடைந்து 'பரதா! பரதனைப்போல் உலகத்தில் தம்பிகள் எங்கே பிறக்கின்றனர். அவன் குரு பக்தி, நன் மனது, நற்குணம் எல்லாவற்றையும் எப்படிப் புகழுவேன், அவன் எதிரிலேயே?'' என்று சொல்லி ஒதுங்க வசிஷ்டர் பரதனிடம், ''சங்கோசமின்றிச் சொல்'' என்று உத்தரவிட்டார்.

அவர் ஆரம்பித்தார்: ''அண்ணா குற்றத்தை மறந்து என்னைக் கொண்டாடும் உங்கள் அன்பை நான் அறிவேன். தாய் பொல்லாதவள் என்று சொல்ல விரும்பவில்லை. நான் என்ன குற்றமற்றவனா? பாதகம் தான் கொஞ்சமாகப் புரிந் திருக்கிறேனா? நான் பாபத்தின் பலனறியாமல் தாயை நிந் தித்துவிட்டேன். அரசன் அன்பையும் தாயின் செய்கை யையும் யாவரும் அறிவர். ஆனால் மற்றத்தாய்மார்கள், நகர மாந்தர்கள் படும் துயர் எனக்குச் சகித்தற்கரியதாய் இருக்

கிறது. என் காரணமாக இந்த அநர்த்தம் நேர்ந்தது. சுகுமாரர்களான நீங்கள், வணக்கத்துக்குரிய நீங்கள், வனத்தில் திரிகிறீர்கள்......" என்றெல்லாம் வருந்த இராமன் ஆறுதல் கூறி, "பரதா எதற்கு வீணில் நீ உன்னைப் பாபி என்று சொல்லிக் கொள்கிருய்? உண்மையறியாதவன், பெரியோரிடம் பழகாதவன் தான் உன்னைப் பாபி என்பான். பரதா வீணில் குதர்க்கம் செய்து வருந்தாதே. அன்பும் விரோதமும் சொல்லித்தானு தெரியவேண்டும்? உன்னை நான் அறியேனு? வசிஷ்டர் ஆணைப்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிருய், சொல்; நான் செய்கிறேன்". என்று உத்தரவிட்டார்.

இப்படி இராமன் பொறுப்பையெல்லாம் பரதனிடத்தில் விட பரதன் நன்கு ஆலோசிக்க நேர்ந்தது. முடிவாக

'நான் என்ன சொல்வது, பிரபோ எனக்கு வீண் பயம் இருந்த காரணத்தால் புத்தி தெளிவாயில்லை. உங்கள் எதிரே வந்த பிறகு எனக்கு ஏதோ தெளிவு ஏற்படுகிறது. ஒன்று மட்டும் உண்மை. நான் தங்கள் சேவகன். எந்த சேவகன் தன் நன்மைக்காக எஜமானனுக்குக் கிலேசமோ, வெட்கமோ வரச் செய்கிருனே அவன் புத்தியில்லாதவன் சேவகன் தன் நன்மை ஆசை எல்லாவற்றையும் துறந்து ஊழியம் செய்யக் கடமைப் பட்டவன். நீங்களே முடிவு செய்து உத்தரவிட்டுவிடுங்கள். எனக்கு ஒரு வேண்டுகோள் உண்டு. நான் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாட்டையும் செய்து பொருள்களையும் கொணர்ந்திருக்கிறேன். தயவு செய்து அவைகளை ஏற்றுக்கொண்டு உபயோகம் உள்ளதாக ஆக்குங்கள்.

"நான் சத்ருக்னனுடன் வனம் செல்கிறேன். அனுமதி யுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களுடன் வருகிறேன். இலட்சுமணனை அனுப்பிவிடுங்கள். இல்லையெனில் நாங்கள் மூன்று தம்பிகளுமே வனம் போகிறோம். தாங்கள் சீதை யுடன் திரும்பிவிடுங்கள்.

"தங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ செய் யுங்கள். நான் சிறுவன், சேவகன். என்னையும் காப் பாற்றுங்கள்! ஸ்வாமி பேச்சுக்கு சேவகன் எதிர்த்துப் பேசி னால் வெட்கமே வெட்கும் என்பர். ஆகவே உத்தரவிடுங்கள்!" என்றார் பரதாழ்வான்.

மீண்டும் தன்மேல் பாரம் சுமத்தப்பட்டதை அறிந்த ஸ்ரீ இராமபிரான் சங்கோசத்துடன் யோசித்துக் கொண் டிருக்கும்போதே ஜனகன் தன் பரிவாரங்களுடன் வந்திருப் பதாகத் தூதர்கள் வந்து சொல்லவே எல்லோரும் அவரை வரவேற்க எழுந்தனர். மக்கள் மனதில் 'முடிவு என்ன ஆனாலும் இராமதரிசனமும் உடன் இருத்தலும் இன்னும் சில நாட்களுக்கு நிச்சயம்' என்று எண்ணி மகிழ்ந்தனர்.

பிறகு விவரமாக ஜனகன் எல்லோருடனும் சேர்வது விவரிக்கப்படுகிறது. அயோத்தியரசன் இறந்ததறிந்த ஜன கன் அங்கே ஆளனுப்ப பரதன் எல்லோருடனும் காடு சென் றதை அறிந்து இங்கேயே வந்துவிட்டார்.

சமயம் பார்த்து ஜனகன் அந்தப்புர மங்கையர் கோசலை முதலியவரிடம் சென்று துக்கம் விசாரித்தனர்.

சீதையும் பகல் முழுவதும் தன் தாய்மாரிடம் இருந்து இரவு ஆனதும் மாமிமார்களிடம் சென்று விட்டாள்.

இரவில் ஜனகன் பரதனைப் பற்றியே தன் மனைவியிடம் பேசிக்கொண்டிருந்தார். நாட்கள் சென்றன.

மீண்டும் சமயம் கிடைத்ததும் எல்லோரும் செய்ய வேண்டியதைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர்.

இதனிடையில் இராமன் மீண்டும் வசிஷ்ட முனிவரிடம் "நாளாகிவிட்டது ஜனக மகாராஜாவும் அவர் ராணியரும் வந்தே பல நாள்கள் கடந்து விட்டன. ஆகவே நீங்கள் யோசித்துச் செய்ய வேண்டியதைச் சொல்லி செய்விக்க வேண்டும்" என்று வேண்டிவிட்டுத் தன் குடிலுக்குச் சென்றார்.

வசிஷ்டர் அரசரிடம் சென்று 'நீர் தான் ஒரு வழி சொல்ல வேண்டும்' என்னவே அவர் "நான் ஏன் இங்கு வந்தேன்! எதைச் சொல்வது?" என்று இடிந்து நொந்து கொண்டார். பிறகு எல்லோரும் பரதனிடம் சென்றனர். சென்று பரதனிடம், "பரதா நீ இராமன் குணமறிவாய். செய்ய வேண்டுவதைச் செய்" என்ன அவர் மீண்டும், "நான் சேவகன், சுவாமியிடம் என்ன சொல்வேன்! சுயநலம் பார்ப்பவன் சுவாமி—சேவக தர்மத்தை நடத்த முடியுமா? ஆகவே அந்த விஷயத்தை நன்கு யோசித்து எனக்கு உத்தரவு தாருங்கள்" என்று சொல்லி விட்டார்.

மீண்டும் சபை கூட இராமன் பரதனிடம், " நீ நன்கு யோசித்துச் சொல் " என்றார். பலவாறாக யோசித்து விட்டு பரதன் 'ஸஹஜ ஸநேஹ ஸ்வாமி ஸேவகாயி, ஸ்வாரதசல பல சாரி விஹாயி, ஆக்ஞாசம நமுஸா ஹிப சேவா; ஸோ பிரஸாத ஜனு பாவை தேவா:

சுயநலம், கபடம், நான்குவித பயன்கள் எல்லாவற்றை யும் விட்டு ஸகஜமான அன்புடன் ஸ்வாமி கட்டளையை நிறை வேற்றுகிறேன். சேவகனுக்கு அதைவிட வேறு தர்மம் கிடையாது. அந்தப் பிரசாதம் எனக்குக் கிடைக்கட்டும், என்று கூறினார். நான் குற்றம் செய்து விட்டேன் ப்ரபு; பிது வசன மோஹபஸ் பேலி, ஆயவும் பஹாம் சமாஜசகேலி! தங்கள் வார்த்தை தந்தை கட்டளை எல்லாவற்றையும் அஞ் ஞானத்தால் மீறி நான் இங்கே வந்து விட்டேன். மன்னிக்க வேண்டும் என்றும் கெஞ்சினார்.

இராமன் மிகவும் மனம் பூரித்து, "பரதா. கவலை யுறாதே, குருவும் ஜனக மகாராஜனும் துணையாயிருக்க உனக் கொன்றும் குறை வராது. நீ சென்று ஆள். நான் பதினான்கு வருஷம் கழித்து வருகிறேன்," என்று உத்திரவிடவும் பரதன் ஆணையை சிரமேற்றாங்கி, "நான் தங்கள் பிரதிநிதியா கத் தான் ஆள்வேன்; பதினான்கு ஆண்டு சென்று மறு நாள் காலை வராத போனால் உயிரை விடுவேன்," என்று சபதம் செய்ய இராமன் சரி என்று தன் பாதுகைகளைத் தந்தார்.

மீட்டும் அங்கே ஐந்து நாட்கள் தங்கியிருந்து பரதன் நதிகள் முதலிய புண்ணிய ஸ்தலங்களைப் பார்வையிட்டார். தான் கொண்டு சென்றிருந்த தீர்த்தங்களை எல்லாம் அங்கே ஒரு புண்ணிய கூபத்தில் சேர்ப்பித்தார். அந்தக் கூபம் இன்னம் பரத கூபம் என்று சொல்லப்படுகிறது.

பிறகு அன்புடனும் மரியாதையுடனும் ஏந்தி வந்து பாதுகைகளை நந்திக் கிராமத்தில் சிம்மாசனம் ஏற்றி பரதன் அவைகளை முன்னிட்டு நாட்டை ஆண்டார்.

இது வரையில் நாம் பரதன் பெருமை தரும் நடத்தை யைப் பார்த்தோம். இது வால்மீகியோ கம்பரோ தந்திருக் கும் சித்திரத்துக்கு மாறுனது தான்

முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றினும்
பின்னை யொப்பிலா நீ பிறந்து பார்
என்னதாகில் யான் இன்று தந்தனென்
மன்ன போந்து நீ மகுடஞ் சூடு எனு. என்றும்
மலங்கி வையகம் வருந்தி வைக நீ
உலங்கொள் தோள் உனக்கு உறுவ செய்தியோ
கலங்குறுவணங் காத்தி போந்து எனுப்
பொலங்குலாவு தாள் பூண்டு வேண்டினுன்

என்றெல்லாம் கம்பர் சொல்லி பரதன் வாயால் தர்க்கம் செய்ய வைத்துள்ளார் ஜாபாலி மற்ற முனிவர்கள் நாத்திக வாதம் பேசினர்.

ஆனுல் துளசி கண்ட பரதன் வேறு. அவர் சேவகன் எஜமானனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ப தற்கு எடுத்துக் காட்டாய் நடந்து கொள்ள முயன்றுர். ஒவ் வொரு பகுதியிலும் ஒவ்வொருவரும் சங்கோசப்பட்டுப் பிறர் மேல் பாரத்தைப் போடுவதும், தன் தர்மத்தையும் பிறர் மனதையும் போற்றுவதையும் துளஸி அழகு பெறக் கூறியிருக்கிறுர்.

பரதன் இராஜ்யத்தை நடத்தாதது பிசகு என்று ஒப் புக் கொண்டார். நடத்துகிறேன் என்று ஏற்றுக் கொண் டார்.

இது சுயநலம் என்று கருத இடம் தருகிறது. அவர் நடத்தை வஞ்சனே என்று எண்ண இடம் தருகிறது. வசை பாவ ஏதுவாகிறது.

தர்மம் போகிறது. அதனால் மோக்ஷம் தொலையலாம். அர்த்தம் போயிற்று. மனம் எண்ணிய ஆசை போயிற்று. எல்லாம் போனாலும் ஏன் ஏற்றுக் கொள்கிறார்?

இந் நாளுக்கு மிகவும் தேவையான சேவக தர்மத்தை நடத்திக் காட்ட வல்லவோ பரதன் துயரம் தரும் அந்தப் போக்கை மேற் கொண்டார் !

இதைவிடத் தியாகம் வேறு என்ன இருக்க முடியும்? முடிவு எல்லோருடைய கதைப்படியும் ஒன்றே யானாலும் மற்ற கவிஞர் முன் பிறந்தோனுக்குத் தான் அரசுரிமை உண்டு என்று பரதன் கருதியதையும் அதை எவ்விதத்தாலும் நிறை வேற்ற முயன்றதையும் வற்புறுத்துவர்.

துளசியோ, அந்த தர்மத்துடன், அதற்குக் கொஞ்சம் கூடப் பழுதுவாராத வகையில் சேவகன் கடமையையும் அவன் தன் எஜமானனிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும் வற்புறுத்தினார். அதற்கேற்ற பாத்திரம் பரதனைத் தவிர யார் ஏற்பட முடியும் !

அதனால் அன்றோ, திரிவேணி, பரத்வாஜர் நகர மாந்தர் இராமன், ஜனகர், குருமார்கள், தாய்மார்கள், மாமிமார்கள், தேவர்கள், காட்டு மக்கள் எல்லோரும் அவர் புகழை வாயார உரைத்து இன்பமடைகின்றனர் !

இராமன் குணத்தில் ஆழ்ந்து அவன் கட்டளையே நடத்தற்குரியது, தான் பராதீனன் என்ற எண்ணத்தை வேறு யார் இப்படித் திறம்பட அழகுபட, செயலில் நடத்திக் காட்ட முடியும்?

அதனால் அன்றோ பரதனைப் பரதாழ்வான் என்று கொண்டாடுகிறோம்.

கம்பன் கூட கோசலை,

முன்னை நுங்குல முதலுளோர்கள் தாம்
பின்னை யாவரே பிகர்க்கு நீர்மை யார்?
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள்
உன்னி உன்னி நைந்து உருகி விம்முவாள்.

என்பர். குகனும் ஆயிர ராமர் நின் கேழாவரோ, தெரியின் அம்மா! என்று ஆச்சரியப்பட்டான் அன்றோ! குகப்பெருமானிடம் புகழ்ச்சி பெற்ற பரதாழ்வான் மஹிமைதான் என்னே.

ஆரணிய காண்டம்

10. பரதம்பதிகளை விரும்பிய மூவகையர்.

எல்லாம் ஆசைதான்!

ஆரணிய காண்டத்தில் தம்பதிகளை விருப்பிய மூன்று வகை யானவர்களைப் பற்றியும் அவர்களுக்குக் கிடைத்த பயனும் கூறப்படுகிறது.

ஒரு வகையினர் பக்தர்கள். அவர்கள் ஸ்ரீமந் நாராயணனை இதயத்துள் ஏந்தித் துதித்துக் கொண்டிருந்தவர்.

அவர்களை இராமபிரான் சந்தித்து நற்கதி தந்தார்.

மற்றொரு வகையினர் இராமனையோ சீதையையோ உண்ணவோ அல்லது துன்புறுத்தவோ விரும்பினர். அவர்களுக்கும் தக்க தண்டனை தந்தார் ஸ்ரீ இராமபிரான்.

மீட்டும் ஒரு வகையினர் ஸ்ரீ ராமனையோ சீதையையோ மணக்க விரும்பினர். அவர்களுக்கும் செய்கைக்குத் தக்க தண்டனை கிடைத்தது. முன்னவர் தாங்கள் மட்டும் முடிந்தனர் அல்லது சிறை பெற்றனர். பின்னவரோ குலத்துடன் அழிந்தனர்.

கோணற் கண்!

முதன் முதலாக ஆரணிய காண்டம் சயந்தன் கதையுடன் ஆரம்பமாகிறது.

சுந்தர காண்டம் சூளாமணிப் படலத்தில் கம்பர்
" நாகமொன்றிய நல்வகையின் தலை மேனாள்
ஆகம் வந்தெனை அள்ளுகிர் வாளினளைந்த
காகமொன்றை முனிந்து அயல் கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய்

என்ற ஒரு வேண்டுகோளைச் சீதா பிராட்டியார் அனுமானிடம் விடுவிப்பதாகச் சொல்லியுள்ளார். ஆனால் கம்ப ராமாயணத்தில் பிறகு இந்தக் கதையை ஸ்ரீ ஹனுமார் எங்கும் சொன்னதாகத் தெரியவில்லை.

ஹனுமாருடைய தூண்டுதலால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுவதுண்டு துளசிதாஸர் எழுதிய இராமசரித மானசத்தை (இராமசரிதமான, சத்தை!). அது உண்மை என்று நம்பலாம். அதனால்தான் அன்று செய்யாமல் விட்ட வேலையை இன்று செய்கிறவர் போல ஆரணிய காண்டம் ஆரம்பித்தவுடனேயே துளசி வாயால் சயந்தன் கதையைச் சொல்லி விடுகிறார்.

அந்தப் புத்தி கெட்டவன் சீதாபிராட்டியின் காலைக் கொத்தினான். (ஆகத்தை என்று துளஸிதாஸர் சொல்லவில்லை) விழித்த இராமன் அம்பு விட்டார். சயந்தன் எங்கும் சுற்றி எங்கும் யாவரும் துணை மறுப்ப மீண்டும் இராமனிடமே வந்து அருள் பெற்றான்.

கற்பின் இலக்கணம்

பிறகு இராமபிரான் முதலிய மூவரும் அத்திரி முனிவரிடம் சென்றனர். அத்திரி முனிவர் வேண்டித் துதித்தார். அநசூயாதேவி சீதையை அருகில் அழைத்து அவள் கற்பைச் சிலாகித்தார். பிறகு சில பெண் தருமங்களையும் உபதேசித்தார்.

தைரியம், தர்மம், மித்ரன், மனைவி என்ற நான்கும் ஆபத்துக் காலத்தில் சோதிக்கத் தக்கன.

"கனவிலும் பரபுருஷனை எண்ணாதவளை உத்தமி என்றும் பரபுருஷனை சகோதரர்கள் போல் எண்ணுபவளை நடுவள் என்றும், தர்மத்தாலோ, குலத்தின் பெருமையாலோ தடுக்கப்பட்டவளாய்ப் பிறரைச் சேராதவள் கடையள் என்றும் நேரம் சந்தர்ப்பம் கிடைக்காததனாலும் பயத்தினாலும் பிறரைச் சேராதவள் மிகவும் கடையள் என்றும் பத்தினிப்பெண்கள் நான்கு வகைப்படுவர். பதியை வஞ்சித்து பரபுருஷர்களிடம் கலவி செய்கிறவர்கள் ரௌரவாதி நரகம் போவார்கள். பிறவியினால் அபவித்ரமான பெண்கள் பதிசேவைசெய்து மங்களையாக ஆகிறார்கள்; நற்கதியை அடைகிறார்கள்." என்றெல்லாம் சொன்னாள்.

பிறகு அத்திரியை வணங்கி இராமன் மேலே நடந்தார். வழியில் விராதன் வந்தான். ஒரே வாக்யத்தில் துளசி அவனை முடிக்கிறார். அதை விட அவசரமாய் அவனுடைய சாபவி மோசனம் ஏற்பட்டு நல்ல உருவம் பெற்று மேலே செல்கிறான். ஒரு படலமே கம்பனிடம் பெற்றவன் இவன்.

சரபங்கர்

பிறகு சரபங்கரிடம் வருகின்றனர். சரபங்கர் இராமபிரானைத் துதிக்கிறார். பிறகு யோகாக்னியில் எரிந்து இராமன் கிருபையால் வைகுண்டம் செல்கிறார். இராமன் மேலே சென்றார். " முனிவர விருந்த விபுல ஸங்க லாகே: பல முனிவர்கள் கூட்டமாக அவருடன் வந்தனர். ' மாதவர் அனைவரும் எய்தினர், அல்லல் சொல்லுவான்.'

அடியார் கடன்

இராமன்

நிசிசர ஹீன கரௌம் மஹி புஜ உடாய பன கீன்ஹ |
சகல முனின கே ஆச்ரமன ஜாயஜாய சுக தீன்ஹ. ||

சூரறுத்தவனும் சுடர் நேமியும் ஊரறுத்த ஒருவனும் ஓம்பினும் ஆரறத்தினொடன்றி நின்றார் அவர் வேரறப்பன் வெருவன் மின் நீர் என்றார் என்று கம்பன் சொன்னபடி, உலகத்தில் அரக்கர் இல்லாதபடி செய்து விடுகிறேன் என்று இராமன் சபதம் செய்தார். அடியார் இன்னல் தீர்ப்பதை விடச் சிறந்த கடனுண்டோ! பிறகு இன்னல் காத்து இங்கினிது உறைவாயெனச் சொன்ன மாதவர் பாதந் தொழுகை உயர் மன்னன் மைந்தனும் வைகினன். ஒவ்வொரு முனிவர்

ஆசிரமத்துக்கும் சென்று அவர்கள் மனதைத் திருப்திப் படுத்தினன்.

பிறகு அம்மூவரும் சுதீக்ஷ்ண முனிவரிடம் சென்றனர் அவர் அகஸ்தியருடைய சிஷ்யர் தன் இதய கமலத்துள் பரம் பொருளை வைத்து தியானித்து இன்பம் அடைந்து கொண்டிருந்தார். இராமன் அங்கே சென்று அவருக்குத் தரிசனம் தந்தார். அவர் மாறாத பக்தி வேண்ட அருளி விட்டு அகஸ்தியரிடம் சென்றார். சுதிக்கணனும் உடன் வந்தார்.

அகத்தியர் காட்டிய இடம்

அவர் முன்னே சென்று தன் குருவிடம் இராமபிரான் வந்தான் என்று சொல்ல அகஸ்தியர் எழுந்து ஓடி வந்தார். கண்களில் நீர் பொங்க உடல் புளகமடைய வந்த அவர் பாதத்தில் இராமபிரான் முதலானோர் வீழ்ந்து வணங்கினர்.

அங்கே எல்லா முனிவர்களும் சூழ அமர்ந்த இராமன் அகத்திய முனிவரிடம் 'நான் வந்த காரியத்தைத் தாங்கள் அறிவீர்கள். அது நிறைவேறத் தக்க வழியை அறிவிக்க வேண்டும்' என்று வேண்டினர். அகத்தியரும் அவரைத் துதித்து விட்டு,

ஹை பிரபு மனோஹர் டாவும், பாவன பஞ்சவடி தேஹி நாஉம்; தண்டக வன புனீத பிரபு கரஹூ, உக்ரசாப முனிவர் கே ஹரஹூ: பிரபு. மனோகரமான இடம் ஒன்று உண்டு. அதன் பெயர் புனிதமான பஞ்சவடி என்பதாம். தண்டக வனத்தையும் பாவனமாக்கி ரிஷிகளைப் பிடித்துப் பீடிக்கும் சாபத்தையும் நீக்குவாயாக!' என்று சொல்ல இராமன் புறப்பட்டார்.

பஞ்சவடி செல்லுங்கால் கழுகுக் கரசரான ஜடாயுவையும் சந்தித்து விட்டுக் கோதாவரி நதி சமீபமாகவே ஒரு பர்ணசாலை நிருமித்துக் கொண்டு அங்கே தங்கினர்.

லக்ஷ்மண கீதை

அங்கு ஒரு நாள் இலக்குவன் ஸ்ரீராமனிடம் ஞானம் வைராக்யம், மாயை, தங்கள் கருணை தரும் பக்தி, ஈசுவரன் ஜீவபேதம் எல்லாவற்றையும் பற்றி என் பிரமை தீரும் வண்ணம் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

இராமபிரான், சுருக்கமாகச் சொல்கிறேன் கேள். நான் என்னுடையது நீ உன்னுடையது என்று எண்ணுவதெல்லாம் மாயையாம். இந்திரியங்கள் அறியக் கூடிய எல்லை வரையில் உள்ளதெல்லாம் மாயை என்றறி. அதன் பேதமும் சொல்கிறேன்.

"வித்தை இரண்டு விதம்; ஒன்று பர வித்தை மற்றொன்று அபர வித்யை. இதில் இரண்டாவது துஷ்டை. இதன் வசப்பட்டவன் உலகமாகிற கிணற்றில் விழுகிறான். முதலில் சொல்லப்பட்டது உலகத்தை சிருஷ்டிக்கிறது. அது பகவான் அதீனத்திலுள்ளது.

ஞானம் அபிமானம் அற்றதாக எல்லாவற்றிலும் பிரும்ம ரூபத்தைக் காண்கிறது. மூன்று குணங்களையும் விட்டவன் வைராக்யம் உடையவன். தன்னை மாயையின் ஈசுவரன் என்று அறியாதவன் ஜீவன். பந்தத்தை அறுத்து மோக்ஷம் தருபவன் ஈசுவரன்.

"தர்மத்தினால் வைராக்யம், அதனால் யோகம், அதனால் ஞானம் கிடைக்கிறது. எந்த சாதனத்தினால் என்னை இளகச் செய்யலாமோ அது பக்தியாம்.

“சத்சங்கம், சுய தர்மத்தில் சிரத்தை இவை எல்லாம் பக்திக்கு சாதனங்கள்.

“சிரவணம், கீர்த்தனம், பாதசேவனம், ஸ்மரணம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம் என்று ஒன்பது விதமான பக்தி வழி சொல்லுவார்கள். எல்லா விதத்தாலும் என்னை பஜிப்பவனிடம் நான் அடிமைப் படுகிறேன்.” என்று உபதேசம் செய்தார்.

ஒரு தலைக் காமம்

பஞ்சவடியில் இருந்த சமயத்தில்தான் இராவணன் தங்கை சூர்ப்பநகை வந்தாள். இந்த இரு குமாரரையும் பார்த்தவுடன் இதயம் நைந்தாள். அழகைக் கண்டு நைவது பெண்கள் இயற்கை.

திங்களிற் சிறந்தொளிர் முகத்தள் செவ்வியளாய், (ருசிர ரூப தரி) அழகிய உருவம் ஏந்தி பிரபுனிடம் வந்தாள். வந்தவள் ;காமுறு காமத்தன்மை தாங்களோருரைப்பது என்ப, தாமெனலாவதன்றால் அருங்குல மகளிர்க்கம்மா என்ற போதிலும் (தும் சம புருஷ ந மோ சம நாரீ!) உன்னைப் போல் ஆண் இல்லை என்னைப் போல் பெண்ணும் இல்லை! எனக்குச் சமமான ஆணைத் தேடியலைந்ததால் இதுவரை மணமுமாக வில்லை. நான் காமவல்லியாம் கன்னி என்று சொல்ல இராமன் ‘சீதையைக் காட்டி, இவள் என் மனைவி. என் தம்பி தனியன்’ என்று சொல்ல சூர்ப்பநகை அவனை வேண்டினாள் அவன், ‘நான் அடிமைத் தொழில் புரிகிறேன். சேவகன் சுகத்தையும், பிச்சைக்காரன் கவுரவத்தையும் விஷயங்களில் ஈடுபட்டவன் பணத்தையும், வியபிசாரி நற்கதியையும், லோபி கீர்த்

தியையும், எதிர் பார்த்தால் ஆகாயத்திலிருந்து பால் கறக்கிற கதி தான். என்று விரட்ட மீண்டும் இருவரிடையேயும் திரிந்தாள். கடைசியாக இலட்சுமணன், "வெட்கம் கெட்டவளே! உன்னை மானமற்றவன் தான் மணந்து கொள்வான்!" என்ன அவள் பயங்கரமான உருவம் எடுத்து இராமனிடம் பாய்ந்தாள் சீதா பிராட்டி

அஞ்சினள் அஞ்சி அன்னம் மின்னிசை
அலச ஓடிப்
பஞ்சின் மெல்லடிகள் நோவப் பதைத்தனள்
பருவக்கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின்
வல்லியென்னக்
குஞ்சர மனைய வீரன் குவவுத்தோள் தழுவிக்
கொண்டாள்.

துளசி இங்கேயே கதையை முடித்து விடுகிறார். கம்பனோ அவள் காமநோய்க்கு விசுவரூபம் கொடுத்து வருணித்திருக்கிறார்.

அதன் பலன்

இலட்சுமணன் லாகவமாக அவளைப் பிடித்துக் காதையும் மூக்கையும் குனித்து விடுகிறார்.

அவள் அலறிச்சென்று கரன் தூஷணனிடம் உங்கள் ஆண்மை பார்க்கது என்று அலற அவர்கள் வந்து விடுகின்றனர் போர்க்கோலம் பூண்டு.

இராமச்சந்திரன் சீதையை இலட்சுமணனிடம் ஒப்புவித்து விட்டு யுத்த களத்துக்கு வந்து அவர்களை எல்லாம் மாட்டி வீழ்த்தி விடுகின்றார். சூரியனைச் சூழ்ந்த மேகம்

போல் சூழ்ந்த அவர் இறந்து நற்கதி எய்தினர். சூர்ப்பநகை இலங்கைக்கு ஓடினாள்.

அங்கு சென்று சூர்ப்பநகை இராவணனிடம் இராமன் அழகையும் வலியையும் சொல்லத் தொடங்கி விட்டாள்

மன்மதனை யொப்பர், மணி மேனி வடமேருத்
தன்னெழில் அழிப்பர் திரள் தோள் வலி தன்னால்
என்னதனை யிப்பொழுது இசைப்பது உலகேழின்
நன்மதனழிப்பர் ஓரிமைப்பின் நனி வில்லான்

என்று

கம்பர் கூறியது போலவே துளஸியும், புருஷ சிம்மம், வலியிற் சிறந்தோர் என்றெல்லாம் சொல்லி விட்டு சீதையைப் பற்றி அவன் மனதில் ஆசையை நன்றாக வேரூன்ற வளர்த்து விட்டாள்.

இராவணன் மாரீசனிடம் சென்றான்.

இதனிடையே துளஸி ஒரு சிறிய ரகசியத்தைச் சொல்கிறார். சீதை தன் பிரதி பிம்பத்தை வைத்து விட்டு அக்னியில் மறைந்து விட்டாள்.

மாரீசன் இராவணனிடம் ஏதோ சொல்லிப் பார்த்தான் இராவணன் கேட்க மறுக்கவே பொன்மான் வேஷம் பூண்டான். 'இராமனை மனதாரத் தரிசனம் செய்வேன். நன்றாக என் பின்னால் இழுத்துச் சென்று அவரழகை எல்லாம் கண்டு களிப்பேன் அவர் கையால் அடிபட்டு இறப்பேன் நற்கதி யெய்துவேன்!' என்று சென்றான். ஆம், ஆயுதம் உடையவன் இரகசியம் அறிந்தவன், ஸ்வாமி, போக்கிரி, பணக்காரன், வைத்யன், விருதுபாடுபவன், கவி, பண்டிதர் இவர்கள் பகைமை பொல்லாததல்லவா !

சீதை பிடித்துத் தரச் சொல்லிக் கேட்க இலட்சுமணன் மாயமான் என்று சொல்ல ஸ்ரீ ராமன் கேட்காமல் பின் தொடர்ந்தார்.

செத்தும் கெடுத்தான்

பலவாறு அலைந்து ஆத்திரமடைந்து இராமன் மான் மேல் அம்பு ஏவ மாரீசன் சுய உருவத்துடன் "இலக்ஷ்மணா சீதே!" என்று அலறி மடிந்தான்.

இதைக் கேட்ட சீதை இலட்சுமணனைத் தூண்ட அவர் இராமனுக்கு ஒரு தீங்கும் வராது என்று சொல்லியும் கேளாமல் அவள் கடுமையான வார்த்தைகள் புகல இலட்சுமணன் அகன்றார்.

இராவணன் சந்நியாசி வேஷம் பூண்டு வெளியேறினான்.

இராவணன் வஞ்சகம்

சீதையிடம் உள்ளத்தைத் தெரிவித்தான். அவள் கோபித்துக் கொள்ளவும் அவன் சுய உருவத்துடன் அவளை எடுத்து ரதத்தில் வைத்துக் கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் சென்றான்.

வழியிலே சீதையின் அலறலைக் கேட்டு கழுகரசன் வந்து எதிர இராவணன் அதன் இறகுகளை வெட்டி வீழ்த்தி மேலே சென்றான்,

சீதை அலறிக் கொண்டே சென்றாள். ஒரு மலையுச்சியில் சில குரங்குகளைப் பார்த்துத் தன் நகைகளில் சிலவற்றைக் கழற்றிப் போட்டு விட்டுச் சென்றாள். இராவணன் இலங்கையிற் சென்று சீதையைச் சிறை வைத்தான்.

இராமன் வருத்தம்

இதனிடையே இராமன் இலட்சுமணனைச் சந்தித்துச் சந்தேகித்து அதன்படியே சீதா பிராட்டியார் மறைந்ததைக் கண்டு வருந்தி இருவரும் தெற்கு முகம் நோக்கி வந்தனர்.

வழியில் ஜடாயுவைக் கண்டு சமாசாரம் அறிவித்து இறந்த அதற்கு ஈமக் கடன் செய்து சாயுஜ்யம் தந்து மேலே சென்றார்கள்.

பிறகு மகா பக்தையான சபரியிடம் சென்று அவள் விருந்தை ஏற்று நற்கதி தந்து அவள் சொன்னதற்கேற்ப ரிஷ்ய மூகபர்வதத்தை நோக்கிச் சென்றனர். சபரியிடம் பக்தியின் பெருமையை ஸ்ரீராமன் சொல்வதாகத் துளஸி மீண்டும் ஒரு முறையில் ஒன்பது வகைப் பக்தியை விவரிப்பர்.

வழியிலே இராமன் கொடிகளையும் செடிகளையும் நீங்கள் சீதையைப் பார்த்ததுண்டோ என்றெல்லாம் வருந்திக் கேட்டார்

மயிலும் பெடையுமுடன் திரிய மானுங்
கலையு மருவிவரப்
பயிலும் பிடியும் கடகரியும் வருவ திரிவ
பார்க்கின்றான்
குயிலும் கரும்புஞ் செழுந்தேனும் குழலும்
யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதும் சுவை தீர்த்த மொழியைப்
பிரிந்தா லழியானோ

இதையே துளசியும் நாரி ஸஹித ஸப் கக மிருக விருந்தா மானஹு ம் மோரி கர தஹிம் நிந்தா ! இந்த மனைவியுடன்

கூடிய விலங்குகள் பறவைகள் என்னை நிந்தனை செய்கின்றன பார் என்ற இராமன் கூற்றில் காட்டி விட்டு நிந்தனையை விவரிக்கின்றார்.

மான்கள் தம் கலையிடம் நீ அஞ்சாதே. இராமன் இனிப் பொன்மானைத் தான் தேடுவான் என்கின்றனவாம். யானையோ மனைவியை ஆளும் விஷயத்தில் என்னிடம் கற்றுக் கொள். ஏன் எனின் அரசன், மனைவி, சாஸ்திரம் இவைகளை வசத்தில் வைப்பதற்குத் தனித் திறமை வேண்டும் என்கிறது!

பக்திக்குக் காமம் விரோதம்

இப்படி எல்லாம் வருந்திக் கொண்டே இராமன் தம்பியுடன் அங்கே தங்கிய சமயம் நாரதர் தான் கொடுத்த சாபத்தால் பகவான் வருந்துகிறாரே என்று மனம் நொந்து வந்து சேருகிறார்.

நாரதர் இராமபிரானிடம் அசையாத பக்தியை வேண்டுகிறார். அதைத் தந்து விட்டு உபதேசம் செய்யும் வாயிலாக ஸ்ரீ ராமபிரான், "பெண் மாயையின் உருவம். அவளால் தான் எல்லாக் கஷ்டங்களும் வருகின்றன. பக்தி செய்தால் வைராக்யம் வரும். " என்று சொல்லி விட்டு சாதுக்கள் குணம் கூறுகிறார்.

காமக்ரோதாதி ஆறு துர்க் குணங்களை விட்டு வைராக்யம் பெற்று பக்தி செய்ய வேண்டும். பக்தன் எனக்கு கைக் குழந்தை போல. சிறிய குழந்தை பாம்பிடம் போனால் தாயே காப்பாற்றுகிறாள். பெரிய பையனைத் தன் இஷ்டத்துக்கு விட்டு விடுகிறாள். அதே போல ஞானிகள் எனக்குப் பெரிய

பையன்கள். அதனுல்தான் ஞானிகளும் பக்தியை விடுகிற தில்லே.

என்று பலவாருக உபதேசம் செய்ய நாரதர் பயன டைந்து திரும்பினர்

துளசி இந்தக் காண்டத்தை

தீப சிகா சம யுவதி ஜன மன ஜனி ஹோஸி! பதங்க

பஜஹிம் ராம தஜி காம மத கரஹிம் சதா சத்சங்க

யுவதி தீபசிகை போன்றவள். நீ விட்டிலாகி அதில் விழாதே. காமம் மதம் ஒழித்து சத்சங்கம் செய்து ராமனைப் பஜிப்பா யாக என்ற புத்திமதியுடன் முடிக்கிருர்.

கிஷ்கிந்தா காண்டம்

11. இராமனே அடைந்த துணே.

பம்பை நதியைக் கம்பன் வர்ணிப்பது போலவே துளசி யும் சற்று மெனக்கட்டு அனுபவித்திருக்கிருர்.

செங்கண் வேங்கை மாத்தான் படிகின்றது என்று கம்பன் சொன்னுர். துளசி ஜஹம் தஹம் பியஹிம் விவித மிருக நீரா — அங்கங்கே விதவிதமான மிருகங்கள் நீர் குடிக்கின்றன! என்ருர்.

ஈர்ந்த நுண்பளிங் கெனத் தெளிந்த வீர்ம்புனலேப் பற்றித் துளசி நிர்மலவாரி சந்த ஹிருதய ஜஸ: சாதுக்கள் உள்ளம் போன்றது என்கிருர். கம்பர், நவமணி படர்ந்த

102777

பித்திகை சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால் ஓர்ந்துணர் வில்லவ ருள்ளம் ஒப்பது என்றார்.

எற்பொரு நாகர் தமிருக்கை யீதெனக் கிற்பதோர்...... என்பதனால் ஆழத்தைக் குறித்தார் கம்பர். துளசி அதி அகாத—மிகவும் ஆழமானது என்று அப்பட்டமாகச் சொன்னார்.

காசடை விளக்கிய காட்சித்தாயினும்
மாசடை பேதமை யிடை மயக்கலான்
ஆசடை நல்லுணர் வதனையதா மெனப்
பாசடை வயின்றொறும் பரந்த பண்பது என்று

பாசியைக் கூர்ந்து கவனித்தார் அல்லவா கம்பர்.

துளசியும் 'புரயினி சகன ஓட ஜல வேகிந பாயிய மர்ம மாயா சன்ன ந தேகியே ஜைஸே நிர்குண பிரும்ம...... அடர்ந்து படர்ந்த பாசிக்கிடையே ஜலத்தின் ரகசியம், மாயையில் மறைந்த நிர்க்குண பிர்மம் பார்க்கப் படாதிருப்பது போல் அறியப்படாமல் இருந்தது என்றார்.

அதிலே பூத்திருந்த கமலங்கள், சுற்றியுள்ள மரங்கள் ஒன்றையும் விடாமல் இருவரும் பார்க்கின்றனர். புட்கள் பதினெண் பாடையில் பூரியர் ஒரு வழிப் புகுந்த போல் பேசுகின்றன என்று அதிசயப்பட்டுக் கம்பன் புட்களைக் கவனிக்கின்றார். அதேபோல துளசியும் நானு விதமாகப் பேசிக் கொண்டு புட்கள் காணப்பட்டன என்று சொல்கிறார்.

இந்த அழகைத் துளசி ஆரணிய காண்ட இறுதியிலும் கம்பர் கிஷ்கிந்தா காண்ட ஆரம்பத்திலும் சுவைக்கின்றனர்; இது தான் வேற்றுமை. சகோதரர்கள் மேலே சென்ற ரிஷ்ய மூகபர்வதத்தை நெருங்கினர் சுக்ரீவன் பார்த்தான்

(அதிசபீத), நடுங்கி செய்வதோர்கிலனய் (சுனு ஹநு மானு!) பார் அனுமனே. பலத்தின் எல்லையான இவ்விருவரையும் பார். நீ பிர்மசாரி வேஷம் பூண்டு அறிந்து வா எனச் சொல்லி மறுகியோடினன் மூழையதனின்.

அஞ்சனைக்கொரு சிறுவன் மாணவப்படிவமொடு (விப்ர ரூப தரி) சென்று அவர்களைக் கேட்டான்.

நீங்கள் யார்? நீங்கள் இந்தக் கல்லும் கட்டியுமான பூமியில் எதற்கு நடக்கிறீர்கள்? இராமன் சொன்னர் (கம்பன் இலட்சுமணன் கூறினன் என்று சொல்வர்.)

கனகமாடத் தடமதிலயோத்திவேந்தன் தயரதன் மைந்தர் நாம். தந்தை சொன்னதைக் கேட்டு இங்கே வந்தோம். என் மனைவியை அரக்கர் கொண்டுபோய் விட்டனர்—என்றெல்லாம் சொல்லி, "நீர் யார்?" என்று வினவினர்.

உணர்த்தக் கேட்டு; பிரபு பஹுசானி, பிரபுவை அறிந்து (பரே கஹி சரணு) அடியில் தாழ்ந்தான்.

சுவாமி நான் உங்களை யார் என்று கேட்டேன் அது சரிதான். ஆனல்நீங்கள் அப்படிக் கேட்கலாமா? நான் உங்களை மறக்கலாம்—மந்தன். தாங்கள் என்னை மறக்கலாமா? என்றெல்லாம் அரற்றித் தன் உரு எடுத்து நின்றான். பிறகு சுக்ரீவன் நிலையைச் சொல்லி அங்கே அழைத்துச் சென்றான். அங்கே அக்னி சாட்சியாக இருவருக்கும் நேசம் செய்து வைத்தான். வாலி தனக்குச் செய்த தீங்கை எல்லாம் சுக்ரீவன் சொன்னன்.

இராமன் நான் அவனை ஒரே பாணத்தால் தீர்த்து விடுகிறேன் என்று வாக்குத் தந்தார். நண்பனுடைய தர்மத்தை

யும் நன்கு விவரித்தார். துந்துபி எலும்பு மராமரப் பரீக்ஷை எல்லாம் செய்து பார்த்து சுக்ரீவனும் துணிந்தான்.

பிறகு இராமன் சந்நிதானத்தினுல் ஏற்பட்ட மனத் தெளிவு உடையவனுய், 'இவைஎல்லாம் மாயை; வாலி உண்மையில் எனக்கு நன்மையே செய்தான்.' என்றெல்லாம் சொல்ல இராமன் 'நான் சொன்னது சொன்னதுதான்' என்று சொல்லிச் சண்டைக்கு ஏவினுர். அவன் சென்று வாலியை அறை கூவினுன்.

•

வாலி அதட்டிக்கொண்டு வரும்போது தாரை வந்து தடுத்தாள்.

அரசே ஆயவற்கு இன்னுயிர் நட்பமைந்து இராமன் என்பவன் உன்னுயிர் கோடலுக்கு உடன் வந்தான் என்ருள் யமனையும் சண்டையில் வெல்லும் தசரதன் மைந்தர் இருவரும் வந்துள்ளார் எனச்சொன்னதாகத் துளசி சொல்வர்.

வாலியோ, இராமன் இருமையு நோக்குறு மியல்பினுன். அறத்திறு எலாம் இழைத்தவன்—சமதர்சி—அவனைக் குறை கூருதே. அப்படி அவன் என் உயிர் கொண்டால் எனக்கு நன்மையே என்று கூறிச் சண்டைக்குச் சென்ருன்.

ஒரு முறை சுக்ரீவன் உளைந்து திரும்பிவர மாலை புனைந்து ஸ்ரீ இராமபிரான் அனுப்பி வைத்தார். மரத்தின் மறைவிலிருந்து சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த இராமபிரான் சுக்ரீவன் படும் சிரமத்தைப் பார்த்து ஒரு அம்பு தொடுத்து விட்டார். அம்பு பட்டு வீழ்ந்த வாலி எழுந்து உட்கார்ந்து எதிரே இராமனைப் பார்த்தான் உள்ளத்தில் உவகை எழுந்தாலும் வாலி கடுமையாக மொழிந்தான்.

"தர்மம் நிலை நாட்ட வந்தவனே! வேடனைப் போல் என்னைக் கொன்றாயே! நான் வேண்டாதவன். சுக்ரீவன் எப்படி வேண்டியவன் ஆனான்? எதற்காக என்னைக் கொன்றாய்?" இதுதான் கம்பராமாயணத்தில் பல பாடல்களில் பல முறையிலும் கேட்கப் படுகின்ற கேள்விகளின் சாரம். அதில் இன்னம் கொஞ்சம் கடுமை தோன்றும். இராமன் பதில் சொன்னார்.

"தம்பி மனைவி, சகோதரி, மகன் மனைவி, பெண் நால்வரும் சமமானவர். இவர்களிடம் தப்பிதமாக நடப்பவனைக் கொல்வது தர்மம்.

"உனக்கு என்ன அகங்காரம்! உன் மனைவி சொல்லிய போதும் கேட்க மறுத்தாயே! என்னை அண்டினவன் என்று தெரிந்தும் அவனைக் கோல்லத் துணிந்தாய்!

இதைக் கேட்டதும் வாலி ஞானமடைந்து என்னை மன்னித்து நற்கதியுய்ப்பீராக என்று அழுது வேண்ட இராமன் "வாலி வேண்டுமானால் நான் உன்னை உயிருடன் இருக்கச் செய்ய முடியும்" என்று சொல்ல வாலி, தங்கள் நாமத்தைக் கடைசி நாளில் ஜெபிக்க இயலாமல் முனிவர் யோகிகள் கூட வாடுகின்றனர். சங்கரன் எந்தப் பெயரின் மஹிமையால் எல்லோருக்கும் மோக்ஷம் தருகிறாரோ அந்தப் பொருளையே நான் நேரில் கண்டேனே! இந்தப் பெருமையுடன் சாவது தான் நல்லது என்றான். இதே கருத்தைக் கம்பரும் அப்பொருள் படும்படியே

மாவிலைச் சூலியார் வாழ்த்துநர்க்கு உயர்வரம்
ஓவலற்று உதவ நின்றொரு தனிப்பெயர் இயம்பு
ஆவலிப் புடமையாலாகும்; அப் பொருளை யாம்
தேவ, நேர் கண்ட எற்கரி தெனோ தேரினே! என

வாலி வாயால் சொல்வித்தார்.

மேலும் "என் தம்பி, என் மைந்தனை எல்லாம் உங்களிடம் ஒப்புவித்தேன்" என்று சொல்லி அவன் உடலைவிட இராமபிரான் அவனைத் தன் ஊருக்கு அனுப்பினர். தாரை வருந்த அவளுக்கும் திவ்ய ஞானம் தந்தருளினர்.

சுக்ரீவனுக்குப் பட்டம் கட்டி அநேகவிதமாக அரச நீதிகள் எல்லாம் சொல்லித் தந்து "வர்ஷாருது வந்தது. அது முடியும் வரை ஆண்டு இரு. பிறகு சீதையைத் தேட வந்து சேர்" என்று சொல்லி இராமர் சென்று மலைக்குகையில் தங்கினர்.

துளஸியின் மழைக் கால வர்ணனை தனி அழகு கொண்டது. இயற்கையழகில் மன அழகைப் பார்க்கிறவர் அவர்.

மயில்கள் மேகத்தைக் கண்டு, இல்லறம் நடத்துவோன் விருந்தாளியைக் கண்டு உவப்பது போல் ஆடுகின்றன. மேகங்கள் அலறி ராமனை நடுங்க வைக்கின்றன.

மின்னல்கள் துர்ஜனர்களின் அன்புபோல் நிலையாமல் மின்னுகின்றன. புத்திசாலிகள் வித்தை பெற்றுத் தணிவது போல் மேகங்கள் நீர் நிரம்பித் தாழ்கின்றன. நீர்த்துளிகளை மலைகள் சாதுக்கள் பொல்லாதவர்கள் வார்த்தைகளை அசையாமல் தாங்குவது போல் தாங்குகின்றன. சிறிய நதிகள் சாதாரணமானவன் கொஞ்சப் பணம் பெற்றுப் பொங்குவது போல் பொங்குகின்றன. கீழே விழும் சுத்தமான நீர் ஜீவன் மாயையில் நிறம் மாறுவது போல் மாறுகின்றது. நற்குணங்கள் நல்லவரை அடைவது போல் ஜலம் எல்லாம் குளங்களில் சென்றடைகிறது. பசும்புல் படர்ந்து பாதையை, பாஷாண்டி விவாதங்கள் சத்கிரந்தத்தை மறைப்பது போல் மறைத்து விட்டது. தவளைகள் வேதம் படிக்கும் மாணவர்கள் போல் அலறுகின்றன. சாதனம் செய்பவர்கள் மனதில் ஞானம்

கொழுந்திடுவது போல் மரத்தில் புது இலைகள் வெளி வருகின்றன.

தூசி எங்கேயும் காணோம், கோபத்தைக் கண்ட தர்மம் எங்கோ மறைவது போல் மறைந்து விட்டது. வயல்கள் எல்லாம் நன்கு பயிர் நிரம்பி உபகாரியின் சொத்துப் போல் விளங்குகின்றன. மழையினால் பாத்திகளின் வரப்புகள் உடைந்து நிற்பது சுதந்திரம் அடைந்த பெண்கள் கெடுவது போல் இருக்கின்றது. அநேக ஜீவன்கள் நல்ல ராஜ்யத்தில் பிரஜைகள் வளர்வது போல் தோன்றிக் கொழிக்கின்றன. சில சமயம் காற்று எழும்ப மேகம் கலைவது கெட்ட பிள்ளை முளைத்து குல தர்மமும் சொத்தும் நாசமடைவது போல் இருக்கிறது. இப்படியாக வர்ணனை நீண்டு நெளிந்து செல்கிறது. மழைகாலம் நின்றது. சுக்ரீவன் மதுவிலும் மங்கையிலும் மறந்து தங்கி விட்டான்.

இராமன் ஞாபகம் கொண்டார். இலக்ஷ்மணனை அனுப்பினார். அவன் ஆத்திரத்துடன் எழுந்தான். அவனைக் கொஞ்சம் சமாதானம் செய்தே தான் அனுப்பினார்.

இலட்சுமணன் கோபத்துடன் சென்றார். அதற்குள் ஹனுமான் சுக்ரீவனிடம் சென்று சொன்னான். சுக்ரீவன் எல்லா வானர சேனைகளையும் சேர்க்க ஆள் அனுப்பு என்று உத்தரவிட்டான்.

அந்த சமயத்தில் இலட்சுமணன் நகருக்குள்ளே வர அவன் கோபம் கண்ட வானரங்கள் அங்கும் இங்கும் திசை கெட்டு ஓடின.

அங்கதன் ஓடி வந்தான். இலட்சுமணன் சற்றுக் கோபம் தணிந்தான். அதற்குள் சுக்ரீவன் ஹனுமானையும்

தாரையையும் அனுப்பி வைத்தான். கம்பர் இவிடத்தில் பெண்கள் குழாம் வர மாமியர் குழாத்தில் நின்ற மாப்பிள்ளை யைப் போல் தலை குனிந்தான் லக்ஷ்மணன் என்பர்.

பிறகு கோபம் தணிய சுக்ரீவன் வந்து வணங்கி வருகி றேன் என்று தைரியம் சொன்னான்.

அப்படியே குறித்த நாளில் வானர சேனைகள் வந்து இராமபிரானை நமஸ்காரம் செய்து நின்றன.

சுக்ரீவன் கடுமையாக ஆணையிட்டான். ஒரு மாதத்துக் குள் சீதையைத் தேடி விவரம் வந்து தெரிவிக்க வேண்டும் என்று சொன்னான்.

நீலன் அங்கதன் அனுமான் ஜாம்பவந்தன் தெற்கே போக ஆக்ஞாபிக்கப்பட்டனர். இராமன் அனுமனை அழைத்துக் கணையாழியைத் தந்தார். சீதையின் அடையா ளத்தைப் பலவாறாகத் தெரிவித்தார் என்பர் துளசி. கம்பர் தலை முதல் கால் வரை வருணித்தே விட்டிருக்கிறார்.

எல்லோரும் தேடிச் சென்றனர். தெற்கே சென்றவர் களையே கவிகள் தொடர்கிறார்கள்.

தாகம் அடைந்த அவர்கள் ஒரு பிலத் துவாரத்துக்குள் சென்றனர் அங்கே தபஸ்வினி ஒருத்தியைக் கோயிலில் கண்டு தங்கள் விருத்தாந்தத்தைச் சொல்லி அவள் அனுமதி பெற்று நீராருந்திப் பழம் உண்டு மகிழ்ந்தனர். பிறகு அவள் தவவலி மையால் வெளியேறினர். அந்தத் தபஸ்வினி இராமனிடம் சென்று அருள் பெற்று பதரிகாசிரமம் சென்றாள் என்று கூறுவர் துளசி.

காலம் ஆகி விட்டது. எல்லோரும் வருந்தினர் சாவு வந்து விட்டதென்று முடிவு செய்து விட்டனர். பிறகு எல்லோரும் சேர்ந்து அமர்ந்து இராமன் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்தனர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சம்பாதி என்ற கழுகுக்கரசன், ஜடாயுவுக்கு அண்ணன், வெளியேறி வந்து அவர்கள் ராமஸ்மரணையால் இழந்த இறகுகளைப் பெற்றது. பிறகு தன் கதையையும் சொல்லிச் சீதை இருக்கும் இடம் இலங்கையென்றும் சமுத்திரத்தைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்றும் வழி எல்லாம் சொல்லி விட்டு அது பறந்து சென்று விட்டது. சம்பாதியின் உறுதியையும், நாமப்ரபாவத்தால் அது இறகு பெற்றதையும் கண்டு வியந்த வானர வீரர்கள் ஸ்ரீ ராமன் பாதத்தைப் போற்றி மேலே என்ன செய்ய வேண்டும் என்று பேசினர்.

நூறு யோஜனை தூரம் சமுத்ரம், யார் தாண்டுவது என்று பேச்சு வந்தது. ஜாம்பவான், " நான் சிறுவனாயிருந்தபோது திருவிக்ரமாவதாரம் நடந்தது. நான் இரண்டே மணி நேரத்தில் பாய்ந்து வந்தேன் இந்த உலகத்தை" என்றார். இரு கவிகளும் இந்த விஷயத்தைச் சொல்லியுள்ளனர். ஒருவன் இருபது யோசனை. மற்றொருவன் ஐம்பது, அங்கதன் நூறு இவ்வாறாகச் சொல்லித் தயங்க ஜாம்பவந்தன் சும்மா இருந்த அனுமனின் சாபம் அறிந்து அவனிடம் சென்று அவன் மறந்திருந்த அவன் வலிவை ஞாபக மூட்டினான். இத்துடன் துளசியின் கிஷ்கிந்தா காண்டம் முடிகிறது.

12. அனுமன் பெருமை

ஜாம்பவான் சொல்லியவற்றைக் கேட்டு, தன் நிலை தெளிந்த அனுமன்: "சரி, நீங்கள் காத்திருங்கள், நான் சென்று வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, சமுத்திரக் கரையில் உள்ள ஒரு மலைமேல் ஏறினர். ஸ்ரீ ராமபிரான் பெயரைக் கூவிக்கொண்டே மலை பாதாளத்துக்கு அழுந்த மேலே எழும்பினர்.

கம்பன் பாயும் அனுமனை, புட்பக விமானமோ, கைலயங் கிரியோ, கருடனே என்றெல்லம் சொல்லி, 'அறத்தகை யரசன் திண் போரழியும் அனையன் ஆனன்' என்று சொல்வர்.

துளஸி, "ஜிமி அமோக ரகுபதி கேபாணு: அமோகமான இராமபாணம் போல் சென்றான்" என்பர்.

மைனகம் என்னும் பர்வதம் எழும்பி உபசாரம் செய்ய வர அதைத் தொட்டுவிட்டு முதலில் ராம காரியம் ஆகட்டும் என்று சொல்லி அனுமன் மேலே சென்றார்.

பிறகு ஸுரஸா என்ற பாம்பரக்கி அவரை விழுங்க வந்தாள்

"பெண்பாலொரு நீ பசிப் பிழை யொறுக்க
நொந்தாய்.
உண்பாயென தாக்கையை யானுவதற்கு நேர்வல்
விண்பாலவர் நாயகன் ஏவல் இழைத்து மீண்டால்
நண்பால்" எனச் சொல்லிய நல்லறிவாளன்
நக்கான்.

அனுமன் சிரித்தான் என்று துளஸியும் குறிக்கிறார்:—

சுனி ஹம்ஸி போலா, பவன குமாரா!
ராம காஜ கரி பிரி மைம் ஆவ உம்!
தப் துவ வதன பைடிஹௌம் ஆயி!!:— சுரஸை

சொன்னதைக் கேட்டு சிரித்துச் சொன்னார் காற்றின் மதலை, 'ராமகாரியம் செய்து வருவேன். வந்து நானே உன் வாயில் புகுவேன்' என்று. அவள் சம்மதிக்காமல் வாயைப் பத்து யோஜனை அகலம் பிளக்கவே அனுமன் இருபது யோஜனை பருத்தார். அவள் வாயைப் பிளக்கவும் இவர் பருக்கவுமாகச் சற்று நேரம் சென்று அவர் திடீர் என்று உடலைக் குறுக்கி அவள் வாய் வழி புகுந்து காது வழி வெளியேறினார்.

அவள் "உன் வீரத்தைச் சோதித்தேன்! போய் வா!" என்று ஆசீர்வதித்து விடை தந்தாள்.

பிறகு மேலே செல்லும் உயிர்களை நிழல் மூலம் இழுத்து உண்ணும் வலிமை வாய்ந்த அரக்கன் இடையுற அவனையும் வென்று அவர் இலங்கைக் கரையில் குதித்து ஒரு மலை மேல் நின்றார். "ஸ்ரீராம தூதனுக்கு இது ஒரு பிரமாதமா! அவன் இன்னம் என்ன வெல்லாமோ செய்வானே!"

ஹநுமான் சுற்றி ஒரு கண்ணோட்டம் விட்டார். அரக்கர்கள் அவர்கள் வீடுகள் தெருக்கள் ... ... அவர்கள் உண்ணும் முறை ....

துளஸி அரக்கர்களைப் பற்றி விஸ்தாரமாகப் பேச விரும்பவில்லை. இவ்வளவு சொன்னது கூட அவர்கள் ராமபாணம் பட்டு நற்கதி எய்துவார்கள் என்ற நம்பிக்கையிருந்ததனால்தான்!

இரவு ஆனவுடன் கொசுவைப்போல் உருவம் ஏந்தி ஹனுமன் உள்ளே சென்றார். லங்கிணி என்ற காவலரக்கி எதிர்த்தாள். ஓரே குத்தில் அவளை வீழ்த்தி அவளிடமும் புகழைப் பெற்றுக் கொண்டு மேலே சென்றார்.

ஹநுமான் இலங்கை முழுவதும் தேடினார். ஒரு இடம் விடாமல், இராவணன் அரண்மனை, மற்றும் எல்லா இடங்களிலும் தேடினார். அந்த நிலையில் எங்கும் ராமநாமம் எழுதப் பட்ட ஒரு வீடு தென்பட்டது. ஆச்சரிய மடைந்த அனுமன் பார்த்துக் கொண்டிருக்கும் போது விபீஷணன் இராமன் திரு நாமத்தை உச்சரித்துக் கொண்டே எழுந்தார்.

கம்பனும் விபீஷணனைக் கண்டதாகச் சொல்வர்:-

பளிக்கு வேதிகைப் பவளத்தின் கூடத்திற்
பசுந்தேன்
துளிக்குங் கற்பகப் பந்தரில் கருநிறத் தோரை
வெளித்து வைகுவது அரிது என அவர் உருமேவி
ஒளித்து வாழ்கின்ற தருமமன்னானன்றனை யுற்றான்.
உற்று நின்று அவன் உணர்வைத் தன்
உணர்வினால் உணர்ந்தான்.
குற்றமில்லதோர் குணமுள முனிவனெனக்
கொண்டான்
செற்ற நீங்கிய மனத்தினன் ஒரு சிறை சென்றான்
பொற்ற மாடங்கள் கோடியோர் கொடியிடைப்
புக்கான்.

இந்தக் கருத்தைத் தொடர்ந்து சொல்கிறார் ஸ்ரீ துளஸி.

ஹிருதய ஹர்ஷி கபி ஸஜ்ஜன சீன்ஹா; உளம் மகிழ்ந்து குரங்கு அவனை ஸஜ்ஜனன் என்று அறிந்து கொண்

டார். ஸஜ்ஜனன் என்ற பதத்துக்குக் கம்பன் தரும் பொருள் குற்றமில்லாதோர் குணமுள்ள முனிவன் என்பதாகும்! அவ் விதம் எண்ணி 'சாதுவால் நன்மையே பயக்கும். நான் சென்று இவருடன் சிநேகம் செய்து கொள்கிறேன்,' என்று முடிவு செய்து பிராமண ரூபம் கொண்டு விபீஷணனிடம் சென்று நமஸ்கரித்தார். விபீஷணனும் தன் நிலையைச் சொல்லி வருந்தினார். "பற்களுக் கிடையே தவிக்கும் நாக்குப் போல் நான் துயருகிறேன். எனக்கு விடுதலை உண்டா?" என்று சஞ்சலப்பட்ட விபீஷணனிடம் அனுமன் "நினைத்தாலே சோறு கிடைக்காத இனத்தவராயிற்றே நாங்கள். இராம பிரான் எங்களுடனேயே தோழமை பூண வில்லையா!" என்று நம்பிக்கை யூட்டி விட்டு அவரிடமே சீதா பிராட்டியாரின் இருப்பிடம் அறிந்து கொண்டு அசோக வனம் சென்றார்.

மரத்தின் மேல் ஏறி அமர்ந்த அனுமன், மெலிந்த உடல், ஒரே பின்னல், கால்களில் பதித்த பார்வை, அல்லும் பகலும் இடைவிடாது இராமனை நினைந்த எண்ணம், கண்களில் நீர் இந்த நிலையில் தேவியைப் பார்த்து மனம் ஒடிந்தார். என்ன செய்வதென்று தேற்றுதவராயிருந்த சமயம் இராவணன் வந்து சேர்ந்தான். வழக்கம் போல் சாமதான பேதப் பிரயோகம் செய்து பார்த்தான்.

துரும்பையிட்டு அதன் மறைவில் இராமனை எண்ணிய வாறே சீதாதேவி சொன்னாள்.

'பதரே! கமலம் மின்மினிப் பூச்சியின் ஒளியில் மலர்வதுண்டோ?

என்னைத் திருடிவந்த உனக்குப் பேச்சுவேறு?" என்று கடிந்தாள். அரக்கராசனும் முனிய, சீதை 'கடையோனே!

என் கழுத்து இராமன் கரங்களையே ஏற்கும். அன்றேல் உன் வாளைத்தான் ஏற்கும்!' என்ன சீறிய இராவணன் வெட்டச் சென்ற சமயம் மந்தோதரி தடுத்தாள்.

துரும்பைக் கிள்ளிப் போட்டுச் சிரித்துச் சொன்னாள் சீதை என்ற இடத்தில் பாகவதர்கள் பல பொருள்கள் கூறுவது உண்டு. ' 'நீ துரும்பு; உன் சொத்து துரும்பு; உனக்குச் சொல்வதைத் துரும்புக்குச் சொல்லலாம்; துரும்பே பிர்மாஸ்திரமாகும்; துரும்பு ஒரு மறைவு....'என்றெல்லாம் பிராட்டி எண்ணியிருக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

துளஸி அவர்களும் துரும்பை திரைக்குப் பதில் உபயோகித்து...என்று சொல்லி ஒரு கருத்தை வெளிப்படையாகவே வெளியிட்டு விட்டார். அந்த இடத்தில் அமைந்துள்ள சொற்களையும் அவர் மனப்பாங்கையும் ஆதாரமாகக் கொண்டு மற்றும் சில கருத்துக்களும் கூற முடியும்.

" துரும்பு (புல்) மரம் போல மக்களை ஆதரிக்க முடியுமா?" என்ற கருத்தும் சொல்லலாம். சீதா பிராட்டியே 'கமலம் மின்மினி ஒளியில் மலருமா?' என்று கேட்டிருப்பதால் மர நிழலில் வளரும் என்னைத் துரும்பு எவ்வாறு காக்க இயலும்? என்று குறிப்பது இயற்கைதானே!

'தரி' என்ற பதத்தினால் துரும்பை அசையாமல் நிறுத்தி என்ற பொருள் கிடைக்கிறது. இராமன் கைப்புல் செய்தது போல் இதுவும் இராவணனை அழிக்க வல்லதே. எனினும் அன்னையுள்ளம் அளி கொண்ட உள்ளம். அதைத் தடுத்து விட்டது." என்றும் ஒரு பொருள் கொள்ளலாம்.

" இராமனை எண்ணினாள் என்றதனால் 'ஏ இராமா! இங்கே எனக்கு ஒரு சாக்ஷியும் இல்லை. உனக்கு மிகவும்

வேண்டியது புல்தான். அதைக்கொண்டுதான் முன்பு எனக்கு இழைக்கப்பட்ட தீங்குக்கும் ஜயந்தனிடம் 'பழி வாங்கினுய்! ஆகவே அதையே மத்யஸ்தமாக வைத்துப் பேசுகிறேன்!' என்று சொல்லிக் கொண்டதாகவும் கருத இடம் இருக்கிறது.

துளஸிதாஸர் அடிக்கடி மலை புல்லைத் தாங்குவதும், கடல் நுரையைத் தலையில் ஏற்பதும் பெரியவரின் குணங்கள் என்பார். ஆகவே இராமனையும் நினைத்துப் புல்லையும் எடுத்த படியால், இராவணன் பதரானுலும் ஒழுங்காயிருந்தால் என் கணவர் தலைமேல் தாங்குவாரே! என்றும் குறிப்பிட்டிருப்ப தாகக் கொள்ளலாம்.

நிற்க, மங்தோதரியால் தடுக்கப்பட்ட இராவணன் ஒரு மாதத் தவணை தந்துவிட்டு அரண்மனை திரும்பினுன்.

அரக்கிகள் தொந்தரவு செய்தனர். திரிஜடை என்ற அரக்கி தான் கண்ட கனவைச் சொல்லி மொட்டைத் தலையனுகி இராவணன் கழுதை மேல் ஏறித் தெற்குத் திக்கில் சென்றுன். அவன் அழிவான். லங்கையை விபீஷணன் அடைவான். இராமன் வருவான். நீங்கள் சீதையிடம் பயபக்தியுடன் இருங்கள்" என்ன அவர்கள் ஒதுங்கினர்.

அவளிடம் சீதை, "அம்மா இனி நான் இருக்க விரும்ப வில்லை. தயவு செய்து நெருப்பு மூட்டித்தா. நான் சாகிறேன்." என்ன அவள் "இரவிலே எங்கேயம்மா நெருப்புக் கொணர்ந்தேன்!" என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போய் விட்டாள்.

சீதை "இது என்ன கஷ்டகாலம்! அக்னி கிடைக்காதா? ஆகாயத்தில் நெருப்புப் போல இப்படி இவ்வளவு நக்ஷத்தி ரங்கள் எரிகின்றனவே! ஒன்ருவது கீழேவிழக் கூடாதா?"

என்று சொல்ல அதே நேரம் ஹனுமான் மோதிரத்தைக் கீழே போட்டார். "அசோக மரமே நெருப்புத் துண்டம் தந்ததோ" என்று மகிழ்ந்து அவள் அதை எடுத்துப் பார்த்தாள். ஸ்ரீராம நாமம் எழுதியிருந்தது. துக்கம் சந்தோஷம் இரண்டும் சேர்ந்து இதயத்தைக் கௌவிக்கொண்டன.

அதே சமயத்தில் ஹனுமான் இராம கதையை மிருதுவான குரலில் சொல்லிக் கொண்டு இறங்கி வந்தார். பிறகு அவள் சந்தேகம் தீரும் வண்ணம் அவள் கேட்ட கேள்விகளுக்கு விடையளித்து, "இந்த அரக்கரை எல்லாம் அழித்து விடுகிறோம். இராமர் வருவார்!" என்று உறுதியளித்து அடையாளமாகச் சில பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டார்.

பிறகு பசிக்கிற சாக்கில் அசோக வனத்தில் பழம் சாப்பிட உத்தரவு பெற்று வனத்தை அழித்தார். இராவணன் அறிந்து கனன்று வீரர்களை அனுப்பினன். சண்டை மூண்டது. வீரர்கள் மடிந்தனர். இராவணன் மேகநாதனை அனுப்பினன். மேக நாதன் சண்டையில் அலுத்து பிரும்மாஸ்திரத்தை மந்திரித்து விட்டான். அனுமன் கட்டுண்டார் இராவணன் சபைக்கு வந்தார்.

துளஸி சொல்கிறார் — எவன் பெயரைச் சொன்னல் கட்டெல்லாம் அறுமோ அவன் தூதனை பிரம்மாஸ்திரம் கட்டுமா? பிரபுவின் காரணத்துக்காகக் கட்டுண்டார் அனுமன்.

அங்கு சென்று தசமுகன் பெருமையைப் பார்த்தார் அனுமான். இராவணன், "நீ யார்? எவன் பலம் கொண்டு இந்த விதம் வனத்தையும் வீரரையும் அழித்தாய்?" என்று கேட்டு சொற்போரைத் தொடக்கி வைத்தான்.

அவர் தன் பிரபுவான ஸ்ரீ ராம பிரான் பெருமையையும் இராவணன் சிறுமையையும் எடுத்துரைத்தார். "சீதையைத் தாயாக மதித்து இராமபிரானிடம் ஒப்படைத்துக் காலில் விழுந்து பிழைத்துப்போ!' என்று உபதேசமும் செய்தார்.

கோபம் கொண்ட இராவணன் கொல்ல யத்தனிக்க விபீஷணன் வணங்கி நியாயங்களை எடுத்துச் சொல்ல, "சரி வாலைக் கொளுத்தி விடு" என்றான் இராவணன். ஊரில் இருந்த துணி எண்ணெய் எல்லாம் வந்தது ஆனால் வால் மிஞ்சித்தான் இருந்தது.

எப்படியோ வாலில் தீ வைத்தனர். வாலிலா வைத்தனர்? தம் ஊருக்கே வைத்துக் கொண்டனர் தீயை அரக்கர்கள். ஊரை எரித்தது நெருப்பு. விபீஷணன் வீடு எரியவில்லை. தக்கயாகப்பரணியில் ஞானசம்பந்தர் சொல்லியது போல் நெருப்பு பிரபுவின் தாஸனுனபடியால் அவனது தானே!

வாலை அணைத்துத் திரும்பி வந்த அனுமான் சீதையிடம் விடையும் சூடாமணியும் பெற்று மீண்டும் கடலைத் தாண்டி வந்து வானரர்களையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீ ராம பிரானிடம் சென்றார்.

ஸ்ரீ இராம பிரான் சந்தோஷ சமாசாரம் கேட்டு ஜானகி எவ்விதம் உயிர் தரித்திருக்கிறாள்? என்று கேட்க அனுமான் அவள் பதிவிரதை தருமத்தை வியந்து "உங்கள் பெயர் அனவரதமும் காவல் காக்க, உங்கள் தியானம் கதவாக, காலில் தந்த பார்வையுடைய கண்கள் பூட்டாக அவள் உயிர் எவ்விதம் போகும்!" என்றார்.

மீண்டும் சொன்னார்

"பிராட்டி கேட்டாள்—என்ன அபராதம் செய்தேன்! பிரிந்தவுடன் பிராணனை விடவில்லை. அதற்கும் தங்களைப் பார்க்க விரும்பும் கண்கள்தான் பொறுப்பாளி. விரஹமாகிற அனலில் பஞ்சான சரீரம் எரிந்திருக்கும்; கண்கள் சுய நலம் காரணமாக நீரை ஊற்றி நெருப்பை அணைத்து விடுகின்றன." சீதையின் வருத்தம் சொல்லாமலிருப்பதே நல்லது என்று வருந்திச் சொன்னார்.

இராகவன் அனுமனுக்கு வந்தனம் சொல்ல அனுமன் அவர் பாதத்தில் விழுந்து கால்களைப் பிடித்துக்கொண்டார். அவரைத் தூக்கித் தழுவிக்கொண்டார் ஸ்ரீ ராமபிரான்.

பிறகு வானர சேனை தயாராக எல்லோரும் செல்ல ஆரம்பித்தனர். ஆடம்பரமாக எல்லோரும் சமுத்திரக் கரைக்கு வந்து தங்கினர்.

இதனிடையில் இராவணனுக்கு மந்தோதரி புத்திமதி சொன்னாள். இராமன் பெருமையை விவரித்தாள். இராவணன் 'எதிரியை நீ புகழ்கிறாய் அதுவும் என் பெருமையைக் குறிக்கிறது!' என்று சொன்னான்.

மந்திரிகள் சொன்னார்கள். விபீஷணனும் சொன்னான் இராவணன் கேட்கவில்லை. அவனை உதைத்தான். அவன் நான்கு மந்திரிகளுடன் சென்று இராமனைச் சரணாகதி அடைந்தான். சுக்ரீவன் சந்தேகித்தான். ஹனுமான நீங்கள் சரணாகதவத்ஸலன் என்று மகிழ்ந்தார். இராமபிரான் தன் குணத்திற்கு ஏற்ப விபீஷணனை ஏற்றுக்கொண்டார். விபீஷணனுக்குப் பட்டாபிஷேகமும் உடனே செய்வித்தார்.

பிறகு சேது கட்டுவதைப் பற்றி யோஜனை எழுந்தது. இராமன் தர்பாசனத்தில் அமர்ந்து விரதம் இருந்தார். அத்

தருணத்தில் இராவணன் அனுப்பிய சுகன் என்ற தூதன் வந்தான். குரங்குருவம் கொண்டு திரியும் அவனை குரங்குகள் கண்டுபிடித்து அடித்து இலக்குவனிடம் கொண்டு வந்தனர். அவர் அவனை விடுவித்து ஒருகடிதத்தையும் தந்து, "இராவணனிடம் சொல்" என்று அனுப்பிவிட்டார். அவன் சென்று இராவணனிடம் உள்ள நிலையை விவரித்தான். உபதேசமும் செய்தான். இராவணன் கோபித்து விரட்ட அவன் இராமன் சேனையைச் சென்றடைந்தான். அகஸ்திய ரிஷி சாபம் பெற்ற முனிவரானபடியால் இராமரை வணங்கிச் சாப முக்தி பெற்றுத் தன் ஆசிரமம் சென்று விட்டான்.

இதற்குப் பிறகு வருணன் நேரமாக்குவதைக் கவனித்த இராமபிரான் கோபம் கொண்டு வில்லை எடுத்து அம்பு விட முடிவு செய்யும் தருணத்தில் வருணன் அலறி ஓடி வந்தான்.

'பறை கிராமவாசி, கடையோன், மிருகம், பெண் இவர்கள் எல்லாம் அடிபட உரிமையுள்ளவர்கள். என் அசட்டுத்தனத்தை மன்னிக்க வேண்டும்." என்று சொல்லி 'நளனும் நீலனும் அநுக்ரஹம் பெற்றவர்கள் அவர்களைக் கொண்டு பாலம் கட்டச் சொல்லுங்கள்,' என்று பணிந்து தெரிவித்து விட்டு வருணன் சென்றான். இராமன் தொடுத்த அம்பை வருணன் விருப்பப்படி வடக்கேயுள்ள பொல்லார் மேல் போட்டார்.

"இராமன் குணம் கேட்பவர் கப்பலில்லாமல் வாழ்க்கைக் கடலைக் கடப்பர்" என்ற உறுதியுடன் சுந்தரகாண்டம் முடிகிறது.

இந்தக் காண்டத்தில் பொதுவாக சரணாகதி தத்துவமும், அதன் பெருமையும் விவரிக்கப்படுவதுமுண்டு.

அனுமானை ஆசாரியராகவும் சீதையை மோகத்தில் சிக்கி பத்து ஞானகர்ம இந்திரியங்கள் கொண்ட தேகம் ஏற்ற

ஜீவனுகவும் கண்டு ஆசாரியனின் ஏற்றம் கூறப்படுவதும் உண்டு.

இந்த இரண்டு கருத்துக்களேயும் நாம் பொதுப்பட எல்லா இராமசரிதங்களிலுமே கொள்ளலாம்.

லங்கா காண்டம்

13. இலங்கைக்கு வந்த யோகம்.

கடலுக்கு அணேகட்டி இலங்கை சென்று அரக்கரை அழித்து மீண்டும் கிளம்பும் வரை உள்ள கதைக்கு துளசி தாஸர் யுத்தகாண்டம் என்ற பெயரிடாமல் லங்கா காண்டம் என்று பெயரிட்டிருக்கிருர்.

ஜாம்பவந்தனும் நள நீலனிடம் சொல்லி, "ஸ்ரீ ராம காரியத்தை ஆரம்பி" என்ருர். குரங்குகள் எல்லாம் மலேகளேக் கொண்டு வந்து நிரப்ப நளனும் நீலனும் பாலம் அமைத்தனர்.

பிறகு ஸ்ரீ இராமபிரான், "இந்த அழகிய, இனிய இடத்தில் சிவலிங்கத்தை ஸ்தாபிக்க விரும்புகிறேன்." என்று சொல்லி முனிவர்களே அழைத்து வந்து சிவலிங்க ஸ்தாபனம் செய்தார். சிவபக்தியின் பெருமையையும் விளக்கி பரமசிவனே வெறுப்போன் என் தாஸன் என்ருல் நான் அவனே விரும்பேன்; கங்கா ஜலம் கொண்டுவந்து இராமேசுவரம் சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்பவன் சாயுஜ்யம் அடைவான்; என்ருர்.

பிறகு பாலத்தில் ஏறி நின்று கடற் பிராணிகளுக்குத் தரிசனம் தந்தார். பிறகு அக்கரை வந்தார். குரங்குகள்

கிடைத்த அசுரர்களை வாட்டிக் குனித்து இராமன் புகழ்பாட வைத்தன. அவர்கள் இராவணனிடம் சென்று சொல்லினர். இராவணன் கேட்டானும்:

பாந்தேஉ ஜலநதி, நீரநிதி, ஜலதி, சிந்து, வாரீச்,
சத்ய, தோயநிதி, உததி பயோதி நதீச்!

கடலின் அவ்வளவு பெயர்களையும் சொல்லி, "கட்டி விட்டானு?" என்று அதிசயப்பட்டுப் பயந்தானும்! மந்தோதரி மீண்டும் சொன்னுள்: "இராமனிடம் ஜானகியை ஒப்புவித்து, பாதகமலங்களில் வீழ்ந்து வணங்குங்கள்." இராவணனே மயன் பெண்ணை மடியிலே வைத்து ஹிதோபதேசம் செய்தான்! "என்வலி தெரிந்துமா இப்படி பயப்படுகிருய்! அஞ்சாதே!' என்றுன்.

பிறகு சபை கூட்டினுன் இராவணன். பலர்; "என்ன பயம்?" என்றனர் பிரஹஸ்தன் சாதுர்யமாக, "கடலைக் கட்டியவர்களைச் சாமானியமாக எண்ணக்கூடாது. நம்மிடமும் குற்றம் இருக்கிறது. சீதையைக் கொண்டு போய் விட்டுவிடுவோம். அப்படியும் சண்டையிட்டால் குற்றம் அவர்களதா! என்று சொன்னுன். இராவணன் அவனைக் குலத்ரோஹி என்று வைது வீட்டுக்கு அனுப்பி விட்டான். சண்டையிடத் தயாராய் சபையைக் கலைத்து விட்டு இராவணன் எழுந்து சென்றுன். பிறகு லங்கையில் ஒரு அழகிய ரம்யமான மலையுச்சியில் சென்று கேளிக்கைகளில் ஈடுபட்டான்.

கவியரங்கம்.

இங்கே சுபேல் என்ற பர்வதத்தில் ஸ்ரீ ராமன் பரிவாரங்களுடன் தங்கினுர். அவர் ஒரு கவியரங்கம் கூட்டினுர் "எழுந்த சந்திரனிடத்தில் உள்ள களங்கம் ஏன்?" என்று

சபையைத் துவக்கினர் ஸ்ரீ ராமபிரான்: சுக்ரீவன் பூமியின் நிழல் என்றான். ஒருவன் ராகு அடித்த வடு என்றான். ஒருவன், 'ரதியின் முகம் செய்ய பிரும்மா சந்திரனுடைய சாரமான பாகத்தை எடுத்த ஓட்டை; அதன் வழியாக நீல ஆகாயம் தெரிகிறது' என்றான். இராகவன் "விஷம் சந்திரனுக்கு சகோதரனல்லவா. அவனை இதயத்தில் வைத்திருக்கிறான்! என்றார். அனுமனோ, "சுவாமி சந்திரன் உங்கள் தாஸன்: உங்கள் உருவத்தை உள்ளத்தில் ஏந்தியிருக்கிறான்" என்னவே எல்லோரும் ஆனந்தமடைய இராமபிரானும் சிரித்தார்.

இராவணனுக்கு உபதேசம்.

அவ்வமயம் தெற்குத் திக்கில் மத்தளச் சத்தம் இடி போல் முழங்க மந்தோதரியின் காதணிகள் மின்னின. இராமன் ஒரு அம்பு விட அது சென்று மந்தோதரியின் காதணிகளையும் இராவணன் மகுடங்களையும் கீழே தள்ளி வந்தது. அங்கே சபையிலுள்ளவர்கள் அஞ்ச இராவணன் "என் தலை விழுந்தாலே நல்லது தான்!" என்று சொல்லிச் சென்றான். மீண்டும் மந்தோதரி கெஞ்சினாள். இராமனுடைய விசுவ ரூபத்தையே வர்ணித்தாள். அரக்கராசனோ "படபடப்பு, பொய், சஞ்சலம், மாயை, பயம், அவிவேகம், அழுக்கு, ஆத்திரம் எல்லாவற்றிற்கும் இருப்பிடம் பெண்கள் மனது என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்! என்று அதட்டி விட்டான்.

மறுநாள் இராமன் மந்திராலோசனை செய்து அங்கதனைத் தூது அனுப்பினார். அங்கதனும் வந்தான்; எவ்வளவோ சொன்னான். மிக அழகான ஹாஸ்யம் நிறைந்த

வாக்குவாதம் நடக்கிறது. கொல்ல உத்தரவு கொடுத்த இராவணனிடம் காலே ஊன்றி இதை அசைக்க உன்னிடம் வீரருண்டா என்று கேட்டான். வீரர் ஒருவரும் அவன் ஊன்றிய காலே அசைக்க முடியாமல் விட்டனர். இராவணனே எழ, என் காலில் விழாதே. இராமன் காலில் விழு! என்று சொல்லி சண்டை முடிவுடன் திரும்பினன் அங்கதன். போகும்போது இராவணன் நான்கு முடிகளுடன் திரும்பினன்,

மீண்டும மாலேயில் மங்தோதரி அழுதாள்; வேண்டினள்; "தூதர்களே இந்த வேலே செய்தால் மற்றவர்களும் இராமபிரானும் சேர்ந்து என்ன செய்ய மாட்டார்கள்?" என்று எடுத்துரைத்தாள். ஸ்ரீ இராமபிரான் பெருமையை எல்லாம் சொன்னள், ராவணன் கேட்டிருந்தால் ஏன் அழிகிறுன்?

இராமபிரானிடம் சென்ற அங்கதன், "நான்கு முடிகளும் அரசருக்குரிய சாமதான பேத தண்டம் என்ற நான்கு நீதிகள். அவனே விட்டுத் தங்களிடம் வந்துவிட்டன." என்ருன்.

முதல்நாள் சண்டை.

பிறகு சேனேயை நான்காய்ப் பிரித்து, தக்க தலேவர்கள் கீழ் நியமித்து சண்டைக்கு எழுந்தனர். நான்கு வாசல்களுக்கும் சென்றனர். இராவணனும் சேனேயை அனுப்பினன். அவர்கள் கோட்டை மதில் மேல் தோன்றினர். சண்டை வலுத்தது. குரங்குகளும் மேலே ஏறி விட்டன. அரக்கர்களேக் கீழே தள்ளின. அரக்கவீரர்கள் கோபம் கொண்டு சாட அவை ஓட ஆரம்பித்தன.

ஹநுமன் மேல் வாசலில் மேகநாதனுடன் சண்டை செய்து கொண்டிருந்தார். அவசரத்தால் கோபம் கொண்டு அவனை அடித்து மயக்கமுறச் செய்தார். ஏறிவிட்டார் கோட்டைமேல். அங்கதனும் வந்து சேர்ந்தான் உதவிக்கு உள்ளே புகுந்து அட்டூழியம் புரிய ஆரம்பித்தனர்.

இறக்கும் அரக்கர்கள் காதில் விபீஷணன் ராமநாமம் சொல்ல இராமன் அவர்களுக்கு நற்கதி தந்தாராம். யோகிகளும் மனித ஊன் விரும்பிகளும் ஒன்றுனர்! என்கிருர் ஸ்ரீ துளசி! மாலை ஆய்விட்டதும் இருவரும் இராமபிரானிடம் வந்தனர். குரங்குகளும் வந்து சேர்ந்தன.

இரவு ஆனதும் அரக்கர்கள் வலி கொண்டு சண்டையிட வந்தனர் ஒரே இருட்டு; குரங்குகள் ஒன்றும் புரியாமல் சங்கடப்பட்டனர். இராமபிரான் அக்னியாஸ்திரத்தை விட்டு வெளிச்சம் உண்டாக்கினுர். சண்டையில் அரக்கர்கள் அழியத் தொடங்கினுர். நடு இரவில் எல்லோரும் சண்டையை நிறுத்தித் திரும்பினுர். இராவணனுக்கு அரைவாசி நஷ்டம்.

மாலியவந்தன் ஒருமுறை மீண்டும் புத்திமதி சொன்னுன். அவனிடமும், "நீ கிழவன் ஆனபடியால் கொல்லாமல் விட்டேன்!" என்று பயமுறுத்தி விட்டான், நிருதர்வேந்தன். இந்திரஜித்து "நானே பார், என் பெருமையை! என்று சொன்னுன்.

இலட்சுமணன் மூர்ச்சை.

மீண்டும் குரங்குகள் வளைத்தன நகரை கிளம்பினுன் மேகநாதன். சேனைகள் அலற யுத்தப் புரிந்தான். அனுமன் வந்து எதிர்த்தார், அவன் அவரை லட்சியம் செய்யாமல் நேரே ராமனிடமே சென்று பொருதினுன். அவன் மாயா

யுத்தம் புரிந்தான். மாயாபதி விலக்கினர் அப்பொழுது லக்ஷ்மணன் அண்ணனிடம் அனுமதி பெற்றுப் பொருதத் தொடங்கினர். இராவணன் மற்றும் சில வீரர்களையும் அனுப்பி வைத்தான். மேகநாதனும் லட்சுமணனும் சண்டையிட ஆரம்பித்தனர். மேகநாதன் 'வீரகாதினி' என்ற சக்தியை விட்டான். இலட்சுமணன் மூர்ச்சையடைந்தார். மேகநாதன் அவரைத் தூக்க முயன்றன். ஆதிசேஷன், ஜகத்துக்கு ஆதாரமானவன், அனந்தன் அவரைத்தூக்க முடியுமா? மாலை ஆய்விடவே சண்டை நின்றது. அனுமான் தூக்கிவந்து லட்சுமணனைத்தர இராமர் மிகவும் வருந்தினர். பிறகு சுஷேனன் என்ற வைத்யன் வந்து, "லட்சுமணன் மூர்ச்சை தெளிய ஔஷதி வர வேண்டும்" என்று சொன்னன். அனுமன் கொண்டுவரச் சென்றார்.

காலநேமி கதை.

இதனிடையில் சமாசாரம் கேட்ட இராவணன் காலநேமி வீடு செல்ல சுஷேணனும் தன்னலான உபதேசத்தைச் செய்தான். அவன் கேட்காமல் நீ அனுமான் சஞ்சீவினி கொண்டு வராத வண்ணம் செய்யத்தான் வேண்டும் என்று உத்திரவிட்டான். காலநேமி இராமதூதன் கையால் சாவதே மேல் என்று நிச்சயம் செய்து ரிஷி வேஷத்தில் அனுமான் செல்லும் வழியில் தங்கினன் அனுமன் ஆசிரமம் சென்றார். தாகம் என்று சொல்ல மாயைக் குளத்தைக் காட்டினன் காலநேமி. ஜலம் அருந்தச் சென்ற போது அங்கே ஒரு பெண் முதலை காலைப் பிடிக்க அனுமான் அதைக் கொன்றார். ஒரு கந்தர்வப் பெண் தோன்றி காலநேமி

அரக்கன் என்று எச்சரித்துச் சென்றாள். அனுமான் திரும்பி வந்து காலநேமியை சம்ஹாரம் செய்தான்.

அயோத்தியில் அனுமான்.

சஞ்சீவினியை மலையுடன் கொண்டு அனுமான் திரும்பி ஆகாயத்தில் வரும்போது பரதன் அம்பு எய்ய அனுமன், "ராமா ராமா!" என்றலறிக் கீழே விழுந்தார். பயந்த பரதன் சமாசாரம் அறிந்து நேரம் அதிகமில்லாததால் தன் அம்பு முனையிலே அவரை இலங்கைக்கு அனுப்பி விட்டார்.

இராமன் துயரம்.

இங்கே ராமன் வாய்விட்டு அழுதுகொண்டிருந்தார், "மனைவிக்காகத் தம்பியை இழந்து அயோத்திக்கு எப்படிச் செல்வேன்? உன்னை உன் தாயார் என்னிடம் ஒப்புவித்தாளே! மனைவியைவிடத் தம்பி பெரியவன் இல்லையா!" என்று பலவாறு வருந்தும்போது அனுமான் வந்து சேர்ந்தார். லட்சுமணன் பிழைத்தெழுந்தார்.

கும்பகர்ணன் வதம்.

இதை இராவணன் கேட்டான். ஆத்திரப்பட்டான் கும்பகர்ணனை எழுப்பச் சொல்லி உத்தரவிட்டான் மிகவும் கஷ்டப்பட்டு அத் தூங்குமூஞ்சி எழுப்பப்பட்டான். இராவணன் தன் தம்பியிடம் கதையைச் சொன்னான். கும்பகர்ணனும், "ஜகன் மாதாவையா சிறை பிடித்தாய்?" என்று ஆத்திரப்பட்டு விட்டு இராமன் பெருமையை எண்ணிச் சண்டைக்குச் சென்றான். விபீஷணன் எதிரே சென்று

வணங்கினான். அவனை ஆசீர்வதித்தான் கும்பகர்ணன் "நீ அதிர்ஷ்டக்காரன் இராமனுக்கு வஞ்சனையில்லாமல் ஊழியம் செய்!" என்று புத்திமதி சொன்னான்.

முதலில் அனுமானுக்கும் கும்பகர்ணனுக்கும் சண்டை நடந்தது. அனுமான் மூர்ச்சையானார். அங்கதன் முதலியவர்களும் அப்படியே. கடைசியில் சுக்ரீவனையும் மூர்ச்சையாக்கி அவனை எடுத்துக் கொண்டு சென்றான்.

துளசி சொல்கிறார்: பரமசிவன் வாயால்:

உமா, கரத ரகுபதி நரலீலா
கேல கருட ஜிமி அஹிகண மீலா
ப்ருகுடி பங்க ஜிஹி காலஹிம் காயி,
தாஹி ஜஸி ஸோஹ லாயி
ஜகபாவன கீரதி விஸ்தாரஹிம்!
காய காய நர பவ நிதி தரஹிம்!!

"உமா, ரகுபதி மனிதன் வேஷம் போடுகிறார். கருடன் பாம்புடன் விளையாடுவது போல் விளையாடுகிறார். புருவத்தை நெறித்தால் காலனே மாளுவான். அவருக்கு இந்தச் சண்டை அழகா? - உலகத்தைப் புனிதமாக்கக் கீர்த்தியை விஸ்தாரம் செய்கிறார். அதைப்பாடிப் பாடி மனிதர்கள் பிறவிக் கடலைத் தாண்டுகின்றனர்."

நிற்க விழித்த சுக்ரீவன் கும்பகர்ணனின் முகத்தையும் மூக்கையும் கொத்திப் பிடுங்கிவிட்டு ஓடி வருகிறான். ஆத்திரமடைந்த கும்பகர்ணன் சேனையை அலற வைத்து விட்டான். இராகவனே எதிரே வந்தார். மிகப் பராக்ரமத்துடன் சண்டை செய்தான் கும்பகர்ணன். கடுமையான யுத்தத்துக்குப்

பிறகு இராமபிரான் கும்பகர்ணனைக் கொன்று அவன் தலையை இராவணன் தர்பாருக்கு அனுப்பி வைத்தார்.

தேவர்கள், வானரர்கள் எல்லாம் மகிழ்வெய்தினர் தேவலோகத்தில் வாத்யங்கள் முழங்கின. சண்டையில் அரக்கர் அழிவது எப்படி இருக்கிறதென்றால், துளசி சொல்கிறார்: நிஜமுக கஹே தர்ம ஜெஹி பாந்தி“ தன் வாயால் சொன்னால் தர்மம் அழிவது போல்! என்று

மேகநாதன் வதம்.

இராவணன் வருந்தினான். மேகநாதன் வந்து அவனைத் துயர் நீக்கி, “நாளை நான் செல்வேன்!” என்றான்.

மறுநாள் மேகநாதன் பிரசண்ட யுத்தம் செய்தான். நாகபாசத்தால் சகோதரர்களைக் கட்டினான். கோபம் கொண்ட ஜாம்பவான் எதிர்த்தார். மேகநாதன் மூர்ச்சையானான். இதனிடையே கருடனை நாரதர் அனுப்ப இராமபிரான் தம்பியுடன் எழுந்தார். மேகநாதனும் எழுந்தான் அஜய யக்ஞம் செய்ய மறைந்தான். லட்சுமணன் அவனுடன் சண்டை செய்யச் சென்றார். இராமன் அங்கதனையும் ஹனுமானையும் உடன் அனுப்பினார். யாகம் செய்யும் மேகநாதனை நடுவிலேயே சென்று வீரன் தாக்கினார். மீண்டும் யுத்தம் நடந்தது.

லட்சுமணன் ராமன் பிரதாபத்தை நினைந்து அம்பை விட்டார். மேகநாதன் அழிந்தான் அனுமான் அவனைத் தூக்கி இலங்கை வாசலில் கொண்டுவந்து போட்டுச் சென்று விட்டார்.

தேவர்கள் மீண்டும் ஆனந்தமெய்தி புஷ்பமாரி பொழிந்தனர். கேட்ட மந்தோதரி அலறிப் புடைத்து அழ ஆரம்பித்தாள். இராவணன் உபதேசம் செய்தானும். துளசி சொல்கிறார்: பிறருக்கு உபதேசம் செய்வதில் சமர்த்தர்கள் அநேகர். சொன்னபடி செய்பவர் தான் அரிது!

---

14. இராமன் வெற்றி.

மறுநாள் காலை:

இராவணனே வந்தான் சண்டைக்கு அவனுடன் பல வீரர் வந்தனர். பெரிய சேனை வந்தது மருதவேகம் என்ற ரதத்தில் அவன் அமர்ந்திருக்கிறான். இராமனுக்கு இரதம் இல்லை. விபீஷணன் வருந்தினான். ஸ்ரீ இராமன் சொன்னார்.

இந்த ரதமா வெற்றிகொள்ளும்? சூரத்தனம் வீரத்தனம் இரண்டு சக்கரங்கள்; பலம், ஞானம், தமம், பிறர் நன்மை இவை குதிரைகள்; பொறுமை கருணை அன்பு இவை கடிவாளங்கள்! ஈச்வர பஜனையே சாரதி. வைராக்கியம் கவசம்; சந்தோஷம் வாள். தானம் கோடாரி, புத்தி சக்தி, சிரேஷ்ட ஞானம் வில்; சம்யம் நியமம் அம்புகள். நிர்மலமான ஸ்திர மனது அம்பறாத் தூணி; சாதுக்கள் பாத பூஜை கவசம். இதல்லவோ வெற்றிக்கு வழி.

அங்கே இராவணன் குரங்குகளையும் கரடிகளையும் கொன்று குவித்தான். இலட்சுமணன் கோபங்கொண்டு எதிர்த்தார். இராவணன் மூர்ச்சையும் ஆனான். எழுந்த அவன் பிரும்மா தந்த சக்தியை ஏவினான். லட்சுமணன்

மயக்கமடைந்தார். இராவணன் தூக்க முயன்றான். முடிய வில்லை. இதை அறிந்த அனுமான் ஓடிவந்தார், இருவரும் குத்திக் கொண்டனர். இராவணன் மூர்ச்சையடைந்து எழுந்து அனுமானைப் புகழ்ந்தான். அனுமான், "என் பலத்தை நீ எழுந்து புகழ்கிறாயே! இழிவு!' என்று தன்னையே இழிந்து கொண்டு இலக்குவனைத் தூக்கிக்கொண்டு சென்றார். இராம னிடம் சென்று சற்று நேரத்துக்கெல்லாம் லட்சுமணன் விழித்தார்.

அங்கே விழித்தெழுந்த இராவணன் ஏதோ யாகம் செய்ய ஆரம்பித்தான். அதை அறிந்த விபீஷணன் இராம னிடம், "வானர வீரர்களை அனுப்புங்கள்" என்றான். யக்ஞம் அழிக்கப்பட்டது. அவனும், "நாம் அழிந்தோம்!" எனப் பயந்தான்.

இங்கே தேவர்கள் இராமபிரானிடம், 'எவ்வளவு நேரம் இந்தப் பொல்லா அரக்கனுடன் விளையாடுவது?" என்று சொல்ல இராமன் சரி என்று சிரித்துச் சொன்னார்.

மீண்டும் அரக்கர் சேனை வர ஆரம்பித்தது. இரத்த வெள்ளம் ஓட ஆரம்பித்தது. முண்டங்களும் அங்கங்களும் மிதக்க ஆரம்பித்தன. கழுகுகள் பூதங்கள் எல்லாம் பறந்து ஆட ஆரம்பித்தன.

இராவணன் மாயை புரிய ஆரம்பித்தான். இதனிடையே தேவேந்திரன் மாதலியைத் தேருடன் அனுப்பி வைத்தான். இராமன் அழகு பொருந்தத் தேர்மேல் ஏறிக்கொண்டார். இராவணன் மாயையால் அரக்கர் சேனையில் அநேக அங்கதர் களும் லட்சுமணர்களும் தோற்றம் அளித்தனர். இராமன்

மாயையை அறுத்து இராவணனுடன் நேருக்கு நேர் யுத்தம் புரிய ஆரம்பித்தார்.

இராவணன் "நீ செய்த துரோகத்துக்கெல்லாம் இன்று தண்டனை தந்துவிடுகிறேன்" என்றான்.

இராமன் சிரித்து "பாதிரி மரம் பூக்கும், பழுக்காது, மாமரம் பூக்கும் பழுக்கும். பலா பூக்காது பழுக்கும். மனிதர்களும் மூன்று விதமே. சொல்வர்; சொல்லிச் செய்வர், சொல்லாமலே செய்வர்..." என்று உபதேசம் செய்தார்.

ஆத்திரமடைந்த இராவணன் சண்டையிட ஆரம்பித்தான். அவன் சாரதியை அடிக்கக் கோபம் கொண்ட ஸ்ரீ ராமன் இராவணன் சாரதியைக் கொன்றார், தேரை உடைத்தார். பரத்ரோஹம் நினைக்கும் மனிதன் முயற்சிபோல் இராவணன் அம்புகள் வீணாயின.

இராமனோ இராவணன் தலைகளை அறுத்தார். முளைத்தன. மீண்டும் அறுக்க மீண்டும் முளைத்தன; ஆவல் பூர்த்தி செய்யச் செய்ய மீண்டும் மீண்டும் முளைப்பது போல்!

இதனிடையே இராவணன் தம்பியின் மேல் ஒரு சக்தியை ஏவினான். இராமன் விபீஷணனைத் தள்ளிவிட்டுத் தான் ஏந்தினார் அதை மார்பில். மயங்கி நின்றார்.

விபீஷணன் ஆத்திரப்பட்டான் அண்ணனை அடிக்க ஓடினான். அனுமானும் வந்தார். அனுமானுக்கும் இராவணனுக்கும் சண்டை மூண்டது. கோபமடைந்த இராவணன் குரங்குகளைக் கொன்று குவித்தான்.

எல்லா வானரங்களும் ஒருங்கே சேர்ந்தன. இராவணன் மீண்டும் மாயை செய்தான். எங்கு பார்த்தாலும் ஒரே இராவண மயம். வானரர்கள் பயந்து ஓட ஆரம்பித்தனர்.

இராமன் சிரித்தவாறே மாயையை ஒடித்தார். தேவர்கள் ஆனந்தமெய்தினர். அவர்களிடம் கோபம்கொண்ட இராவணன் ஆகாயத்தில் பாய்ந்தான். அனுமானும் அங்கதனும் அவனைப் பூமியில் இழுத்து நிறுத்தினர். மீண்டும் சண்டை மூள வானர வீரர்கள் மூர்ச்சை அடைந்தனர். மீண்டும் எழுந்தனர்; ஜாம்பவான் உதையால் மயங்கின இராவணனைச் சாரதி அழைத்துச் சென்றுவிட்டான்.

அன்று இரவு திரிஜடை சீதையிடம் சென்றாள். சீதையோ எல்லாம் கேட்டு அழுதாள். திரிஜடை சொன்னாள் : இராவணன் உள்ளத்தில் நீ இடைவிடாமல் வாசம் செய்கிறாய். அதனால் இராமச்சந்திரன் அம்பை மார்பில்விடப் பயப்படுகிறார். தலையை அறுக்குமட்டும் அவன் சாகமாட்டான், மார்பில் அம்பு எய்தால்தான் அந்த அரக்கன் சாவான்" என்றாள்.

"ராவணன் உள்ளத்தில் சீதை; அந்தச் சீதை உள்ளத்தில் நான். பிர்மாண்டமே அழிந்துவிடுமே நான் சீதையின் மேல் அம்பு எய்தால்!" என்று பயப்பட்டாராம் இராமர்!

இராவணன் விழித்து சாரதியைக் கோபித்துக்கொண்டான், மறுநாள் மீண்டும் போர் தொடங்கிற்று. மீண்டும் மாயை புரிந்தான் இராவணன். இராமன் அதை அறுத்து நீக்கினார்.

இராவணன் சாகிற வழியாயில்லை. இராமன் விபீஷணனைப் பார்த்தார். விபீஷணன் அவன் நாபிகமலத்தில் அமுதம் இருக்கிறது என்றான்.

இராகவன் சிரித்து நாணைக் காதுவரை இழுத்து இருபத்தோரு அம்புகள் விட்டார். ஒரு அம்பு நாபிகுண்டத்தை

வற்றவைத்தது. மற்ற இருபதும் தலைகளையும் புஜங்களையும் அறுத்துச் சென்றன. அவைகள் மந்தோதரி எதிரே சென்று விழுந்தன.

இங்கே முண்டம் குதிக்க ஆரம்பித்தது.

கணவனின் தலைகளைப் பார்த்து மந்தோதரி தலைவிரி கோலமாய் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு "ஐயகோ நாதா!" என்று அரற்ற ஆரம்பித்தாள் இராவணன் பராக்ரமச் செயல்களை எல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொல்லிச் சொல்லி அழுதாள். "வந்தவன் மனிதனே அல்ல மனித உருவில் ஹரியே ஆவர்!" என்றாள்.

பிறகு இராவணனுக்கு மந்தோதரி முதலியவர்கள் திலாஞ்சலி கொடுத்தார்கள். விபீஷணனும் அழுதான் இராமபிரான் ஆறுதல் கூறினார்.

விபீஷணனுக்கு மகுடம் சூட ஏற்பாடு ஆயிற்று. இராமன் வானரங்களைக் கூட்டி, உங்கள் பெருமையாலும் உதவியாலும் தான் இந்தக் காரியம் நடந்தது. விபீஷணன் அரசு எய்தினான்! என்று வந்தனம் செலுத்தினார்.

சீதை வருகிறாள்.

பிறகு இராமபிரான் அனுமானைக் கூப்பிட்டு சீதையைச் சென்று பார்த்து வா என்றார்.

அனுமன் ஆனந்தமாய்ச் சென்றார் ஆகா! இதைவிடப் பெருமையான வேலை என்ன கிடைக்க முடியும்? சென்று சீதையை வணங்கினார். சீதை வரத்துடிக்கவே அனுமான் சென்று இராமபிரானிடம் சொன்னார். உத்தரவு விபீஷணனுக்கு அளிக்கப்பட்டது.

நல்ல அலங்காரம் செய்து சீதை இராமனை எண்ணிய வாறே பல்லக்கில் ஏறினாள். பார்ப்பதற்குக் குரங்குகள் நெரித்தன. அங்கரக்ஷகர்கள் தடுத்து விரட்டினர். இதைக் கேட்ட இராமபிரான், "சீதையைக் கால்நடையாகவே அழைத்து வா" என்றார்.

குரங்குகள் காடிகளுக்கெல்லாம் ஒரே ஆனந்தம்.

வந்த சீதையிடம் இராமன் ஏதோ 'துர்வாதம்' செய்தார் என்கிறார் துளசி. லோகமாதாவை லோக பிதா சொல்லலாம். தாம் தன் வாயால் சொல்லலாமா?

சீதை லட்சுமணனிடம், "மூட்டு தீயை!" என்று உத்தரவு தந்தாள். சீதை, "நான் திரிகாண சுத்தியாய் இராமனையே நினைந்திருந்தால் அக்னியே! நீ குளிர்வாயாக!" என்றாள்; குதித்தாள் நெருப்பில்.

அக்னி பிராமணன் வேஷம் தரித்து சீதையை அழைத்துக்கொண்டு வந்து இராமபிரானிடம் ஒப்புவித்தார். சீதையுடன் சேர்ந்த இராமபிரான் அதிக அழகு எய்தினர்! என்கிறார் வைஷ்ணவரான துளசிதாஸர்.

தேவர்கள் வந்தனர்; ஏற்றிப் போற்றினர். பிரும்மா வந்தார் துதித்தார். சித்தர்கள் முனிவர்கள் எல்லோரும் ஆனந்தம் எய்தி பரமனைப் பலவாறு துதித்தனர். அப்பொழுது தசரதனும் இராமனிடம் வந்தார். இராமன் அவரை வணங்கினர்.

தசரதன் இராமன் பையன் என்று எண்ணியபடியால் மோக்ஷம் அடையவில்லை. தசரதன் இராமனை வேண்டித் துதித்து விட்டுத் தன் உலகம் போய்ச் சேர்ந்தார்.

இந்திரன் வந்தான் துதித்துப் புகழ்ந்தான். "தங்கள் பக்தியே வேண்டும் எனக்கு. என் கர்வம் தொலைய அருள் புரிந்தீர்கள் தாங்கள்" என்று வேண்டினன். இராமனும் இந்திரனுக்குப் பெருமை தரவேண்டி, "இறந்த வானரங் களை எழுப்பித்தா! என்றார். இந்திரன் அமுதம் தெளிக்க எல்லோரும் எழுந்தனர். அரக்கர் எழவில்லை, அவர்கள் சண்டையிடும் போது இராமனையே எண்ணி இராம மயமாகி யிருந்தனர். அவர்கள் பிர்மலோகம் சென்று விட்டனர்.

பரமசிவனும் வந்தார்; பரமனை ஏற்றிப் போற்றினார்.

தேவர்கள் சென்ற பிறகு விபீஷணன் இராமபிரா னிடம் வந்து வீட்டைப் புனிதமாக்க வேண்டும் என்று வேண்ட இராமன் "எனக்கு பரதன் ஞாபகம் வந்துவிட்டது. இனிக் கணம் கூடத் தாமதிக்கக்கூடாது" என்று சொல்லி புறப்படத் தயாரானார்.

விபீஷணன் சென்று புஷ்பக விமானத்தை அலங்கரித் துக்கொண்டு வந்தான். இராமன் ஆணைப்படி மேலே இருந்த படி மணிகளையும், வஸ்திரங்களையும் விலையுயர்ந்த நகைகளையும் தூவினன். கீழே இருந்த எல்லோரும் வேண்டியதை வேண் டியவாறு எடுத்துக் கொண்டனர். வானரர்களுக்கும் கரடி களுக்கும் வந்தனம் செலுத்தினார் ஸ்ரீ ராமபிரான். "அவர்கள் எங்களை இப்படி நீங்கள் சொல்லலாமா" என்று வணங்கித் துதித்தனர்.

பிறகு புஷ்பக விமானம் கிளம்பிற்று. எல்லாரும் வர விரும்பினர் என்று அறிந்த ராமபிரான் எல்லாரையும் விமா னத்தில் ஏற்றிக்கொண்டார்.

சீதைக்கு சண்டைக் களத்தில் இடங்களை எல்லாம் காட் டிக்கொண்டே சென்றார் ஸ்ரீ ராமபிரான். வனத்திலும் தான்

சென்ற இடங்கள், தங்கின இடங்கள் எல்லாவற்றையும் காட்டினார். தண்டக வனத்தில் அகஸ்தியர் முதலிய ரிஷிகளையும் சந்தித்தார்.

பிறகு சித்ரகூடம்வந்து சேர்ந்தது விமானம். மீண்டும் கிளம்பி பிரயாகை வந்து சேர்ந்தனர்.

அங்கே அவர் அனுமானை அழைத்து "நீ சென்று பரதனிடம் நாம் வருவதைச் சொல்," என்று அனுப்பினார். அனுமன் சென்றார்.

பிரபு பரத்வாஜரிடம் சென்றார். நமஸ்காரம் செய்து விட்டு மீண்டும் கிளம்பிக் கங்கைக்கரை வந்தார். கங்கையில் ஸ்நானம் செய்தார்கள் எல்லோரும். கங்காதேவி ஆசீர்வதித்தாள்.

குகன் ஓடி வந்தான். அவனையும் அழைத்துக்கொண்டு எல்லோரும் புறப்பட்டனர்.

இராமன் வெற்றியைப் படிக்கிறவர்கள் உலகில் எல்லா நன்மையையும் அடைவார்கள். கலிகாலம் பாபத்தின் இருப்பிடம். அதில் ஸ்ரீ ராமனை விட்டால் வேறு ஆதாரமில்லை.

இங்கே முடிகிறது லங்கா காண்டம்.

இந்த காண்டத்தின் கதையில் யுத்தத்தைத் துளசி தன் இஷ்டம்போல் சொல்லிப் போகிறார்.

இராவணன் உள்ளத்தில் சீதை இருப்பதைக் கம்பன் சூர்ப்பநகை வந்து சொன்னபோது இராவணன் "தம் மனதுக்குள்ளே வைத்தான்" என்றார்.

மீண்டும் நிந்தனைப் படலத்தில் (சுந்தர காண்டத்தில்) 'ஈதுரைத் தழன்று பொங்கி.......என்ற 73ம் பாட்டில்

'போதரிக் கண்ணிஞளே யகத்து வைத்து உரப்பிப்போஞன்' என்று சொல்லி உள்ளே இருந்தாள் என்பர்.

மீண்டும் இதையே வலியுறுத்த

வெள்ளெருக்கஞ்சடை முடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலுங்கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி யுயிரிருக்குமிடம்
நாடி இழைத்தவாறே
கள்ளிருக்கு மலர்க்கூந்தல் சானகியை மனச்
சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதியுடல் புகுந்து தடவி
யதோ ஒருவன் வாளி.

என்ற பாட்டிலும் கூறியுள்ளார்.

துளசி இந்தக் கருத்தை ஆதரித்து மேலும் தொடர்ந்து "அந்த சீதைக்குள் நானும் எனக்குள் அண்ட சராசரமும் இருப்பதால்......" என்று அஞ்சி இராமன் மார்பில் அம்புவிட அஞ்சுகிறுர் என்று குறித்தது நோக்கற்பாலது.

அதிலும் விசேஷம்: இரு கவிகளும் அதைப் பிறர் வாயிலாகவே ஐயுற்றுச் சொல்லவைப்பதுதான்.

உத்தர காண்டம்

15. "ராமராஜ்யம்".

காட்சி அயோத்தியில் ஆரம்பிக்கிறது. குறித்த காலத்துக்கு ஒரு நாள் மிச்சம். நகரவாசிகள் பரபரக்க ஆரம்பித்தனர். நற்சகுனங்கள் ஏற்பட்டும் பரதன் கவலே கொள்ள ஆரம்பித்துவிட்டான். அந்த சமயம் ஹனுமான் பிராமண

வேஷத்தில் வந்து சேர்ந்தார். தர்பாசனத்தில் அமர்ந்து இளைத்து இருக்கும் பரதன் ஆனந்தத்துடன் எழுந்து ஹநுமானை வரவேற்றார். வருகிறார் என்ற சமாசாரம் தெரிந்ததும் தாகமடைந்தவன் அமுதம் பெற்றாற்போல் மகிழ்ச்சி அடைந்தான். ஹநுமன் திரும்பிவிடவே பரதன் நகரத்துக்கு வந்தான். மக்கள் ராணிகள் எல்லோரும் ஆனந்தம் கொண்டனர். வரவேற்பு ஏற்பாடுகள் நடக்க ஆரம்பித்தன. விமானம் வந்தது.

இராமன் குரங்குகளுக்குக் காட்டினார் நகரை மேலேயிருந்து. 'வைகுண்டம் கூட அவருக்கு இவ்வளவு பிரியமில்லை.' கீழே இறங்கிய பிறகு இராமபிரான் விமானத்தை குபேரனிடம் செல் என்று அனுப்பிவிட்டார்.

குருமார்களை வணங்கிய பிறகு ஸ்ரீ இராமச்சந்திரன் பரதனை அணைந்தார். இருவரும் (ஜனு ப்ரேம அரு சிங்கார தனு தரி மிலத வர சுஷ்மா லஹரி) அன்பும் அணியும் அழகு பெற்றுச் சேர்ந்ததுபோல் சேர்ந்தனர் என்கிறார் துளசி. பிறகு ஸ்ரீ ராமன் சத்ருக்னனை விசாரித்தார். பட்டணவாசிகள் எல்லாரிடமுமே அதே விதம் அதே க்ஷணம் கூடிப்பேசினார். பிறகு இராமன் தாய்மார்களை வணங்கினார். கைகேயி சங்கோசத்துடன் வணக்கத்தை ஏற்றுக்கொண்டாள். தாய்மார்கள் எல்லாம் ஆரத்தி எடுத்துத் திருஷ்டி கழிக்கிறார்கள். அரக்கரை வெல்வதென்றால் லேசா!

பிறகு ஸ்ரீ ராமபிரான் தங்கள் சகாக்களை எல்லாம் அழைத்து குலகுருவான வசிஷ்டபிரானிடம் காட்டி அவர்கள் உதவியை விவரித்தார்.

எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டு ஸ்ரீ இராம பிரான் முதலில் கைகேயியின் அரண்மனைக்குச் சென்று அவள் மனம் மலரப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தன் இருப்பிடம் சென்றார்.

வசிஷ்டர் இன்று நாள் நல்லதென்று சொல்ல முடி சூட்டு விழாவுக்கு ஏற்பாடுகள் தொடங்கின.

இராமன் தன் கையாலே பரதனுடைய ஜடையை நிவாரணம் செய்தார். சுக்ரீவன் முதலியவர்களை ஸ்நானம் செய்வித்தார். மூன்று சகோதரர்களையும் ஸ்நானம் செய்வித்துப் பிறகு தான் ஸ்நாநம் செய்து அலங்காரம் செய்து கொண்டார்.

சிம்மாசனத்தில் அமர்ந்தார் ஸ்ரீ ராமபிரான். இடது பக்கத்தில் ஸ்ரீ சீதாபிராட்டியார் அமர்ந்தார்.

வேதமந்திரங்கள் கோஷித்தன. தேவர்கள் எல்லாம் வந்தனர். வசிஷ்டர் முதலில் பொட்டு இட்டார். பிறகு எல்லா பிராமணர்களும் இட்டனர்.

தாய்மார்கள் கண்டு கண் குளிர்ந்தனர்.

இராமன் அழகும் சீதையின் சோபையும் வர்ணிக்கத் தகுமோ! சேஷனும் வேதமும் வர்ணிக்கலாம். சிவன் சுவை அறியலாம்!

துதிப் படலம்.

நான்கு வேதங்கள் வந்தன. இராமபிரானை ஏற்றித் துதித்தன.

சாமவேதம் அவர் உருவத்தைப் புகழ்ந்தது.

யஜுர்வேதம் அவர் சக்தியைச் சொல்லிற்று.

அதர்வணவேதம் அவருடைய பக்தவத்ஸலத் தன்மையை வணங்கிற்று. ருக்வேதம் அவருடைய விபூதியான இந்த உலகத்தை மரமாக உருவகப்படுத்திச் சந்தோஷப்பட்டது.

பிறகு சம்பு வந்தார். துதித்து ஏற்றிப் பக்தி வேண்டும் என்று வேண்டிச் சென்றார்.

பட்டாபிஷேகப் பலனைச் சொல்கிறார் துளசிதாஸர்.

விருப்பம் எதுவும் கொண்டு இந்தக் கதையைச் சொல்பவர்கள் கேட்பவர்கள் எல்லா சுகத்தையும் அடைவர். நான் நன்மை செய்யும் இந்தக் கதையைக் கீர்த்திக்காகவும், துன்பம் நீங்கவும், வைராக்யம் விவேகம் பக்தி வரவும் சொன்னேன் என்கிறார் காகுப சுண்டி.

வேண்டியவர் வேண்டிய அளவு பெற்றனர் தானம். எல்லா விதத்தாலும் மக்கள் ஆனந்தம் கொண்டனர்.

குரங்குகள் ஊரையே மறந்து விட்டன; "பரத் ரோஹ சந்த மன நஹிம்: "பிறருக்குத் தீங்கிழைக்க சாதுக்கள்' எண்ணுவாரோ? அதேபோல் வானரங்கள் தங்கள் ஊரை மறந்தனவாம்!

இராமபிரான் அவர்களை அழைத்தார். தன் அன்பை வெளிப்படுத்தி, "இனி நீங்கள் வீடு திரும்ப வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். பிறகு பரதன் கையால் சுக்ரீவனுக்கு ஆடை அணிவித்து சன்மானம் செய்வித்தார். இலட்சுமணன் விபீஷணனுக்குச் சன்மானம் செய்தார்.

அப்பொழுது அங்கதன், "நான் எங்கே போவேன்! உங்கள் பாதாரவிந்தத்தில் தான் சேவை செய்வேன்! எந்த வேலையையும் இழிவு என்று எண்ணாமல் செய்வேன்!" என்று

காலில் விழுந்து அழுதான். இராமன் அவனுக்கு உபதேசம் செய்து அனுப்பி விட்டார்.

அப்பொழுது ஹநுமான் சுக்ரீவன் காலில் விழுந்து வேண்ட அவன் 'சரி உன் இஷ்டப்படி போ, நீ இராமபிரானுக்குக் கைங்கர்யம் செய்!' என்று அநுமதி தந்தான்.

பிறகு ஸ்ரீ இராமபிரான் குகனை வரவழைத்தார். அங்கே தான் த்வம் மம சகா, பரத சம பிராதா! நீ என் சிநேகிதன் பரதனுக்கு சமமான சகோதரன் என்றார். முதலில் கிடைத்தவன் குகன். சுக்ரீவன் பிறகு கிடைத்தவன், விபீஷணன் சத்ருக்னனைப்போல் கிடைத்தவன் என்ற பொருள் கிடைக்கிறது.

"குகனொடும் ஐவரானோம் முன்பு, பின்பு குன்று சூழ்வான்
மகனொடு மறுவரானேம், எம்முறை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானேம்"

என்ற செய்யுளின் பொருளும் இதில் ஒலிக்கிறது. அவனுக்கும் பிரியா விடை தந்து அனுப்பினார் பிரபு.

இராம ராஜ்யம் நன்கு நடந்தது. சரீர, பூத, தைவீகச் சங்கடங்கள் ஒன்றும் ஏற்படாமல் அவரவர் தம் தர்மத்தைச் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தனர். ரோகம் அல்பமிருத்யு, தரித்திரம் ஒரு கொடுமையும் அங்கே தலை காட்டவில்லை.

சீதாபிராட்டி கணவன் மனப்படி நடந்தார். அரண்மனையில் எவ்வளவோ வேலைக்காரர்கள் இருந்த போதும் அவள் தன் வேலையையும் பதி சுச்ரூஷையும் தானே செய்தாள்.

சகோதரர்கள் எல்லா விதத்தாலும் இராமபிரானுக்கு உதவியாகச் சேவை புரிந்தனர்.

சீதைக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். லவன் குசன் என்ற பெயர் வைத்தனர் அக்குழந்தைகளுக்கு. மற்ற சகோதரர்களுக்கும் இரண்டிரண்டு குழந்தைகள் பிறந்தன.

இராமபிரான் காலையில் அரசவை சென்று மந்திரிகள் குருக்கள்மாருடன் அரசகாரியம் பார்ப்பார். நடுப்பகலில் சகோதரர்களுடன் போஜனம் புரிவார். தாய்மார்கள் ஆனந்தம் அடைவர்.

பரதனும் சத்ருக்னனும் அனுமானைத் தோட்டத்துக்கு மாலையில் அழைத்துச் சென்று இராம கதையைச் சொல்லச் சொல்லிக் கேட்டு ஆனந்திப்பர்.

நாரதாதி முனிவர் வருவர். இராமபிரானைத் தரிசிப்பர். வாழ்க்கையின் பயனைப் பெற்றுச் செல்வர்.

நகரின் அழகைத்தான் வருணிப்பது எவ்விதம்? ராம நாதன் இருந்து அரசுபுரியும் நகர் பொலிந்து விளங்கக் கேட்பானேன்! மக்கள் அங்கங்கே இராமபிரான் கதையைப் பாடியும் சொல்லியும் கேட்டும் மகிழ்ந்தனர்.

ஒருமுறை சனகாதியர் வந்தனர். அன்பு செலுத்திச் சென்றனர்.

ஒருதடவை பரதன் ஸ்ரீ ராமபிரானிடம் வினயமாக சாதுக்களுடைய குணம் என்ன என்று கேட்க இராமபிரான் திருவாய் மலர்ந்தருளினர்.

"சந்தனம் போன்றவர் நல்லவர்கள். வெட்டும் கோடாலி வாய்க்கும் மணம் தருவர் அவர். சந்தனம் அதனால் தான்

தேவதைகளுக்குப் பிரீதியாக உபயோகப்படுகிறது. அந்தப் பாபத்துக்குத் தான் கோடாரிவாய் நெருப்பில் காட்டப்பட்டு அடிக்கப்படுகிறது.'' என்றெல்லாம் நல்லவர்களுடைய, தயவு, கருணை பிறருக்கு நன்மை செய்யும் குணம் எல்லாம் சொல்லி அதற்கு எதிராக பாத்ரோஹம், பரதாரகமனம், பரதனக்ரஹணம், பரநிந்தனை செய்யும் கெட்டவர்களுடைய குணத்தையும் விவரிக்கிறார். இப்படிப் பட்டவர்கள் கலியுகத்தில் அதிகமாவார்கள்! என்றும் குறித்திருக்கிறார்.

பிறகு ஒரு முறை பிராமணர்கள் எல்லோரையும் அழைத்து உபதேசம் செய்தார்.

ஒருமுறை பட்டணவாசிகளை அழைத்து சிவ பூஜை மஹிமையை விவரித்தார்.

இப்படியாக சிவபிரான் இராம கதையை விவரித்து முடித்தார்.

இவ்வளவுடன் இராமாயணம் முடிகிறது.

பிறகு உத்தரகாண்டத்தில் பார்வதி தேவி சிவபெருமானிடம் ஆயிரம் மனிதரில் ஒருவர் தர்மவிரதம் கொண்டவனாக இருப்பார். கோடியில் ஒருவர் வைராக்யவானாயிருப்பர். கோடி வைராகிகளிடையே ஒருவர் ஞானசீலனாவார். கோடி ஞானிகளிடையே ஒரு ஜீவன்முக்தன் கிடைப்பான். இந்த நிலையில் ஒவ்வொருவரும் கிடைப்பது அரிது. எல்லாவற்றையும் விட இராம பக்தி கிடைப்பது அரிதாயிற்றே. அந்த பக்தி காக்கைக்கு எப்படிக் கிடைத்தது? என்று கேட்க காகுபசுண்டியின் கதை விவரிக்கப்படுகிறது. கலிகாலத்தின் கொடுமைகள், ஆசாரங்கள் நலிவுறுதல் எல்லாம் விபரமாகச் சொல்லப்படுகின்றன.

ஆகவே அங்கேயே நாம் இராமாயணக் கதை முடிந்த தாகக் கொள்ளலாம். பிற்பகுதிக் கதையில் வர்ணுசிரம தர்மத்தைப் பற்றியும் மற்றும் பல தர்மங்களைப் பற்றியும் விபரமாகக் கூறப்படுகிறது. ராம நாம மஹிமை பக்தியின் அவசியம் எல்லாம் விபரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே இதனுடன் கதையை முடித்துத் துளசியின் கலைச் சிறப்பைப் பற்றி ஓரிரு வார்த்தை சொல்லலாம்.

---

16. பின்னுரை

அவர் சொல்லும் கதை பழக்கமான இராமாயண கதைகளிலிருந்து சற்றே வேறு படுகிறது. உத்தரகாண்டக் கதையில் இராமன் சப்பந்தமான கதை அப்படியே காணும்.

இராமனைப் பரம்பொருளாகக் காண்பதாலும் தாஸ்ய பாவத்தில் பக்தி செய்வதாலும் இராமன் குணத்துக்குக் குறை வாாமல் கதை சொல்கிறுர். பாதன் குணசித்திரமும் குகன் கைங்கர்ய புத்தியும் இலட்சுமணன் குணமாற்றமும் இதற்கு எடுத்துக் காட்டு.

கதைக்கு விறுவிறுப்பும் நாடக இயலும் தருவதற்காக பாசுராமன் வரும் இடத்தை மாற்றி கோபத்துக்கும் துடுக்குக்கும் மோதல் ஏற்படுத்தி ரசம் பெய்யச் செய்கிறுர்.

அங்கதன் இரவணன் சம்வாதம் அவர் நாடகசக்திக்கு மற்றும் ஓர் எடுத்துக் காட்டு.

வர்ணனைகளில் மரியாதைக்கு பங்கம் வாாமல் மரியாதையைக் காப்பாற்றுவதில் மிகவும் உன்னிப்பாயிருக்கிறுர். அங்கவர்ணனைகள் அதற்கு உதாரணம்.

பெண்கள் சஞ்சல புத்தியுடையவர்கள், அதட்டி ஆளப் படவேண்டியவர்கள் என்று எண்ணிய போதிலும் தர்ம சீலயாய் பதிவிரதையாய் இருக்கும் பெண்களைத் தலைமேல் தாங்கி வாழ்த்துகிறார்.

அநேக நீதிகளை அநாயசமாய்ச் சொல்லிச் செய்கிறார்.

சிவனுக்கு ஏற்றம் தந்து சிவ வைஷ்ணவ விரோதத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்திருக்கிறார்.

வார்த்தைகளுக்கு தன் சாதுர்யத்தால் புதக்கருத்தைத் தந்து குறைந்த வார்த்தைகளில் பெரிய விவரணம் தரும் அவர் முயற்சியும் வெற்றியும் பாராட்டத்தக்கன.

கெடுதல்களைக் குறைத்து நல்ல பண்புகளை அடிக்கடி சொல்லியும் எடுத்துக் காட்டியும் திருத்துவதில் நம்பிக்கை கொண்டவர் ஆதலால் ராக்ஷஸர்கள் வர்ணனையைக் கூடக் குறைத்து விடுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக பக்தியைப் பரப்புவதற்கு ஆழ்ந்த நம்பிக்கையுடன் இந்த நூல் எழுதப் பட்டிருப்பதாலும் வர்ணாசிரம தர்மத்திலும் இந்து மதத்திலும் நம்பிக்கை கொண்டவராதலாலும் இந்நூல் சிறந்து வேத சாரமாக விளங்குகிறது. சாதாரண லோக தர்மங்களில் கூட வழுவாமல் இராமன் தோட்டக்காரர்களைக் கேட்டு பூப்பறிப்பதும், குரு தூங்கிய பிறகு தூங்குவதும், எஜமானன் சொன்னதற்கு மேல் செய்ததால் அனுமான் வெட்கினான் என்று சொல்வதும் சிறந்த லோக தர்மங்கள்.

தவிரவும் பல கிரந்தங்களைப் பார்த்தும் படித்தும் சாரத்தை எடுத்து அங்கங்கே சேர்த்திருப்பதனால் எல்லா

நூல்களுடைய சாரமும் இதிலே ஒருங்கே கிடைக்கிறது. கம்பர் ராமாயணத்தைக் கூடக் கேட்டிருப்பார் என்ற ஒரு தைரியமான எண்ணமும் தோன்றும்படி இது அமைந்துள்ளது. தசரதனுக்கு மோக்ஷம் இல்லை என்ற சுவாரசியமான சமாசாரம் முதல் நூல்களில் காணப்படாமல் வைணவர்களுள் கர்ண பரம்பரையான ஒரு வியாக்யானமாயிருக்க அந்தக் கருத்தையும் துளசி நூலில்காணும் போது நமக்கு ஒரே விம்மிதமாயிருக்கிறது!

இந்த நூல் வடநாட்டில் தர்ம கிரந்தமாக மதிக்கப்பட்டு போற்றப்பட்டும் பூஜிக்கப்பட்டும் வருகிறது. வியாசர்களும் ராமாயணிகளும், கதாவாசகர்களும் பாடியும் பொருள் சொல்லியும் விரிவுரை விழா நிகழ்த்தியும் பரப்பி வருகின்றனர்.

முன்னூறு வருஷங்களுக்கு முன் வேணீ கவி என்றவர், "துளசி என்ற ஒருவர் எழுந்து இந்த நூலை ஆக்கித்தராத போனால் நாம் வேதம் என்ன கண்டோம், பக்தி என்ன கண்டோம்! நல்லவர் கெட்டவர் என்ற பாகுபாடு தான் என்ன கண்டோம்?" என்றார்.

ஆங்கிலேயர் ஒருவர் துளசி ராமாயணம் பொது மக்களின் நீதி நெறி நூல் என்று கூறுகிறார்.

மொத்தத்தில் இது மக்களுக்கு ஒரு அறிவுப் பொக்கிஷம்; தர்மச்சுனை. இம்மை மறுமை இரண்டுக்கும் சிறந்த வழி காட்டி நூல். எல்லோரும் படித்துப் பயனுறல் வேண்டும்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
23	17	காமோட்டி	காமேட்டி
35	2	பாமேபாமே	பரமேபரமே
38	6	வண்டுமிவை வ	வண்டுமிவை
41	9	பேதமை	பேதைமை
42	10	கமஸ்காரம்	நமஸ்காரம்
54	12	— யிருந்தான்	— யிருந்தால்
58	7	தரு மரு	தமரு
68	16	போலவுச்	போலவும்
72	3	கைகேயின்	கைகேயியின்
89	10	நல்வகை	நல்வரை
95	20	குனித்து	குறைத்து
109	10	என்றெல்லம்	என்றெல்லாம்
110	15	அரத்கன்	அரக்கன்.
112	8	துயருகிறேன்	துயருறுகிறேன்
144	5	அனாயயுாமாய்	அனாயாசமாய்
,,	,,	செய்கிருர்	செல்கிருர்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ______